பதிவு இலக்கம் : 105267
தமிழின் முதல்தர
வார இதழ்
# தீபம்
www.deepamtv.asia
05.01.2020 இதழ் - 210




வாசகர்கள், படைப்பாளிகள்,
விளம்பரதாரர்கள், விநியோகத்தர்கள்
அனைவருக்கும் தீபம் குடும்பத்தினரின்
புத்தாண்டு வாழ்த்துக்கள்.

2020





## மாளாத் துயரமும் நீளும் தேடலும்

## போதகரை அறைந்த தேரர்



## பழைய கட்சிகளின் புதிய கூட்டு



## மாற்றுத் தலைமையாகுமா?



## முடிந்த ஆண்டின் அரிய நிகழ்வு

அனைவருக்கும்
எமது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அனுமதி பெற்ற சாரதிப்பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம் : இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 221 7578, 021 221 7678
077 614 0361, 077 722 6247



HOTLINE : 077 722 6247

ஓடக்கரை வீதி, சங்கானை.
021 225 1664, 070 301 3016
கே.கே.எஸ் வீதி, மல்லாகம்.
021 224 3393, 070 301 3014
வங்களாவடிச் சந்தி, வேலணை.
021 221 5472, 070 301 3012
கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு.
070 255 4135
இல.281C, மணிக்கூட்டுகோபுர வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8004, 070 301 5004
பழைய கண்டி வீதி (பிரதான வீதி)
காரைநகர்.
021 225 2454, 070 510 2484
E-mail : sasikadrivingschool@gmail.com Web : sasikalearners.com

இது தமிழ்பேசும் மக்களுக்கான தனித்துவமான பத்திரிகை




## உலகத்தில்...

- உலகிலேயே மிக நீளமான வீதி அமைந்துள்ள இடம் எது? அலாஸ்கா
- உலகிலேயே மிகப் பழைமையான தேசப்படத்தை வரைந்தவர் யார்? தொலமி
- உலகிலேயே மிகப் பிரபலமான விஞ்ஞான சஞ்சிகை எது? நேச்சர் 35
- ஆசியாவில் உள்ள கிறிஸ்தவ நாடு எது? பிலிப்பைன்ஸ்
- உலகில் எரிமலை இல்லாத கண்டம் எது? அவுஸ்ரேலியா
- உலகில் மிக உயரத்திலுள்ள ஏரி எது? டிடிக்காகா
- உலகில் மிக உயரமான அணை எது? போல்டர் அணை
- உலகிலேயே மிகப் பழைமையான கம்யுனிஸ நாடு எது? சீனா
- உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு எது? இந்தியா
- உலகில் அதிக மக்களால் பேசப்படும் மொழி எது? மாண்டரின்(சீனா)
- உலகில் அதிகளவில் அச்சிடப்படும் நூல் எது? பைபிள்
- கடல்மட்டத்திற்கு கீழே உள்ள நாடு எது? நெதர்லாந்து
- உலகில் ஆறுகளே இல்லாத நாடு எது? சவுதி அரேபியா
- உலகில் மிகப் பெரிய இஸ்லாமிய நாடு எது? இந்தோனேசியா

மணிவண்ணனுக்கு சந்தோஷமாக இருந்தது. மதுரையிலிருந்து வந்த அவன் மாமா அவனுக்கு ஒரு பேனாவை அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார்.
மணிவண்ணன் இப்படி ஒரு பேனாவைப் பார்த்தது கூட கிடையாது.


இவன் வகுப்பில் படிக்கும் செல்வந்தர் மகனிடம் கூட இப்படிப்பட்ட பேனா இல்லை. பேனாவின் மூடியும், முள்ளும் தங்கம் போல பளபளவென்றிருந்தது.

பள்ளிக்கூடம் போனதும் பேனாவை எல்லோரிடமும் காட்டினான்.

மாமா இவன் மீது மிகவும் அன்பு வைத்திருந்தார். வகுப்பில் முதல் மாணவனாகவும் ஒழுக்கமானவனாகவும் விளங்கிய மணிவண்ணனை உற்சாகப்படுத்த விரும்பினார் அவன் மாமா. "நீ படித்து பெரியவனாகி என்ன வேலைக்குப் போவாய்" என்று கேட்டார் அவன் மாமா.

"நான் படித்து கலெக்டராக வருவேன்" என்றான் மணிவண்ணன். இதைக் கேட்டுக் கொண்டிருந்த அவன் அப்பா "தம்பி விரலுக்கேத்த வீக்கம் வேண்டும். நீ சாதாரண விவசாயியின் மகன். நீ ஆசைப்படுவதில் அளவு வேண்டும்" என்றார்.

மணிவண்ணனின் சந்தோஷம் மணலில் பாய்ந்த தண்ணீராய் மறைந்து போனது. "ஒரு ஏழையின் மகன் கலக்டராக வர ஆசைப்படுவது பேராசையா?" என்று நினைத்தான்.
வகுப்பில் மணிவண்ணன் உற்சாகமின்றி உட்கார்ந்திருந்தான்.



பாடங்களில் அவன் மனம் லயிக்கவில்லை. வகுப்பு ஆசிரியர் அவனை கவனித்து விட்டார். ஆசிரியர் அவனை தனியாக அழைத்து விசாரித்தார்.

"ஒரு ஏழையின் மகன் கலக்டராக ஆசைப்படுவது பேராசையா" என்றான். அவன் சொன்னதைக் கேட்டதும் ஆசிரியர் கலகலவென்று சிரித்தார். "இதற்கு நானே உனக்கு நல்ல பதிலைச் சொல்லுவேன். ஆனாலும் இன்று மாலை வரை காத்திரு. எது பேராசை என்று புரிந்து கொள்வாய்" என்றார்.

அன்று மாலை பள்ளியின ஆண்டு விழா நடைபெற்றது. ஆண்டு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் பேசும் போது மாணவர்கள் நன்றாகப் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்று அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தார்.
கூட்டத்தில் உட்கார்ந்திருந்த மணிவண்ணனிடம் வந்த ஆசிரியர், "உன் சந்தேகத்தை அவரிடமே கேள்" என்றார்.

முதலில் தயங்கிய மணிவண்ணன் தைரியமாக எழுந்து கலக்டரிடம் கேட்டான்.
"ஒரு ஏழை விவசாயியின் மகன் கலெக்ட்ராக வர ஆசைப்படுவது பேராசையா?"
"நிச்சயமாக இல்லை. நேர்மையான வழியில் பெறுவதாய் இருந்தால் உலகத்தைக் கூட வாங்க ஆசைப்படுவதில் தவறு இல்லை" என்று பளிச்சென்று கூறினார் கலக்டர்.
"நானும் ஒரு சாதாரண ஏழை விவசாயியின் மகன் தான்"
"உழைப்பும் உறுதியான முயற்சியும் இருந்தால் எதற்கும் ஆசைப்படலாம். அது பேராசை ஆகாது" என்று பேசி முடித்தார் கலக்டர்.
இருபது ஆண்டுகள் கழிந்தன.
அதே பள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மணிவண்ணன் ஆண்டு விழாவில் பேசிக் கொண்டிருந்தார்.

"நம்பிக்கையும் உறுதியான முயற்சியும் உழைப்பும் தர தயாராக இருந்தால் கலக்டராக மட்டுமல்ல. இந்த நாட்டின் ஜனாதிபதியாக வர ஆசைப்படுவது கூட பேராசை ஆகாது" என்று கலக்டர் மணிவண்ணன் சொன்ன போது மாணவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

குள்ளமான சிறுவர்களை எதிரி நாட்டு ஒற்றர்களுக்கு சந்தேகம் வராமல் வெளியே செல்வதற்குப் பயிற்சியளித்தார். அவர்கள் மூலம் ஊரை காலி செய்து விட்டுப் போன வீரர்களுக்கு தகவல் கொடுத்தார்.
வீரர்கள் எல்லோரும் பின்புறமாக அரண்மனையில் குவிந்தனர். அனைவரும் ஒன்று சேர்ந்து எதிரி நாட்டு வீரர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள். அதை தாங்க முடியமால் எதிரி நாட்டுப் படையினர் ஓட்டம் பிடித்தார்கள்.

நாட்டை ஆபத்தில் இருந்து காப்பாற்றியதற்காக மந்திரிக்கு ராஜா நன்றி தெரிவித்தார்.
நாட்டை ஆள்வதற்குத் தேவை வீரமும், அறிவும்தான். அதை ஒழுங்காகச் செய்வது தான் முக்கியம் என்பதை ராஜா உணர்ந்து கொண்டார். உடனே உயரமானவர்களுக்கு விதித்த தடையை நீக்கினார். எல்லோரும் ராஜாவை வாழ்த்தினார்கள்.



காண்டா மிருகங்கள் மிகவும் பலசாலிகள் இவற்றின் குட்டையான கால்களில் மூன்று விரல்கள் உண்டு. அகன்ற தோல் இவற்றை இணைத்திருக்கும். தோளின் முன்புறமும் பின்கால்களின் முன்பும் தடித்த தோல் மூன்று மடிப்புகளாகக் கவசம் போல் அமைந்திருக்கும். இதனை துப்பாக்கிக்குண்டு கூடத் துளைக்க முடியாது என்பது தவறு. உயிரோடிருக்கும் போது இத்தோல் மிருதுவாகத்தான் உள்ளது. காண்டாமிருகம் இறந்துவிட்டால் தோல் உயர்ந்து குண்டு துளைக்க முடியாதபடி உறுதியாகிவிடும். மூக்கிலிருந்து வளர்ந்திருக்கும் கொம்பு தோலிலிருந்து வளர்கிறது.

இது எதிரிகளைத் தாக்க அல்ல. கிழங்குகளைத் தோண்டவே. எதிரிகளைப் பற்களாலேயே கடிக்கும். யானைகளைக் கூடக் கொன்றுவிடக் கூடிய பலம் படைத்த இவை வெகு வேகமாக ஓடும். கேட்கும் சக்தி அதிகம், பார்க்கும் சக்தி குறைவு. பிராணி களைக் கொன்ற போதிலும் புசிப்பது இல்லை. புல் பூண்டு, கிழங்குகளையே சாப்பிடும். தனித்து வாழ்வதையே விரும்பும் இது. சேற்றில் விழுந்து புரள்வதெ ன்றால் கொண்டாட்டம். இரவில்தான் இரைதேடும். தடவைக்கு ஒரு குட்டி போடும். அதற்குக் கோபம் வந்தால் உடலெல்லாம் இரத்தம் போல் சிவப்பாக வியர்த்துக் கொட்டும். மூர்க்கத்தனமான இம்மிருகம் கண்ட இடத்தில் மலம் கழித்து அசுத்தப்படுத்துவது இல்லை. எப்போதும் குறிப்பிட்ட ஒரு இடத்திலேயே மலம் கழிக்கும். புல், அடர்ந்து காடுகளில்தான் இவை வசிக்கும்.

## பொது அறிவுக்கணக்கு

ஒரு பனை மரத்தில் ஏற முற்படும் ஓணான் ஒன்று ஒரு மணித்தியாலத்தில் ஒரு சாண் ஏறி நான்கு விரல் கீழே சறுக்கி இறங்கி விடும். இதனை வேறு விதமாக கூறுவதாயின் பனை மரத்தில் ஏற முற்படும் ஓணான் ஒன்று ஒரு மணித்தியாலத்தில் ஒரு சாண் ஏறி 1/3 சாண் கீழே சறுக்கி இறங்கிவிடும். இவ்வாறு ஏறும் ஓணான் எத்தனை மணித்தியாலங்களில் 32 முழம் உயரமான பனை மரத்தில் ஏறி முடிக்கும்?

12 விரல் = 1 சாண்
24 விரல் = 1 முழம்
2 சாண் = 1 முழம்

## வர்ணம் தீட்டுவோம்



வார இதழ்
தீபம்
"யாமார்க்கும் குடியல்லோம்"
05.01.2020 இதழ் - 210
gmail:- newsdeepam19@gmail.com
விநியோகம் / விளம்பரம் TP:- 021 4927542, 0771989445

# இனவாதத்தை மௌனமாக ஏற்பவர்களால் நல்லுறவை ஏற்படுத்த முடியுமா?

புதிய ஜனாதிபதியும் புதிய அரசாங்கமும் பதவியேற்ற பின்னர், நாட்டில் பௌத்த - சிங்கள பேரினவாத மதவாதச் சக்திகளின், சிறுபான்மைச் சமூகத்தவர்களுக்கு எதிரான அச்சுறுத்தல் குரல்களும், நடவடிக்கைகளும் மூர்க்கத்தனம் கொள்ளத் தொடங்கியுள்ளதை, அன்றாடம் ஊடகங்களில் வெளிவரும் செய்திகள் உறுதி செய்து வருகின்றன.

உண்மையில் புதிய ஜனாதிபதி பெரும்பான்மை இன மக்களின் வாக்குகளால் தான் தனித்துவமான, முழுமையான வெற்றியைப் பெற்றார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அவருக்கு எதிராக அளிக்கப்பட்ட சிறுபான்மை இனத்தவரின் பெருமளவிலான வாக்குகள் கூடப் பெரும்பான்மை இனத்தவர் ஒருவருக்கே அளிக்கப்பட்டன என்பதும், அவரும் கூட பௌத்த மதத்தைச் சார்ந்தவர் தான் என்பதும் கூட இங்கு கவனமாகக் கருத்தில் கொள்ளப் படவேண்டிய விடயமாகும்.

ஆக, சிறுபான்மைச் சமூகத்தவஉகளை எதிரிகளாகப் பார்ப்பதும், அவர்களுக்கு எதிராக அச்சுறுத்தல் அறிக்கைகள் விடுவதும், அவர்களை வந்தேறு குடிகள் என அவமானப்படுத்துவதும் நாட்டின் எதிர்காலத்திற்கு நன்மை தரும் விடயமல்ல. நாட்டைமீண்டும் ஒரு அதல பாதளத்திற்கு இட்டுச் செல்லும் நடவடிக்கையே ஆகும். ஜனாதிபதி பெரும்பான்மை இன மக்களின் வாக்குகளால் தான் தனித்துவமான, முழுமையான வெற்றியைப் பெற்றார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

அவருக்கு எதிராக அளிக்கப்பட்ட சிறுபான்மை இனத்தவரின் பெருமளவிலான வாக்குகள் கூடப் பெரும்பான்மை இனத்தவர் ஒருவருக்கே அளிக்கப்பட்டன என்பதும், அவரும் கூட பௌத்த மதத்தைச் சார்ந்தவர் தான் என்பதும் கூட

புதிய ஆட்சியில், புதிய நம்பிக்கைகளை எதிர்பார்த்து நிற்கும் மக்கள், தொடர்ந்தும் கடந்தகால நெருக்கடிகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய அவலத்துக்குத் தள்ளப்படுவதென்பது எந்த வகையிலும் நல்லதல்ல. மதவாதமும், இன வாதமும் ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை அடியோடு அழித்துவிடும் என்பதுடன், அரசின் மீதான நல்லெண்ணத்தையும் முற்றாகச் சிதைத்துவிடும். பொதுவாக இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை இன மக்கள் காலம் காலமாக அனுபவித்து வரும் அடக்கு முறைக்கும் ஒடுக்கு முறைக்கும் முற்றுப் புள்ளி அற்ற நிலையே தொடருமெனில், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மனித நேயத்தில் அக்கறை கொண்ட தேசிய அமைதியை விரும்பும் மக்களுக்கும் புதிய ஆட்சி மீதும் ஜனாதிபதி மீதும் நம்பிக்கையீனத்தையே ஏற்படுத்தும்.

எனவே புதிய ஜனாதிபதி ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு மாதகாலம் கடந்துள்ள நிலையில் தன் கீழ் சத்தியப் பிரமாணம் எடுத்து ஆட்சி மற்றும் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுள்ள அமைச்சர்கள், அதிகாரிகள், பாதுகாப்புத் துறையினர் அனைவரும் மக்கள் மத்தியில் இன ரீதியான, மத ரீதியான குழப்பங்களையும், முரண் நிலைகளையும் ஏற்படுத்தும் அறிக்கைகளைத் தேசிய அமைதிக்குப் பங்கம் ஏற்படும் வகையில் சுயேச்சையாக விடுவதை முழுமையாகக் கட்டுப்படுத்த வேண்டியது மிகமிக அவசியமாகும்.

பொறுப்பற்ற முறையில் அதிகார வெறியுடன் ஆட்சியின் பங்காளிகள் என்ற கர்வத்தில் அவர்கள் உதிர்க்கும் வார்த்தைகள் ஆட்சித் தலைமையை முழுமையாகப் பாதிக்கும் என்பதை ஜனாதிபதி, பிரதமர் உட்பட நாட்டிற்குப் பொறுப்பான அனைத்துத் தரப்பினரும் புரிந்து கொள்ள வேண்டும்.

அண்மைக் காலத்தில் புதிய ஆட்சி நாட்டைப் பொறுப்பேற்ற பின்னர் பௌத்த மத அமைப்பின் தலைவர்கள் சிலரும், அமைச்சர்கள் சிலரும், பாதுகாப்புத் துறைக்குப் பொறுப்பானவர்கள் சிலரும், அரச சார்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் விடுத்து வரும் மத வாத, இனவாத ரீதியான கருத்துக்கள் ஆரோக்கியமான தேசிய ஒருமைப்பாட்டிற்கும், அரசுக்கும் நன்மை பயக்கக் கூடிய தன்மை கொண்டதாக இல்லை என்பதைச் சுட்டிக் காட்டவேண்டிய அவசியம் உண்டு

அரசையும், ஜனாதிபதியையும், பெரும்பான்மை இனத்தையும், பௌத்த மத அடிப்படைவாதிகளையும் திருப்திப்படுத்த விடுக்கப்படும் அறிக்கைகளும், அறிவிப்புகளும் நாட்டின் அமைத்திக்கும், சிறுபான்மைச் சமூகத்தவர்களின் எதிர்கால நம்பிக்கைகளுக்கும் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலாகவே இவற்றை அரசுத் தலைமை கருத்திலும் கவனத்திலும் கொள்ள வேண்டும்.

சிறுபான்மை இனத்தவர்களை அதிலும் குறிப்பாகத் தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக, அதுவும் இந்தநாட்டில் அவர்களை வந்தேறு குடிகளாக அவமானப்படுத்தும் மேர்வின் சில்வா போன்ற அரசியல் நோயாளிகளை அரசாங்கத்தினுள் வைத்துக் கொண்டு அவர்களின் இனவாத வெறித்தன அறிக்கைகளை மௌனமாக அங்கீகரிக்கும் அரசாங்கமும் இந்தநாட்டில் இனங்களுக்கிடையே மனித நேய அடிப்படையில் ஒருமைப் பாட்டையும் நல்லுறவையும் ஏற்படுத்துமா?






வெருளுத லறிவென் றெண்ணாய,
விழுத்தையோர் பொருட்டாக்
கொள்ளாய்,
சுருளலை வெள்ளம் போலத்
தொகையிலாப் படைகள் கொண்டே
மருளுறு பகைவர் வேந்தன்
வலிமையாற் புகுந்த வேளை,
உருளுக தலைகள் மானம்
ஓங்குகென் றெதிர்த்து நின்றாய்.

யாருக்கே பகையென் றாலும்
யார் மிசை இவன்சென் றாலும்
ஊருக்குள் எல்லை தாண்டி
உத்திர வெண்ணி டாமல்,
போருக்குக் கோலம் பூண்டு
புகுந்தவன் செருக்குக் காட்டை
வேருக்கும் இடமில் லாமல்
வெட்டுவேன் என்று நின்றாய்.

விளக்கொளி மழுங்கிப் போக
வெயிலொளி தோன்றும் மட்டும்,
களக்கமா ரிருளின் மூழ்குங்
கனக மாளிகையு முண்டாம்,
அளக்கருந் தீதுற் றாலும்
அச்சமே யுளத்துக் கொள்ளார்,
துளக்கற ஓங்கி நிற்பர்,
துயருண்டோ துணிவுள் ளோர்க்கே?

## சுந்தரச் சிரிப்பு




நன்றி - சிரித்திரன் சித்திரக்கொத்து

# ஈழத் தமிழ் மக்களின் தொன்மை புரியாத தமிழகம்

குடியுரிமைத் திருத்தச்சட்டத்தை அவசர அவசரமாக நாடாளுமன்ற இரு அவைகளிலும் நிறைவேற்றிய பாரதிய சனதா அரசு மக்கள் அமைதியடைந்து விடுவார்கள் என நினைத்திருந்தது. ஆனால் அவர்கள் நினைத்ததற்கு மாறாக நிலைமை மோசமடைந்து விட்டது. இதுவரை பதினேழு உயிர்கள் பறிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினையில் மிக மோசமான நிகழ்வுகள் பாரதிய சனதாக் கட்சி ஆளும் உத்தரப்பிரதேசத்தில் தான் இடம்பெற்றுள்ளது.

வடகிழக்கு மாநிலங்களில் தொட்டங்கிய போராட்டம் இன்றுவரை நீடித்துக் கொண்டே இருக்கிறது.அங்கே குடியுரிமைச் சட்டத்தை முற்றாக நீக்குமாறு தான் போராட்டம் நடைபெறுகிறது. ஆனால் மற்ற மாநிலங்களில் குடியுரிமைச் சட்டத்தில் மத ரீதியாக பாகுபாடு காட்டக்கூடாது அரசியல் யாப்பின் முன் அனைவரும் சமம் எனவே இசுலாமிய ஏதிலிகளுக்கும் இதர மத ஏதிலிகளுக்கும் குடியுரிமை வழங்குவதுபோல் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை வைத்தே நாடெங்கும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன

தமது நாட்டின் பேரினவாத ஆட்சியாளர்களின் கொடுமைகளிலிருந்து உயிரைக் காப்பாற்றத் தமது வாழ்விடங்களையும் விட்டு நாட்டையும் விட்டு தப்பி ஓடிய மக்களை ஏதிலிகள் என்றோ புகலிடக் கோரிக்கையாளர்கள் என்றோ கருதாத இந்திய அரசு அவ்வகையான மக்களை சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் என்று தான் கூறி வருகிறது.

குடியுரிமைச் சட்டத் திருத்தமும் தமிழ் நாடும்.

தமிழ் நாட்டின் மாநில ஆளும் கட்சியான அதிமுக குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை ஆதரித்தே வாக்களித்திருந்தது. இவர்கள் ஆதரித்ததால் தான் மாநிலங்களவையில் இச்சட்டத் திருத்தம் நிறைவேற்றக் கூடியதாக இருந்தது. இவர்கள் ஈழததிலிருந்து சென்று தமிழ் நாட்டில் வாழும் ஏதிலிகளுக்கு குடியுரிமை வழங்கப்பட மாட்டாதென்று இருப்பதைப் பற்றி கொஞ்சமும் கண்டுகொள்ளாமலே ஆதரித்து வாக்களித்திருந்தனர். ஆனால் இன்னொரு கட்சியான திமுக நாடாளுமன்ற மக்களவையில் மூன்றாவது பெரிய கட்சியாக இருந்தும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாது வெளிநடப்புச் செய்தனர். எதிர்த்து வாக்களித்திருக்க வேண்டியவர்கள் என்ன காரணத்தினால் இந்த நழுவல் போக்கை மேற்கொண்டனர் என்பது ஐயத்திற்குரியதே. ஆனால் நாட்டில் மிகப் பெரிய எதிர்ப்பும் போராட்டங்களும் ஏற்படவே மாநிலங்களவையில் சட்டத்திற்கு எதிராக வாக்களித்தது திமுக ஆனால் பல்கலைக்கழக மாணவர்கள் கட்சி நிலைப்பாடுகளைக் கடந்து தமிழ் நாடெங்கும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இசுலாமியர்களுக்கும் குடியுரிமை வழங்க வேண்டும் அதேபோல் ஈழத் தமிழ் ஏதிலிகளுக்கும் குடியுரிமை வழங்கவேண்டும் என்று தமிழ் [illegible] எங்குப் போராட்டங்களை அமைதி வழிகளில் மேற்கொண்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து ஏதிலிகளாகச் சென்ற இலட்சத்தையும் தாண்டிய மக்களை நீங்கள் ஏதிலிகள் அல்ல யாரும் அற்றவர்கள் தான் ஏதிலிகள் நாங்கள் உங்கள் உறவுகள் இருக்கிறோம் நீங்கள் உங்களை ஏதிலிகளாக நினைக்கவே கூடாது என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கருணாநிதி அப்பொழுது கூறியிருந்தார்.தமிழ் நாட்டை அப்பொழுது ஆண்டுகொண்டிருந்த எம்ஜிஆரும் இதே நிலைப்பாட்டிலேயே இருந்தார்.ஆனால் ஏதிலிகளாகச் சென்றவர்கள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டு வசதிகள் குறைந்த நிலையிலேயே வாழ்ந்து வந்தார்கள், வாழ்ந்து வருகிறார்கள்.. இந்திய நடுவண் அரசும் ஈழத்து ஏதிலிகளை ஐநாவின் விதிகளுக்கு அமைவாக நடத்தாமலே காலத்தைக் கழித்து வந்தது. ஏதிலிகளுக்கான அகதி முகாம்கள் என்று கூறாமல் தடுப்பு முகாம்கள் என்று தான் கூறிவருகிறது டெல்லி அரசு. எம்ஜிஆருக்குப் பின்னர் இரண்டு மூன்றுமுறை முதலமைச்சராக இருந்த கருணாநிதி அம்மக்களுக்கு ஆறுதலளிக்கும் வகையில் நடந்து கொள்ளவில்லை. அதேபோல் தான் அதிமுக அரசும் நடந்துகொண்டது. ஆனால் ஜெயலலிதா முதலமைச்சராக வந்த பின்னர் உயர் கல்வி வசதிகள் மேற்கொள்ள வாய்ப்புக் கொடுத்ததுடன் தமிழ்நாட்டில் பொருளியல் நிலை யில் பின் தங்கிய மக்களுக்குக் கொடுக்கப்படும் சலுகைகளை ஈழ எதிலிகளும் பெறுவதற்கு வழிவகை செய்துகொடுத்தார். ஆனாலும் அவர்கள் தொழில் பெறுவதில் பெரிய இடைஞ்சல்கள் இன்னமும் தொடர்கதையாகவே உள்ளன.அவர்கள் தங்கியிருக்கும் முகாம்களை விட்டுக் செல்வதில் திரும்பி வருவது என்பனவற்றில் கடுமையான கட்டுப்பாடுகள் இருக்கின்றன. திபெத்து நாட்டின் ஏதிலிகள் குடியுரிமையும் பெற்றுச் சுதந்திரமாக நடமாடமுடியும் ஆனால் ஈழத் தமிழ் ஏதிலிகளுக்கு அவ்வாறான நிலை கிடையாது. சில-வேளைகளில் சிறப்பு முகாம்கள் என்ற பெயரில் சில மக்களை அடைத்து வைத்தும் துன்புறுத்துவார்கள். இதெல்லாம் தமிழ் நாட்டில் உள்ள இலங்கைத் தமிழ் ஏதிலிகளின் நிலைமை இம்மக்கள் தமது உயிருக்கு அஞ்சித் தான் ஏதிலிக-ளாகத் இலங்கைத் தீவிலிருந்த தப்பி தமிழ் நாட்டிற்குச் சென்றார்கள். ஆனால் இந்திய அரசு அவர்களைச் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்கள் என்று தான் இன்றுவரை கூறிவருகிறது. உண்மையில் அவர்கள் ஏதிலிகள் அல்லது அரசியல் அடைக்கலம் கோருபவர்களாகத் பார்க்க வேண்டிய இந்தியா சட்டவிரோதக் குடியேற்ற வாசிகளாகப்பார்ப்பதன் மூலம் ஐ.நா. வின் அகதிகளுக்கான தகுதியையும் அம்மக்கள் பெறமுடியாமல் செய்துள்ளது.

தேர்தல் நேரங்களில் மட்டும் ஈழப் பிரச்சினை பற்றிப் பேசும் தமிழ் நாட்டு அரசியல் கட்சிகள் தேர்தல்களின் பின்னர் அவற்றை மறப்பது போல் தான் இம்மக் களையும் மறந்து விடுகிறார்கள்.இப்பொழுது குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை வைத்துப் பேரணிகளை எதிர்க்கட்சிகள் நடத்துகின்றன. அதுவும் ஒரு நாளில் முடிந்துவிடும்.ஆனால் இளைஞர்களிடம் ஏற்பட்டுள்ள இன எழுச்சியினால் அரசியல்கட்சிகளும் இதை ஒரு பிரச்சினையாகவே கையிலெடுக்க வேண்டிய நிலையில் உள்ளார்கள்.

வரலாறு தெரியாத இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்.

நிர்மலா சீதாராமன் தமிழகத்தைச் சேர்ந்த பெண். ஆனால் தமிழகத்தில் தேர்தலில் போட்டியிட்டு வென்றவர் இல்லை. வேறு மாநிலத்திலிருந்து மாநிலங்களைவையில் உறுப்பினராக உள்ளார். அவர் தான் தற்பொழுது இந்திய மத்திய அரசின் நிதியமைச்சர்.அவருக்கு ஈழ வரலாறு தெரியவில்லை. ஏனெனில் ஒரு தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியில் ஆச்சரியப்பட வைக்கும் விதத்தில் செவ்வி அளித்துள்ளார் அவர். ஈழத்தில் இருந்து வந்து முப்பத்தைந்து ஆண்டுகளாக இங்கு வாழும் ஏதிலிகளுக் கும் குடியுரிமை வழங்கலாமே அவர்களும் இந்துக்கள் தானே என்ற வினாவுக்கு அவர் பதில் கூறியுள்ளார். இந்தியாவில் ஏற்கனவே நான்கு இலட்சம் இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கியுள்ளோம் மிகுதிப்பெரும் குடியுரிமைக்கு விண்ணபித்தால் அவர்களுக்குப் படிப்படியாக குடியுரிமை வழங்கப்படும் என்று கூறியுள்ளார். இவரிடம் வினாத் தொடுத்தவருக்கு இதற்கு மேல் இது தொடர்பான வினாவைக் கேட்கப் போதிய அரசியல் தெளிவு இல்லை என்பது புலனாகிறது. இவருக்கு மட்டுமல்ல தமிழகத்தில் உள்ள ஏராளமானோருக்கு இலங்கையில் வாழும் தமிழர்கள் யார் என்பது தெரிவதில்லை.

போதிய தெளிவு இல்லாத தமிழ்நாட்டு மக்கள்

இலங்கையில் வாழும் தமிழர்கள் இந்தியாவிலிருந்து சென்று வாழ்பவர்கள் என்று தான் நினைக்கிறார்கள் தமிழ் நாட்டில் வாழும் பெரும்பான்மையான மக்கள் .நான் இந்தியாவிற்குச் சென்று ஒரு மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன். நான் இலங்கையில் இருந்து வந்ததாக அறிந்தவுடன் மருத்துவர் ஒருவர் வினவினார் போரின் பொழுது எங்கு இருந்தீர்கள் நிலைமை இப்பொழுது எவ்வாறு உள்ளது? இப்பொழுதும் அங்கேயா இருக்கிறீர்கள்? இங்கு வந்துவிடலாமே, எதற்காக அங்கு இருக்க வேண்டும் என்றவாறு பல வினாக்களை எழுப்பினார். அவருக்கு நான் சொன்னேன் நாங்கள் அந்த நாட்டின் பூர்வீக குடிகள் நீங்கள் எவ்வாறு இந்த மண்ணின் சொந்தக்காரர்களோ அவ்வாறே நாமும் அந்த மண்ணின் சொந்தக்காரர்கள் என்றேன். அவர்களுக்கு வியப்பாக இருந்தது. பல கேள்விகள் கேட்டார்கள் முடிந்தளவு புரிய வைத்தேன். மருத்துவருடன் மேலும் சிலரும் நின்று இவற்றை கவனித்தார்க்ள் இது அவர்களின் குறை அல்ல. சில அரசியல்வாதிகளைக் குறிப்பிட்டு இவரால் தான் ஈழம் பற்றிய செய்திகள் தமிழ் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவ வழி செய்தார்கள் என்று தங்களுக்குப் பிடித்தவர்களைப் பற்றிப் பேசியும் எழுதியும் வருகிறார்கள் இங்குள்ள சிலர்..ஆனால் இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்கள் அந்த மண்ணின் சொந்தக்காரர்கள் என்று கூறிப்புரிய வைக்கவில்லையே என்ற எண்ணம் தான் எனக்கு ஏற்பட்டது. இதுபோல் பலர் என்னிடம் இதே கேள்விகளைக் கேட்டுள்ளார்கள். இதே போல் தான் அமைச்சர் நிர்மலா சீதா ராமனும் நான்கு இலட்சம் இலங்கைத் தமிழ் மக்களுக்கு இந்தியா குடியுரிமை வழங்கியதென்று கூறியதுமாகும் சிறி-மாவோ பண்டாரநாயக்கவுக்கும் லால் பகதூர் சாத்திரிக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தப்படி மலையகத்தில் வாழ்ந்த தமிழ்த் தொழிலார்களைக்கட்டாயமாக நாடுகடத்தினார்கள். இந்த மண்ணை வளப்படுத்தி அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொடுத்த மலையகத் தமிழ் மக்களை முதலில் நாடற்றவர்களாக்கிப் பின்னர் அவர்களில் பெரும்பகுதியினரைக் கட்டாயமாக் நாடுகடத்தியதைக் கூறாமல் நான்கு இலட்சம் இலங்கைத் தமிழர்களுக்கு . வழங்கியதாக கூறி இப்போது எழுந்துள்ள ஈழத் தமிழ் மக்களின் குடியுரிமைப் பிரச்சினையை நீர்த்துப் போகச் செய்யலாம் என்று கருதிக் கூறியிருக்கிறார். நிர்மலா சீத்தாராமன் எதோ இடம்பெயர்ந்து வந்த மக்களுக்கு வழங்கிய குடியுரிமை போல் பேசிச் சமாளித்துள்ளார். இது தான் தமிழ் நாட்டின் நிலைமை. இத்தொலைக்காட்சியைப் பார்ப்பவர்கள் அடே இவ்வளவு பேருக்குக் குடியுரிமை வழங்கி விட்டார்களே இன்னமும் இருக்கும் தொண்ணூற்றை ந்தாயிரம் பேருக்கும் வழங்குவார்கள் தானே என்று நம்பவும் கூடும்.

இலங்கைத் தீவிலே வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே தமிழினம் வாழ்ந்து வருகிறது என்ற உண்மையைத் தமிழ் நாட்டு மக்கள் முதலில் உணரவேண்டும். இதற்கு அங்குள்ள அரசியல் கட்சிகள் முயலவேண்டும். அதை விடுத்து வீராவேசமாக அங்கே சென்றோம் அவரைக் கண்டோம். சேர்ந்து உணவு உண்டோம் எம்மிடம் தான் பொறுப்பை ஒப்படைத்துள்ளார்கள் என்று வாக்கு அரசியல் பேசுவதால் அவர்களுக்கு [illegible] வந்துவிடப்போவதில்லை [illegible] எதுவும் கிடைத்துவிடப்போவதில்லை.

- சிலம்பு -



# அமெரிக்காவின் விண்வெளிப்படை உலக இராணுவ சமநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துமா?

## உலக அரசியல்



உலகின் மிகவும் பலம் வாய்ந்த இராணுவத்தைக் கொண்ட நாடு அமெரிக்கா. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 60 ஆயிரம் கோடி ரூபாயை இராணுவத்துக்காக ஒதுக்கி வருகிறது. அந்நாட்டில் தரைப்படை, விமானப்படை, கடற்படை, கடலோரக் காவல்படை, சிறப்பு அதிரடிப்படை என 5 படைப்பிரிவுகள் உள்ளன.

ஆறாவது படைப்பிரிவாக விண்வெளிப்படையை அமெரிக்கா புதிதாக உருவாக்கியுள்ளது. இதற்காக, 73,800 கோடி ரூபாய் ஒதுக்க ஒப்புதல் அளித்துள்ள ட்ரம்ப், அதற்கான சட்டத்திலும் கையெழுத்திட்டுள்ளார். புதிய படைப்பிரிவை உருவாக்கியுள்ளதன் மூலம் மிகப்பெரிய சாதனை படைத்துள்ளதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். தற்போது விண்வெளியும் போர்புரியும்




இடமாக மாறிவிட்டதாகவும் அவர் கூறியுள்ளார். எனவே இக்கட்டுரை அமெரிக்காவின் விண்வெளிப்படை உலக இராணுவ சமநிலையில் எத்தகையதொரு மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றது என்பதைத் தேடுவதாக அமைந்துள்ளது.

பனிப்போர் காலத்தைப் பொறுத்தவரை ஐக்கிய அமெரிக்காவும், சோவியத் ஒன்றியமும் விண்வெளியில் சண்டையிடவில்லை. ஆனால் தமது பாதுகாப்பு யுத்த நடவடிக்கைகளுக்காக உளவுச் செயற்கைக் கோள்களைப் பயன்படுத்தியிருந்தன. அந்த நேரத்தில் வாஷிங்டன் பசுபிக் பெருங்கடலில் செயற்கைக்கோள் ஏவுகணை ஒன்றை நிறுத்தியிருந்தமையும், மொஸ்கோ செயற்கைகோள் பாதையை அழிக்கக்கூடிய ஏவுகணை ஆயுத மொன்றையும் உருவாக்கியிருந்தது. எனவே பாதுகாப்பான உலக அமைப்பின் கூற்றுப்படி சீனா, ரஷ்சியா, அமெரிக்கா ஆகியவை செயற்கைக் கோள்களை அழிக்கக் கூடிய தொழில் நுட்பத்தை ஏற்கனவே கொண்டுள்ளன என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

2007 ஆம் ஆண்டு சீனா தனது செய்மதி ஒன்றைத் தரையிலிருந்து ஏவுகணை ஒன்றை வீசி அழித்து ஒரு பரிசோதனை செய்தது. பின்னர் விண்வெளியிலுள்ள உடைந்த செய்தி மதிகளை வாரி அள்ளக்கூடிய செய்மதிகளைப் பரிசோதித்தது. அதனால் சீனா விண்வெளியில் போர் நடவடிக்கைகளை விரிவபடுத்தும் முயற்சியில் ஈடுபடுவதாக அமெரிக்கப் படையினர் அச்சம் வெளியிட்டனர். அதே துறையில் தாமும் இறங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் விடுத்தனர். இதனால் அமெரிக்கா விண்வெளிப்படையை உருவாக்கியது. அத்துடன் அமெரிக்க விண்வெளி அமைப்புக்களைத் தகர்க்க வடிவமைக்கப்பட்டுள்ள லேசர் வான்வழி அமைப்பை ரஷ்சியா உருவாக்கி வருவதாகக் கூறியிருந்தது. அமெரிக்க செயற்கைக் கோள்களை அழிக்கவே போர் விமானங்களில் இருந்து தொடங்கப்படக் கூடிய ஏவுகணைகளை மொஸ்கோ உருவாக்கிவருவதாகப் பெண்டகன் தொடர்ச்சியாகக் கூறிவந்தது.

மேற்குறித்த இவ்விடயங்கள் அமெரிக்க பாதுகாப்பு மட்டத்தில் தமது விண்வெளி தொடர்பான பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டிய நிலை தொடர்பாக ஒரு கலகத்தை ஏற்படுத்தியிருந்தது. மேலும் அமெரிக்க இராணுவ உளவு அமைப்பு வெளியிட்ட தகவல் ஒன்றில் ரஷ்சியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் மிகப்பெரிய அளவில் சக்தி வாய்ந்த தொழில் நுட்பங்களை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன என எச்சரித்திருந்தது. இந்த ஆண்டு தொடக்கத்தில் வெளியான இத்தகவலில் விண்வெளி உளவு மற்றும் கண்காணிப்பாக இந்தத் தொழில்நுட்ப உருவாக்கத்தை அந்த நாடுகள் மேற்கொண்டிருந்தன எனவும் கூறப்பட்டிருந்தது. இதன் எதிரொலியாக அமெரிக்கா தனது விண்வெளிப் பலத்தை நிலைநாட்ட விண்வெளிப் பாதுகாப்புப் படையை ஆரம்பித்துள்ளது.

விண்வெளிப்படை உருவாக்கப்பட்டதற்கு மிகப்பிரதான காரணம் மின் காந்த அதிர்வுத் தாக்குதலிருந்து பாதுகாப்புப் பெற்றுக் கொள்வதற்காகும். மின்காந்த அதிர்வுகளை மிகப் பாரிய அளவில் ஒரு எதிரி நாட்டின் மேல் பரவச் செய்வதால் அங்கு பெரிய ஒரு பிரதேசத்தில் கணனிகள், தொலைத் தொடர்புகள், இணைய வெளித் தொடர்புகள் போன்றவற்றையும் மின் வழங்கலையும் முற்றாகச் செயலிழக்கச் செய்ய முடியும். ஆனால் எந்த ஒரு கட்டுமானமும் அழிக்கப்பட மாட்டாது. ஒரு எறிகணை மூலமாகவோ அல்லது ஆளில்லா விமானம் மூலமாகவோ மின்காந்த அதிர்வுப் பிறப்பாக்கியை எதிரி நாட்டின் மேல் ஏவலாம். அது கதிர் வீச்சு மூலம் எதிரியின் படையினரை அழிக்கும். மின்காந்த தொழில் நுட்பத் தினை அமெரிக்கா, ரஷ்சியா, சீனா ஆகிய நாடுகளே செய்யவல்லனவாக இருந்தன. ஆனால் இப்போது ஈரானும் வட-கொரியாவும் அத்தாக்குதலைச் செய்யும் வலிமையை உருவாக்கி வருகின்றன. அமெரிக்கா மீது இந்நாடுகள் தாக்குதல் செய்யுமாயின் 18 ஆண்டுகளுக்கு ஓர் அமெரிக்க நகரத்தில் மின் விநியோகம் இல்லாமல் செய்யலாம். அதனால் பாரிய பொருளாதார இழப்பு ஏற்படும் அச்சம் உள்ளது. எனவே தான் கடந்த மார்ச் மாதம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மின்காந்த அதிர்வுத் தாக்குதலிருந்து பாதுகாப்புப் பெறும் பொருட்டு விண்வெளிப் படைக்கான நிறை வேற்றுக் கட்டளையைப் பிறப்பித்திருந்தார்.

இவற்றையெல்லாம் தாண்டித் தனது நட்பு வட்டாரமான ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான பிரான்ஸின் விண்வெளிப் படை உருவாக்கத்திற்கான முயற்சியும் அமெரிக்காவின் விண்வெளிப் படையின் உருவாக்கத்திற்குக் காரணம் ஆகியது. காரணம் பிரெஞ்சு விண்வெளிப்படையின் வளர்ச்சி என்பது பாரிஸ் மற்றும் பேர்லின் தலைமையிலான ஒரு ஐரோப்பிய இராணுவத்தின் தலைமையை முன்னெடுத்துச் செல்வதற்கான மக்ரோனின் முயற்சியின் பாகமாக உள்ளது. அவர்களது நோக்கம் அமெரிக்காவிலிருந்து சுயாதீனமானதும், அதை எதிர்ப்பதும் உட்பட ஐரோப்பிய ஒன்றியத்தைப்போரை நடத்தக் கூடிய ஒரு இராணுவ சக்தியாக மாற்றுவதாகும். ஜேர்மனி எந்த வித அணுவாயுதங்களையும் மற்றும் தனக்கெனச் சொந்தச் செயலூக்க மிக்க விண்வெளித் திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை என்ற நிலையிலும், அதேவேளை பிரிட்டனும் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறும் நிலையிலும் தற்போது ஐரோப்பாவின் மிகப்பெரிய நீல-நீர் கடற்படையைக் கொண்டிருக்கும் ஒரே ஐரோப்பிய ஒன்றிய அணுசக்தி நாடாகப் பிரான்ஸ் விளங்குகிறது என்பதும் அமெரிக்காவின் விண்வெளிப்படை உருவாக்கத்தில் தாக்கம் செலுத்திய காரணங்களில் ஒன்றாகும்.

இவ்வகையில் விண்வெளிப் படை என்பது அங்கு விண்வெளியில் அமெரிக்கா படைவீரர்களை நிறுத்திவைப்பது என்று அர்த்தம் அல்ல. மாறாக அமெரிக்கா அனுப்பியுள்ள நூற்றுக்கணக்கான செயற்கை கோள்களைப் பாதுகாப்பது என்பதாகும். 1947 இல் தேசிய பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததில் இருந்து இராணுவத்தின் புதியதொரு கிளையாக ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளிப்படை அதன் பாதுகாப்பு படைகளில் முதற் தடவையாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. கொலராடோவின் பீற்றர்சன் விமானப்படைத் தளத்தை அதன் தலைமையகமாகக் கொண்டுள்ள அமெரிக்க விமானப் படைகளின் முக்கியதொரு பிரிவாக விண்வெளிப்படை அமையும். ஆகவே விமானப்படைக்குத் தலைமை வகிக்கும் ஜெனரல் ஜெய் ரோமாண்ட் விண்வெளிப் படைக்கும் தலைமை ஏற்பார்.



விண்வெளியில் அமெரிக்காவினதும் அதன் நட்பு நாடுகளினதும் நலன்களைப் பாதுகாப்பதே இப்படையின் நோக்கமாகக் கூறப்படுகிறது. அவ்வகையில் விண்வெளிப்படையானது நாட்டின் எல்லைக் கண்காணிப்பு, தேசியப் பாதுகாப்பு சர்வதேசத் தகவல் தொடர்பு செயற்கைகோள்கள் பாதுகாத்தல் போன்றபணிகளை மேற்கொள்ளும்.16 ஆயிரம் பேரைக்கொண்டு அமெரிக்காவின் மிகச்சிறிய படைப்பிரிவாக இது அமைகிறது. ஏனைய படைகளில் இருக்கும் வீரர்களின் எண்ணிக்கையை விடவும் இது மிகமிகக் குறைவாகும். ஆயினும் தொழில் நுட்பத் திறனும், வினைத்திறனும் மிக்க வீரர்களால் இந்த விண்வெளிப்படை உருவாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தில் விண்வெளிப்படை ஆனது விண்வெளியில் அமெரிக்கா சுதந்திரமாகவும், துரிதமாகவும் செயற்படத் தேவையான ஒழுங்கமைப்புக்கள், பயிற்சிகள் உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும் எனச் சொல்லப்பட்டுள்ளது.

அவ்வகையில் கடந்த சனிக்கிழமை தேசிய பாதுகாப்பு அதிகாரச் சட்டம் 2020 இல் கையெழுத்திட்டதன் மூலம் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இந்தப் படைப்பிரிவைத் தொடங்கி வைத்தார்.

அமெரிக்கா மனிதர்களை நிலவிற்கு அனுப்பி ஐம்பது ஆண்டுகள் நிறைவடைகிறது. அதை நினைவு கூறும் வகையில் இந்த ஆண்டு புதிதாக விண்வெளிப்படை உருவாக்கப்பட்டுள்ளது. என விண்வெளிப் படையின் அறிமுக விழாவில் ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார். வாசிங்டன் அருகே அமைந்துள்ள இராணுவத் தளத்தில் நடைபெற்ற இதற்கான நிகழ்ச்சியில் பேசிய ட்ரம்ப் ஒரு பெரிய நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நாம் கூடியுள்ளோம். வருங்காலத்தில் விண்வெளியில் இன்னும் நிறைய விஷயங்கள் நடக்கவுள்ளன. ஏனெனில் எதிர்காலத்தில் உலகின் புதிய போர்க்களமாக விண்வெளி அமையவுள்ளது. உலகில் முதல்முறையாக நாம் தான் விண்வெளிப் படையை உருவாக்கியுள்ளோம். நமது தேசியப் பாதுகாப்புக்குக் கடுமையான அச்சுறுத்தல்கள் ஏற்படுகின்றன. ஆனால் நாம் விரைவில் அதை முறியடித்து முன்னிலை வகிப்போம். ஆக்கிரமிப்பைத் தடுக்கவும், நம் நாட்டைக் காக்கவும் விண்வெளிப்படை உதவும் எனக் கூறியுள்ளார்.

அமெரிக்காவின் விமானப்படை செயலாளர் பார்பரா பேர்ட் கருத்துத் தெரிவிக்கையில், அமெரிக்க விண்வெளிப்படை உருவாக்கப்பட்டமையானது வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம் என்றும் இது அதிபர் ட்ரம்புக்குக் கிடைத்த மிகப்பெரும் வெற்றி என்றும் கூறியுள்ளார்.

உலகநாடுகளில் இதுவரை எந்த நாடும் விண்வெளிப் படையை உருவாக்கியதில்லை. முதல்முறையாக அமெரிக்கா அதைச் செயல்படுத்தியுள்ளது. விண்வெளியில் ரஷ்சியா, சீனாவைப் பின்னுக்குத் தள்ளிச் சுதந்திரமாகவும், துரிதமாகவும் செயல்படுவதற்கே அமெரிக்கா விண்வெளிப்படையைக் களமிறக்கியுள்ளது. விண்வெளியில் அமைக்கப்பட்டுள்ள சர்வ தேச ஆய்வு மையத்தில் ரஷ்சியாவும், அமெரிக்காவும் இணைந்து பணிபுரிந்தாலும் அங்கு தனிப்பட்ட ஆதிக்கத்தைச் செலுத்த இரு நாடுகளும் முயற்சித்து வருகின்றன. அமெரிக்கா உருவாக்கியுள்ள இந்த விண்வெளிப்படை ரஷ்சியாவிற்குச் சற்றுக் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இது மிகவும் ஆபத்தான நடவடிக்கை என்றும் ரஷ்சியா அதிருப்தி தெரிவித்துள்ளது. பாதுகாப்புக் கட்டமைப்பிற்குள் ஒரு முழுமையான அமெரிக்க விண்வெளிப்படையை உருவாக்கி 21 ஆம் நூற்றாண்டின் பெருகி-வரும் மூலோபாயச் சவாலை அமெரிக்கா சந்திக்கத் தன்னைத் தயார்படுத்தி வருகிறது.

- லக்ஷனா பாலகுமாரன் -

# தமிழர் பிரச்சினைகளின் ஆதிமூலம்...

தமிழ் பரப்பில் பல மாற்றங்கள் நடந்தேற இருக்கின்றது. கட்சித் தலைமைகள் விரும்பியோ, அல்லது அவர்களின் கடந்தகால அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டோ அல்லது மக்களுக்கான ஒரு அரசியல் மாற்றத்தை நிகழ்த்த வேண்டும் என்பதற்காகவோ அத்தகைய மாற்றங்கள் நடைபெற்றிருப்பதாகச் சொல்லமாட்டேன். விரும்பியோ, விரும்பாமலோ அந்த மாற்றம் தானவே நிகழ்ந்ததாகத்தான் சொல்லலாம்.

தற்போது 2020 இல் நடைபெறப் போகும் நாடாளுமன்றத் தேர்த்தலை நோக்கிக் குறிவைக்கத் தொடங்கி விட்டனர் அரசியல்வாதிகள். கட்சித் தாவலும், புதிய கூட்டணியை உருவாக்க வேண்டும் என்றும், புதிய தலைமை ஒன்றைத் தேட வேண்டும் என்றும் பல நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கிடையில் அரசியல்வாதிகளின் தொடர்பில்லாது, அவர்கள் சார்ந்த கட்சிகளோ முன்னின்று நடத்தாது மண் அகழ்வுக்கு எதிரான போராட்டம், காற்றாலைக்கெதிரான போராட்டம், காணாமல் ஆக்கப் பட்டோர்களுக்கான போராட்டம் எனப் பல போராட்டங்களும் முடக்கி விடப் பட்டிருக்கின்றன.

இது போன்ற போராட்டங்களில் அரசியல் இருப்பதாக வெளிப்படையாகத் தெரியா விட்டாலும், ஏதோ ஒரு லாபத்துக்காக இவை நடத்தப்படுகிறது என்றும் எண்ணலாம். புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த உடன் எதற்காக மண்மீது இருந்த அனுமதிமுறையை அகற்ற வேண்டும்? எத்தனையோ விடயங்களைச் செயற்படுத்துவதை விட்டு மண் மீதான அனுமதித்தடை என்பது அத்தனை பெரிய விடயமா? எனவே இலகுவாகச் சிறுபிள்ளை கூட இதற்குப் பதிலளிக்கும். மண் அள்ளுவதில் அதுவரை சிக்கலை ஏதோ ஒரு விதத்தில் அனுபவித்து வந்தவருக்கு ஆதரவாக அல்லது எதிராகவே இந்தத் தடைநீக்கம் இருக்கிறது. அந்தத் தடை நீக்கத்தால் மணல் வியாபாரிகள் அளவு கடந்தும், ஒரு எல்லையைக் கடந்தும் மணலை அள்ளி ஏற்றிச் சென்று கொள்ளை லாபம் ஈட்டத் தொடங்கி விட்டனர். அவ்வாறான நடவடிக்கைகள் தமக்குப்பின் விளைவுகளைத் தரக்கூடும் என்ற கோதாவிலேயே மணல் அள்ளுவதற்கு எதிராகப் போராட்டம் நடைபெற்று வருகிறது. பார்த்தால் அதில் எல்லாக் கட்சிகளும் பங்கு பற்றி இருக்கின்றன. சுருங்கச் சொன்னால் அரசியல் குளிர்காய்கின்றன என்றும் கொள்ளலாம்.

அதே போல மறவன்புலவு காற்றாலை தொடர்பான விடயத்திலும் பல பின்னணிகள் இருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரம் தெரிவித்திருக்கின்றது. காற்றலைக்கான பிரதேச சபை அனுமதியைப் பெற்றுக் கொள்ளவில்லை என மக்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் சாவகச்சேரி பிரதேச சபையானது அந்தக் காற்றாலை அமைக்கும் இந்தியக் கம்பெனியோடு ஒரு வியாபார உடன்படிக்கையைச் செய்திருக்கிறது என்றும் அறிந்தோம். அதாவது காற்றாலையை நிறுவ இருக்கும் கம்பெனி பெறும் லாபத்தில் ஒருபங்கினை அவர்கள் உள்ளூராட்சிக்குச் செலுத்த வேண்டுமாம். ஆனால் அவர்கள் மத்தியின் அனுமதியைப் பெற்றுக் கொண்டு சாவகச்சேரி ஊராட்சியின் அனுமதியைப் புறந் தள்ளி இருக்கக் காரணம் இலாபப் பங்காளிகளான சாவகச்சேரி உள்ளூராட்சியானது எப்படியும் தமது கோரிக்கைக்குச் செவி சாய்ப்பார்கள் என்று அவர்கள் எண்ணி இருக்கலாம். அது மட்டுமல்ல இப்படியானதொரு எதிர்ப்பலையை அவர்கள் முன் எதிர்பார்க்காமல் இருந்திருக்கலாம். அல்லது இதற்குள்ளும் என்ன சூழ்ச்சி உண்டோ தெரியவில்லை! யாழ்.மாநகராட்சியில் 5ஜி கோபுரங்கள் அமைப்பதில் கடைப்பிடித்த அதே நடைமுறை இங்கும் கடைப்பிடிக்கப் படுகிறதோ? தெரியவில்லை. அந்த விடயத்திலும் அரசியல் பின்னணிகள் இருப்பதாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

அந்தக் காற்றாலைக்கான அனுமதியைப் பெறப் பலர் முயன்றதாகவும் அதற்கான அனுமதியையும், வாய்ப்பையும் தற்போது காற்றாலைகளை அமைக்க விருக்கும் கம்பெனியே பெற்றுக்கொண்டதாகவும், அந்த அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களே மக்களைத் தூண்டி விட்டதாகவும் ஒருகதை பேசப்படுகிறது. அதுவும் உண்மையாக இருக்கலாம். ஆனால் காற்றாலைகள் தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் நாடுகளின் பல முன்னைய அனுபவங்களைப் படித்தால் காற்றாலையால் எதுவித பின்விளைவுகளும் வரப்போவதில்லை என்றும் அறியக்கிடக்கிறது. வளர்முக நாடுகளிலே இக்காற்றாலைகள் அதிகம் விவ சாயப் பண்ணைகளிலும், வயல் வெளிப்பரப்புகளிலும் அமைக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்படுகின்றன. காற்றாலைகளால் நன்மை பெறுவதைத் தனியார் கூடப் பல இடங்களில் அமைத்து வெற்றி கண்டிருக்கின்றனர். எனவே இதனைப் புறந்தள்ளாது மக்கள் அரசியல்வாதிகளின் கைக்குள் அகப்படாது காற்றாலைகளை நிர்மாணிக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி மீள்பரிசீரனை செய்ய வேண்டும் எனப் பொறுப்புள்ள பலர் எதிர்பார்க்கின்றனர். மக்கள் தமக்குப் பின்விளைவுகள் ஏற்படும் என்று சந்தேகிக்கின்ற விடயங்களை யாழ்.பல்கலைக்கழகத்திலுள்ள இதுசம்பந்தமான கல்வியாளர்களிடமோ அல்லது அரச நிறுவனங்களிடமோ அணுகிப் பெற்றுக்கொள்ளலாம். அதைவிட்டு ஒரு ஆதாரமற்றவைகளை மட்டும் கணக்கிலெடுத்துப் போராட்டம் நடத்துவதென்பது அதிக வெற்றியைத் தராது என்றே எண்ணலாம்.

அடுத்ததாக யாழ்.மத்திய சிறைச்சாலை முன்பதாக வைக்கப் பட்ட சிலைகள் தொடர்பான எதிர்ப்பு நடவடிக்கைகளும், அது தொடர்பாக முகநூல்வழியே நடைபெற்ற போராட்டமும். இது கூட ஒரு திட்டமிட்ட நடவடிக்கையாக இருக்கும் என்று எண்ணவேண்டி இருக்கிறது. இது போன்ற நடவடிக்கைகளை முடக்கிவிட்டு மக்கள் கவனம் திசைதிருப்பப்படுகிறதா? அல்லது இது போன்ற நவடிக்கைகளை முன்னிறுத்தி அரசியற் செயற்பாடுகளில் அரசு மக்களையும், தமிழ் அரசியல்வாதிகளையும் ஈடுபடுத்த முனைகிறதா? இது போன்ற நடவடிக்கை களின் ஆரம்பம் எங்கிருந்து வருகிறது? சற்றுயோசித்துப் பார்த்தால் உண்மை விளங்கும்.

மண் அகழ்வுக்குக் காரணம்? அரசு தடை நீக்கம். காற்றாலை எதிர்ப்புப் போராட்டத்துக்கான காரணம்? அதற்கான அனுமதியைக் கொடுத்த மத்திய அரசின் அமைச்சும், திணைக்களங்களும் அந்தக் கம்பெனிகளுக்கு உரிய முறையில் வழிகாட்டத் தவறியதே. அத்துடன் அது அமையப்போகும் பிரதேசத்திலுள்ள சபைகளிலும், அது தொடர்பான அரச அதிகாரிகளிடமும் அனுமதி பெற்றுக் கொண்டு வாருங்கள் அதற்குப் பின்னர் நாமும் அதற்கான அனுமதியைத் தரலாம். என்று அவர்களை அறிவுறுத்தாதது? இலங்கையில் பொதுவாக மதுக் கடைகளை அமைப்பதற்கு முன்னர் பொலிஸ் ஊடாக அது அமையப்போகும் இடத்திலுள்ளவர்களின் அனுமதி பெறப்படுகிறது. அபிப்பிராயமும் கேட்கப்படுகிறது. ஆனால் காற்றாலை என்ற விடயம் சூழல் சம்பந்தப்பட்டது. மக்கள் வாழ்வியலோடு சம்பந்தப்பட்டது. அதோடு சம்பந்தப்படப் போகிறவர்கள் மக்கள் .எனவே மக்களுக்கு ஒரு தகுந்த விழிப்புணர்வை ஏற்படுத்தாது, இப்படியான தொடக்கங்கள்தான் மக்களைக் குழப்பி அவர்களைப் போராட வைக்கிறது. அதனை அரசியலாக்குகிறது. எனவே இதுவும் ஒரு அரசின் நெறிமுறை தவறுவதால் ஏற்படும் பின்விளைவே.

அடுத்து யாழ்.மத்திய சிறைச்சாலையின் முன்பாகத் திடீர் திடீர் என முளைத்த சிலைகள் தொடர்பானது. ஒரு சிலை அமைப்பதற்கு இத்தனை அவசரம் எதற்கு? ஏன் இரவோடு இரவாக மக்கள் உறங்கி விழித்தெழ முன்னர் அவற்றை அங்கு வைத்துத் அவைகளை திறந்து விட வேண்டும் என்ற ஆவல்? சாதாரணமாக இது போன்ற பொது இடங்களில் இப்படியான மக்கள் உணர்வுகளோடு சம்பந்தப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்தும்போது, ஆகக் குறைந்தது அது பற்றிய ஒரு செய்தியைத் தன்னும் பிரசுரித்து நடைமுறைப்படுத்தலாம். அதை விட்டு பாதாளக் கோஷ்டிகளின் நடவடிக்கைகள் போன்று செயற்படத்த முனைவதன் நோக்கம் என்ன? ஏதொ ஒரு கள்ளம் மனதில் புகுந்திருக்கின்றதென்பதே அதன் கருத்து. எனவே இது போன்ற நடவடிக்கைளின் ஆரம்பத்தை எடுத்துக் கொண்டால், அது எங்கோ ஒரு பள்ளியில் அரசியலை மையமாகக் கொண்டே முடக்கிவிடப் படுகின்றன. அவற்றுக்கு மக்கள் பலியிடப் படுகின்றனர்.

பொதுவாக இவ்வகையான செயற்பாடுகள் ஒரு அரசியல் பின்னணிகளோடு தொடங்குகின்றன. அரசியல் வாதிகளே இவற்றின் பின்னணியில் இருந்து செயற்படுகின்றனர். மக்கள் மத்தியிலே காணப்படுகின்ற முரண்பாடுகள் அறியப்பட்டு அவற்றை மூலதனமாகக் கொண்டு இவ்வாறான திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. பொதுவாகக் காகத்துக்கு ஒரு கண்மணிதான் உண்டு என்று சொல்லுவார்கள். ஆனால் ஏதாவது உணவுப் பொருளை காற்றுப்புகாத இடத்தில் ஒளித்து வையுங்கள் பார்க்கலாம். காகம் அதனைத் தேடி எடுத்து விடும். அவ்வாறானதொரு பார்வை உள்ளவர்களே அரசியல் வாதிகள். பிரச்சினைகள் எங்கிருக்கின்றன? அவற்றை எவ்வாறு தேடி எடுத்து முதலீடாக் கலாம் ? என்ற அறிவு அரசியல்வாதிகளிடத்தே நிரம்ப உண்டு. எனவே தேர்தல் நெருங்க நெருங்க மக்கள் சாதி, இன, மத, மொழி இன்னும் பல வழிகளில் கூறுபோடப் படலாம். அதற்குரிய திட்டங்கள் அரசியல்வாதிகளிடம் அதிகம் உண்டு. அவர்கள் அதற்கான ஆள் அணிகளோடும், பண பலத்தோடும் இருக்கிறார்கள். இருக்கின்ற பிரச்சினைகளை அடையாளப்படுத்தி அவற்றை ஊதிப் பெருப்பித்தும், புதிய பிரச்சினைகளை உருவாக்கியும் அவர்கள் தமது அரசியல் லாபத்தைத்தேடிக் கொள்ளுகின்ற ஆற்றல் அவர்களிடம் உண்டு. இந்த விடயத்தில் மக்களாகிய நாம் என்ன செய்யப் போகிறோம்?

அரசியலுக்குப் பலிக்கடாவாகப் போகிறோமா? இல்லை அரசியல்வாதிகளின் நல மேம்பாட்டுக்காக யதார்த்தத்தைக் கைவிட்டு அவர்களுக்கு உறுதுணையாகச் செல்லப்போறேமா? எந்தப் பிரச்சினைகள் சமூகத்தில் முன்னெடுக்கப்படுகின்ற தருணத்திலும் நீங்கள் செய்ய வேண்டியது இதுவே. சற்றுப்பொறுமை காருங்கள். அந்தப் பிரச்சினைகளில் யார் சம்பந்தப்படுகிறார்? யாரால் அது முன்னெடுக்கப்படுகிறது? யாரை முன்வைத்து அப்போராட்டம் நடைபெறுகிறது? யார் ஓடி வந்து கலந்து கொள்கிறார்கள்? யார் எல்லாம் அதற்கு நிதி தருகிறார்கள்? இவ்வாறான சிந்தனைகளே எம்மை முறையாக வழிநடத்தும். இல்லாது போனால் நாம் வெறும் கருவேப்பிலையாகத்தான் போய்விடுவோம்.






- லம்போதரன்

இலங்கைத் தீவு நாடாளுமன்றத் தேர்தலுக்கான முன் ஆயத்த நடவடிக்கை களில் ஈடுபடத் தொடங்கி விட்டது. அனைத்து அரசியல் கட்சிகளும் அதற்கேற்பவே தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் விதிவிலக்கல்ல. ஐக்கிய தேசியக் கட்சியோ பொதுசன பெரமுனவோ எப்படி ஆட்சியைக் கைப்பற்றுவது என்ற தீவிர சிந்தனையில் இருக்கின்றன. நடந்து முடிந்த சனாதிபதித் தேர்தலை வைத்தே ஐதேக வும், பொதுசன பெரமுனவும் தங்கள் வாக்குகளை எப்படி அதிகரிப்பது என்று கணக்குப் போடுகின்றன. ஐதேக உள்கட்சிப் பிரச்சினையிலிருந்து இன்னமும் மீள முடியாமல் உள்ளது ஆனாலும் புத்த மதத்தை முன்னிலைப்படுத்தி வாக்குகளை அதிகம் பெறுவது பற்றிய சிந்தனையில் ஈடுபட்டுள்ளது. ராஜபக்சாக்கள் சனாதிபதி தேர்தலில் பெற்ற வாக்குகளை மேலும் அதிகரித்து மூன்றில் இரண்டு பெரும்பான் மையை எவ்வாறு பெறலாம் என்று கணிப்பிட்டு நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.மூன்றிலிரண்டு பெரும் பான்மை பெற்றால் மாத்திரமே அரசியல் யாப்பைத் திருத்தித் தாம் நினைத்த விதி-களை அவர்களால் கொண்டு வர முடியும். ஆனால் ஐதேக வின் நிலையோ அதுவல்ல. எப்படியாவது ஆட்சியைப் பிடிக்க வேண்டும் என்பதே ஆகும்.ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தனக்கு சென்ற முறைலும் பார்க்க அதிகமான நாடாளுமன்ற உறுப் பினர்களை தருமாறு தமிழ் மக்களிடம் கேட்டுள்ளனர்.



# கூட்டமைப்புக்கு இருபது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாருங்கள் ஐதேகவுடன் ஆட்சி அமைப்போம்

**- மாசிலான் -**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அதிக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏன் தேவைப்படுகிறது என்றால் சம்பந்தன் ஒரு காரணத்தையும் சுமந்திரன் இன்னொரு காரணத்தையும் கூறுகின்றனர். சம்பந்தன் தான் வல்லமையுள்ள அரசியல் தலை வராம். தங்களுக்கு முன்னரிலும் கூடுத லான உறுப்பினர்களைத் தெரிவு செய்து தந்தால் புலிகளை அழிக்கும் பொழுது சர்வ தேசத்துக்கும் குறிப்பாக இந்தியாவுக்கும் ராஜபக்சா ஆட்சி கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி கோர முடியுமாம். தொடர்ந்து சர்வதேசத்தையும் குறிப்பாக இந்தியாவையும் ஏமாற்ற முடியாதாம். தங்களுக்கு அதிக உறுப்பினர்களைத் தந்தால் ஆட்சியாளர்களின் சர்வதேசத் தையோ, இந்தியாவையோ ஏமாற்றலாம் என்ற எண்ணத்தைத் தடுக்கலாம் என்று கூறியுள்ளார் சம்பந்தன்.

சுமந்திரனின் கூற்றுத்தான் இதற்கும் மேலே செல்கிறது. அவர் சொல்லுகிறார் ஐக்கிய தேசிய முன்னணி அடுத்த தேர்தலில் நூ ற்றுப் பதின்மூன்று உறுப்பினர்களை நாடாளுமன்றத்தில் பெற்றால் தான் ஆட்சி அமைக்க முடியும்.அவர்களுக்கு ஆட்சி அமைக்க அவ்வளவு கிடைக்குமோ தெரியவில்லை இந்நிலையில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்புக்கு இருபதுக்கும் மேல-ான எண்ணிக்கையில் உறுப்பினர்களை தந்தால் தாங்கள் ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து ஆட்சி அமைக்க முடியுமாம். எனவே தமிழ் மக்கள் ததேகூ விற்கு இருபதுக்கும் மேலான உறுப்பினர்களை நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்து தருமாறு கேட்டுள்ளார் சுமந்திரன் ஐக்கிய தேசிய முன்னணி என்று கூறினாலும் ஐக்கிய தேசியக் கட்சி என்று கூறினாலும் ஒன்று தான் என்பது யாவரும் அறிந்ததே. எனவே அடுத்த தேர்தலில் ஐதேகவி லிருந்து ரணில் வந்தாலும் சரி வேறு யார் வந்தாலும் சரி அவர்களுடன் இணைந்து ஆட்சி அமைப்பது என்பதும் ஆட்சியில் பங்குகொள்வது என்பதும் அமைச்சர்களாவதும் அதற்குள் அடங்குகிறது என்பதே பொருளாகும்.. இதைத் தான் சுமந்திரன் எதிர்பார்க்கிறார். கோத்தபாய ஆட்சியில் பங்குகொள்ளுமாறு அழைத்தால் அமைச்சர்களாவது பற்றியும் சிந்திக்கலாம் என்று அப்பொழுது சுமந்திரன் கூறியிருந்தார். ஆனால் இவர்களைக் கோத்தபாய கண்டுகொள்ளவில்லை. ஆனால் தாங்கள் இப்பொழுது இவ்வாறு கூறியதன் மூலம் மக்களிடம் அமைச்சரவையில் இடம்பெறுவதற்கான ஆணையையும் பெற்றுள்ளோம் என்று காட்டுவதற்காகவே ஆகும். சுமந்திரனுக்கோ கூட்டமைப்பினருக்கோ தமிழினத்தின் எதிர்காலம் மிகவும் இருசூழ்ந்து இருக்கிறது. பௌத்தத்தை முன்நிறுத்தி வாக்குகள் பெறவேண்டும் என்று கூறுகிற ஐதேக வை ஆதரிப்பது என்பது தமிழினத்தின் மேல் எள்ளளவும் கரிசனையோ சிந்தனையோ கொஞ்சமும் கூட கூட்டமைப்புக்கு இல்லை என்பதையே இவ்வாறான கூற்றுகள் காட்டுகின்றன.

இரண்டாயிரத்து ஒன்பதில் மக்களின் குருதி ஆறாக ஓடிக்கொண்டிருந்த நேரத்தில் மனித உயிர்களைக் கொஞ்சமும் மதிக்காது படுகொலை செய்து இனப்படு கொலை நடந்தபொழுது சர்வ தேசத்திடமோ அல்லது இந்தியாவிடமோ ஒரு வேண்டு கொளையாவது விட்டிருக்கலாமே மக்களின் சாவை நிறுத்த வழி காணுங்கள் என்று. அப்பொழுது எதுவும் கூறாது வாய் மூடி மௌனியாக இருந்து புலிகள் அழியட்டும் என்று இருந்தவர்கள் இவர்கள்.

இப்பொழுது சிறிலங்கா ஆட்சியாளர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற சர்வதேசமும் இந்தியாவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி வருகிறார்கள் போரின் வெற்றியில் ரணில் தனக்கும் பங்கு உண்டு என்கிறார், சந்திரிகா தனக்குத் தான் பெரும் பங்கு உண்டு என்கிறார், மகிந்த தான் தான் வெற்றியைக் குவித்தவர் என்கிறார். சரத் பொன்சேகா தான் தான் வெற்றியின் தளபதி என்கிறார். கூட்டைப்பு என்ன செய்தது.இரண்டாயிரத்துப்பத்தில் சனாதிபதித் தேர்தலைப் புறக்கணித்துச் சர்வதேசத்திடம் ஒரு காத்திரமான செய்தியைச் சொல்லியிருக்கலாம். தமிழினம் வேண்டுவது சன-ாதிபதி யார் என்பதல்ல. போட்டியிடும் அனைவரும் தாங்கள் தாங்கள் தான் போரை வென்றதாகக் கூறுகிறார்கள் எமது இனத்துக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும் தாயகம் வேண்டும் என்று உலக நாடுகளுக்குக் கூறியிருக்கலாம். அதைச் செய்யாது மகிந்தவைத் தோற்கடிக்க வேண்டும் என்ற இந்தியாவின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு போர்த் தளபதி சரத் பொன்சேகாவை ஆதரிக்குமாறு தமிழ் மக்களைக்கேட்டார்கள். அடுத்து 2015 இல் என்ன செய்தார்கள்? மகிந்தவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவியிலிருந்து போரை நடத்திய மகிந்தவின் பங்காளி யான மைத்திரிபால சிறிசேனாவைச் சனாதி பதியாக்க வாக்களிக்கக் கோரினார்கள். கூட்டமைப்பு சர்வதேசத்திற்குக்கு ஒன்றும் சொல்லவில்லை.இந்தியாவிற்கும் ஒன்றும் சொல்லவில்லை. மாறாக சர்வதேசம் என்று கூறும் மேற்கு நாடுகளின் சொல்லையும் இந்தியாவின் சொல்லையும் தான் கேட்டு இவ்வாறு நடந்தார்கள். கூட்டமைப்பு நினைத்திருந்தால் கொஞ்சமா வது சர்வதேசத்தையோ இந்தியாவையோ தமிழ் மக்களின் பக்கமும் திரும்ப வைத்திருக்கலாம். நீங்கள் அப்படி செய்ய வில்லை. ஏனெனில் உங்கள் கவனம் முழுமையும் ரணிலைப் பதவிக்குக் கொண்டு வருவதேயாகும்.

இப்பொழுது நல்ல ஒரு சாதகமான நிலை ஏற்பட்டுள்ளது. கடந்தகாலங்களில் விட்ட தவற்றை மீண்டும் விடாமல் பார்க்கமுடியும். ஆனால் உங்களின் சிந்தனை முழுவதும் ஐக்கியதேசியக் கட்சியின் ஆட்சியைக் கொண்டு வருவதில் இருக்கிறதே தவிரத் தமிழனத்தின் உரிமை களைப் பற்றிய சிந்தனைகள் எதுவுமே இல்லை.

கோத்தபாய சனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பின்னரான நிலைமையை உலகம் உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கியுள்ளது.அவர் அம்பாந்தோட்டைத் துறைமுக ஒப்பந்தம் பற்றியோ,மிலேனிய ஒப்பந்தம் பற்றியோ தேர்தலுக்கு முன்னர் கூறியவற்றிற்கு மாறுபாடான நிலையை எடுத்துள்ளமை இந்தியா சீனா அமெரிக்கா ஆகிய நாடுகளை எவ்வாறு அவர் கையாளப்போகிறார் என்பனவற்றுக்கு அடையாளமாகவே அமைந்துள்ளன.இதே நேரம் அவர் எதிர்க்கட்சியினரை அணுகும் முறையும், நாட்டின் முக்கியமான பதவி களில் பெரும்பாலும் இராணுவ உயரதி காரிகளையும் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளையும் நியமித்துத் தனது எதிர்கால அணுகுமுறையையும் காட்டியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல் அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் இராணுவம் வீதிகளுக்கு அழைக்கப்பட்டுள்ளது.காவற்றுறையினரின் கடைமைகளில் இராணுவ பங்களிப்பு என்பது அதிகரிக் கப்பட்டுள்ளது.முன்பு தமிழ்ப்பகுதிகளில் இருந்த இராணுவ கண்காணிப்பு பாதுகாப்பு என்பன முழுத் தீவுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு அதிகாரப்பகிர்வு கிடையாது என்று சொல்லிவிட்டார். இந்நிலையில் அவர் முழு நாட்டினதும் சனநாயகத்தைக் குழி தோண்டிப் புதைத்தால் என்ன? விட்டால் என்ன? என்ற சிந்தனை எமக்கிருக்கி வேண்டும்.1958 இலிருந்து தமிழ் மக்கள் அவசரகாலச் சட்டங்களுக்கு மத்தியில் தான் பெரும்பாலான காலத்தைக் கழித்து வந்துள்ளார்கள் இராணுவ ஆக்கிரமிப்புக்குக்குள் தான் தமிழினம் துன்பப்பட்டது.தமிழினம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி யில் இருந்தபொழுதிலும் அவர்களின் காலங்களிலும் தான் சுதந்திரமாக இருந்தார்கள். ஆனால் மற்றக் காலங்களில் இராணுவ அடக்குமுறைகளுக்குள்ளேயே காலத்தை கழித்தார்கள் என்பது வரலாறு. தமிழ் மக்கள் அவசரகாலச் சட்டத்திற்குள் துன்பப்பட்ட நேரங்களில் நாடாளுமன்றத்தில் அவசரகாலத்தை ஆதரித்தும், பின்னர் வாக்களிக்காமலும் இருந்தவர்கள் இப்பொழுது முழுநாட்டினதும் சனநாயகத்தைக் காப்பாற்றப்போவதாகக் கூறுகிறார்கள். எதற்கெடுத்தாலும் சனநாய கத்தைக் காப்பாற்றப் போகிறோம் என்று சொல்லிச் சொல்லி ஐதேக வை காப்பாற்றி வருகிறார்கள் கூட்டமைப்பினர்.

இன்று ஆட்சியினரால் மேற்கொள்ளப் படும் இராணுவப் பங்களிப்பையும் கண்காணிப்பையும் சர்வதேசம் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறது.மகிந்தவின் ஆட்சியில் நடந்த மனித உரிமை மீறல்களுக்கான எதிர்வினையை சர்வ தேசம் ஏற்படுத்த விடாமல் அன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனீவா வரை சென்று செயற்பட்டது என்பதை எவரும் மறுக்க முடியாது. இந்தியாவின் எண்ணங் களுக்கு ஏற்ப தனது பணியைச் செவ்வனே செய்து மகிந்தவைக் காப்பாற்றியது கூட்டமைப்பு.இனப்படுகொலைக்கான சான்றுகள் இல்லைஎன்றார்கள், போர்க்குற்ற விசாரணை முடிந்து விட்டது இந்த தண்டனை தான் வழங்க வேண்டியுள்ளது என்றார்கள்.மைத்திரிபால சிறிசேனாவை நெல்சன் மண்டேலாவுக்கு ஒப்பாகப் பேசினார்கள் .இவ்வாறு எல்லாம் பேசியவர்கள் இன்று அதிகமாக இருபது பேரையா வது நாடாளுமன்றத்திற்கு அனுப்பினால் ஐதேகவைக் காப்பாற்றலாம் என்கிறார்கள். உலகத்தில் சுவீற்சர்லாந்து நீதிமன்றத் தீர்ப்பு, ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத் தீர்ப்பு, இங்கிலாந்தின் ஆளும்கட்சியின் தேர்தல் அறிக்கை தொழிற் கட்சித் தலைவர்களின் கூற்று என்பன போல் பல தமிழினத்திற்கு ஆதரவான உலக பார்வையத் திருப்பியுள்ளன இதனைப்பற்றிச் சிந்தியாது ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதமராக்கும் முனைப்பில் கூட்டமைப்பு இருப்பது வேதனைக்குரியதாகும்.

உலகத்தின் பார்வையில் ஏற்பட்டுள்ள சிறிய மாற்றத்தை ஆட்சியாளர்களுக்கு எதிராக ஒருங்கிணைக்க வேண்டியது தான் நமது பொறுப்பாகும். கோத்தபாய ஆட்சி ஏற்பட்டதால் தான் உலகத்தின் பார்வையில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது. சஜித் வந்திருந்தால் நிலைமை இவ்வாறு வந்திருக்க மாட்டாது. எனவே இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாமல் விட்டோமானால் அண்மையில் இவ்வாறான சாதக நிலைமை ஏற்பட வாய்ப்பில்லாமல் போகலாம்.

# பழைய கட்சிகளின் புதிய கூட்டு ஒரு மாற்றுத் தலைமையாகுமா?



கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும், பின்னரும் தமிழ் அரசியல் பரப்பில் அது வரை தமிழ் மக்களை பொய்யுரைத்தும் , ஏமாற்றியும் அரசியல் நடத்தி வந்த அரசியற் கட்சிகளும், அதன் தலைமைகளும் சற்று விழிப்புடன் இருக்க வேண்டிய அரசியற் சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிப் பிரமுகர்கள் எவரும் இப்படியானதொரு தேர்தல் முடிவினை-யோ, தனியாகப் பெரும்பான்மை இனத்தின் வாக்கு வீத அதிகரிப்பால் கோத்தாபாய ஜனாதிபதியாக வருவார் எனவோ எதிர்பார்க்கவில்லை என்பது அவர்களின் தற்கால நடவடிக்கைகளிலிருந்து புலனாகிறது. தமிழ் அரசியல் தலைமைகளைக் காட்டிலும், முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்குத்தான் பலமாக அடி விழுந்துள்ளது எனலாம். அவர்கள் இந்நிலைமையைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. வழமையாகக் கைக்கொள்ளும் பாணியிலேயே தமது அரசியலை நடத்த முடியும் என்று எண்ணி இருந்தனர். வெற்றிவாகை சூடிக் கட்சி அமைக்கும் அரசில் தாம் பங்காளிகளாக இணைந்து ஓரிரு அமைச்சுப் பதவிகளையும் பெற்றுக் கொண்டு தமது அரசியல் பயணத்தைத் தொடரலாம் என்ற அவர்களின் எண்ணத்தை ப் பதிய அரசு தவிடுபொடியாக்கி இருக்கிறது.

இலங்கை அரசியல் வரலாற்றிலே முஸ்லிம் அங்கத்துவம் இல்லாத ஒரு மந்திரி சபை இம்முறை அமையப் பெற்றிருக்கிறது. அது மாத்திரமல்ல முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களைப்போலவே "அரசியல் கட்சிகளை நம்பி இனிமேலும் தாம் ஏமாறத் தயாரில்லை," என்பதைப்போல வாக்களித்திருக்கின்றனர். அரசியல் தலைமைகளின் சூட்சிகளுக்குள் மக்கள் அகப்படக் கூடாது என இயற்கை எண்ணியதன் விளைவு "ஒரு மக்கள் சார்ந்த எழுச்சியும் அவர்கள் சார்ந்த சக்தியும் இங்கே தாமாக ஒரு மாறுதலைக் கொண்டு வந்திருக்கிறதோ" என்றும் யோசிக்க வேண்டியதாக இருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இதய சுத்தியோடு தமிழ் மக்கள் நலன்களை மட்டும் மனதில் நிறுத்தித் தமிழ் மக்கள் வாக்களிப்பது எப்படி? தமக்குரிய நலன்களை அவர்களோடு பேசித் தீர்ப்பது எப்படி? என ஒரு மாற்று முடிவை எடுப்பதற்காக பல்கலைக் கழக மாணவர்கள் தலைமையில் கட்சிகளும் , பொது அமைப்புகளும் ஒன்று கூடினர்.தமிழர் நலன்களில் அதிக அக்கறையுடைய பொது அமைப்புகளும், அவை சார்ந்த அரசியல் அவதானிகளும் ஒன்றிணைந்து ஒரு ஆரோக்கியமான முடிவை எட்டப் புறப்பட்டபோது தமது சுய அரசியல் லாபத்தை மட்டும் கருத்தில் கொண்டு அதனை எட்டி உதைத்த பெருமை தமிழ் தேசியக் கூட்டமைப்பையே - குறிப்பாகத் தமிழரசுக் கட்சியையே - சாருகிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரும், பின்னரும் தாம் அரசியலில் ஞான சூனியங்கள் என்பதனை அவர்கள் பல வழிகளிலும் நிரூபித்திருக்கின்றனர். அந் நிலையைக் கொஞ்ச மேனும் மாற்றாது இன்றுவரை அவர்கள் செயற்பட்டுக் கொண்டு வருகின்றனர். இதனை வெளிப்படையாக மக்கள் பொது வெளிகளில் .தெரியப்படுத்தியும் வருகின்றனர். அதனை உறுதிப்படுத்துகின்றவகையில் தமிழரசுக் கட்சியின் 70 ஆவது அகவைப் பூர்த்தி விழாவிலே அவர்கள் பேசிய பேச்சுக்கள் அமைந்திருந்தன. அப் பெருந்தலைவர்களின் உள்ளக் கிடக்கை என்ன என்று மக்கள் அறிய முடிந்திருக்கிறது. அது மட்டுமல்லாது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நேர்மையற்ற பேச்சுகளும், அந்த அமைப்பிலுள்ள பங்காளிக் கட்சிகளின் ஸ்திரமற்ற நடவடிக்கைகளும், அவர்களுக்குள் தோன்றி இருக்கும் மாற்றுத் தலைமைகளுடன் இணையலாம் என்ற எண்ணமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின்பால் தமிழர்கள் கொண்ட அவநம்பிக்கையையும், அதிருப்தியையும் மேலும் அதிகரித்துள்ளது .

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் மனதில் நீண்டகாலம் மறைபொருளாகக் கிடந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் அழிவின்பால் தான் கொண்டிருந்த ஆர்வத்தை தன்னையறியாமலே வெளிப்படுத்தியிருக்கிறார் என்றே மக்கள் நம்புகின்றனர். அதனை உறுதிப்படுத்துவதுபோலக் கடந்த ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராகக் களமிறங்கிய திரு.சிவாஜிலிங்கம் ஒரு காணொளியில் சம்பந்தர் சம்பந்தப்பட்டதொரு உண்மைச் சம்பவத்தை சொல்லி இருக்கிறார். அதாவது இறுதி யுத்தத்தின்போது அமெரிக்காவும், கனடாவும் ஒன்றிணைந்து ஒரு போர் நிறுத்தத்தைக் கொண்டு வர முயற்சித்தபோது அவர் அதிலிருந்து எப்படித் தன்னை மறைபொருளாகக் கொண்டிருந்தார் என்பதே அந்தக் காணொளியில் காணும் செய்தி. அதிலே சிவாஜிலிங்கம் வெளிப்படையானதொரு விவாதத்துக்குச் சம்பந்தரை அழைத்திருக்கிறார். அந்தக் காணொளியானது சமூக வலைத் தளங்களில் வைரலாகிவருகிறது. அவை எல்லாம் சேர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் ஒரு பெரும் பிரளயத்தை உண்டு பண்ணி இருப்பதாகத் தெரிகிறது. அது மட்டுமல்லாது பேச்சாளர் சட்டத்தரணி சுமந்திரனின் கட்சிப் பிரவேசம் தொடக்கம் அவரால் கட்சிக்குள் நடத்தப்பட்டுவரும் அராஜக நடவடிக்கைகள் தொடர்பாகவும் மக்கள் காரசாரமான கருத்துக்களை முன்வைத்தும் வருகின்றனர். இந்தத் தருணத்திலேதான் தமிழரசுக் கட்சி தனது 70வது அகவைப் பூர்த்தியை யாழ்ப்பாணத்தில் கொண்டாடியது.

இதற்கிடையிலே தமிழ் தலைமைகள் வேறொருவிதமான செயற்பாடுகளில் இறங்கி இருக்கின்றனர். தமக்கியைவான தலைமைகளோடும், கட்சிகளோடும் இணைந்தும், பிணைந்தும் செயற்படுவதென்பதே அந்தப் பதிய முயற்சி. ஆனால் அவர்கள் பல வழிகளிலும் சிறு பிள்ளைத் தனமாக நடப்பதாகவும் எண்ணலாம். தற்போது தோன்றியுள்ள இந்த நெருக்கடியில் தமிழ் மக்களும், தமிழ் அரசியல் நோக்கர்களும், அவதானிகளும் இவர்கள் நடவடிக்கைகளை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வருகின்றனர். இனிவருங்காலங்களில் இவர்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும், அரசியல் காய் நகர்த்தல்களையும் தமிழ் மக்கள் இன்னும் அதிக ஆர்வத்தோடு நோக்குவதாகவே அறியலாம். இதனைப் பல மக்கள் சந்திப்புகள் உறுதிப்படுத்துவதோடு மட்டுமல்லாது, அரசியல் ஆர்வத்தோடு சமூக வலைத் தளங்களில் பல ஆரோக்கியமான பதிவுகளையிடுகின்ற பொது மக்கள் கருத்துகளிலிருந்தும் அறிந்துகொள்ளலாம்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில் பிளவு ஏற்பட்டு சட்டத்தரணி ஸ்ரீகாந்தாவும், சிவாஜிலிங்கமும் தமிழ் தேசியக் கட்சி என்றதொரு புதிய கட்சிக்குக் கீழ் ஒன்றிணைந்திருக்கிறார்கள். கட்சி அங்குரார்ப்பண நிகழ்வின் பின்னர் அவர்கள் அறிக்கையில் முன்னாள் முதலமைச்சர் நீதிபதி விக்கினேஸ்வரனுடன் இணைந்து செயற்படப்போவதாக அறிவித்துள்ளனர். அங்ஙனம் விக்கினேஸ்வரனின் தலைமையை ஏற்றுக் கொண்டு செயற்படப்போவதாக அறிவித்தவர்கள் ஏன் புதிய கட்சியைத் தொடங்கினார்கள்? அவரது கட்சியின் அங்கத்துவத்தைப் பெற்று கட்சியை இன்னும் பலப்படுத்தி அவர்களுடன் இணைந்து பணியாற்றுகின்ற நடவடிக்கையை எடுத்திருப்பார்களேயானால் அவர்கள் நடவடிக்கையை தமிழ் மக்கள் பரிபூரணமாக ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்பதே பலரின் கருத்தாகவும் இருக்கிறது. ஒரு சிறுபான்மை இனத்துக்குள் அதிக கட்சிகள் இருப்பதென்பது மேலும் அந்த இனத்தைப் பலவீனப்படுத்துகின்றதொரு செயல் வடிவமே. அது இன்னும், தமிழ் மக்கள் எண்ணத்தையும், அவர்களது வாக்கு வங்கியையும் சிதைத்துச் சின்னாபின்னப் படுத்தி விடுமோ என்று பயப்பட வேண்டியுமுள்ளது. இவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவோம் என்று கதைத்துக் கொள்கிறார்கள். ஆனால் புதிய கட்சியின் ஆரம்பமும் , அறிக்கைகளும் பிரிந்து செல்வதில்தான் அதிக அக்கறையுள்ளவர்களாக இருப்பது போல் தெரிகிறது. இணைகின்ற கட்சிகளோடு ஆசன பேரம் பேசக் கூடிய வலிமையைத் தங்கள் பால் தக்க வைத்துக் கொள்ளவே இவர்கள் தனிக் கட்சி தொடங்குவதற்குக் காரணம் என்று ஒரு கருத்தும் உண்டு. எனவே தனிக் கட்சியாக நின்று கொண்டு இணைகின்ற இவர்கள் ஒரு கட்டத்தில் இணைவை முறித்துக் கொண்டு செல்லலாம் என்பதும் அரசியல் அவதானிகள் கருத்தாகவும் உண்டு. எனவே இவை எல்லாம் தமிழ் அர சியல் பரப்பில் ஒரு நெருக்கடியை ஏற்படுத்தலாம் . அவ்வாறான நெருக்கடிகள் மேலும் இனம் சார்ந்த பலத்தை இன்னும் குறைத்துவிடும்.

தற்போது, புதிய தலைமைகள் உருவாக்குவதைப் பற்றியே அதிகம் பேசப்படுகின்ற சூழ்நிலையில் அது

**அவர்கள் நகர்வை முன்னிறுத்திச் செயற்படத் தயங்குகின்ற, மூன்றாந்தரப்பை இன்னும் நம்பி இருக்கின்ற பழைய தலைமைகள் விலகி நின்று புதிய கருத்துருவாக்கிகளுக்கு வழிவிட்டு ஒரு புதிய சக்தியோடு செயற்படக் கூடிய தமிழ் தலைமைக்கான் வளமானதொரு அரசியற் சூழலை கட்சிக்குள் கட்சிகள் உருவாக்க வேண்டும். தனித் தனியான பெயர்ப்பலகைகளோடு பயணிக்க விரும்புகிறவர்களை புறந்தள்ளிவிட்டு, கூட்டு என்ற சொல்லுக்கே இடமில்லாது ஒரு கொள்கை. ஒரு கட்சி. ஒரு தலைமை என்ற புதிய வடிவத்துக்கான நடைமுறை அரசியலைச் சாத்தியப்படுத்தவல்லதொரு கட்சியாக அது வளர்த்தெடுக்கப்பட வேண்டுமே ஒழிய பழைய கட்சிகள் தமது கொள்கையை மாற்றாது, வரையறுக்காது அதே நடைமுறையுடன் புதிய கூட்டை உருவாக்கிச் செயற்படுவதென்பது மீண்டும் தமிழ் மக்களை புதிய வடிவத்தில் ஏமாற்ற முனையும் நடவடிக்கை என்றுதான் சொல்லலாம்.**

எவ்வாறு தோற்றம் பெற வேண்டும் என்று ஆராய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு இக் கட்டுரை எழுதப்படுகிறது.

மாற்றுத் தலைமை என்றால் என்ன? மாற்றுத் தலைமை என்பது பழைய கட்சிகளினதும், தலைமைகளினதும் புதிய கூட்டாக இருக்குமேயானால் ..! அது பற்றிப் பேசுவதில் எவ்வித அர்த்தமுமில்லை என்றே எண்ணலாம். பொதுவாகத் தற்போதுள்ள தமிழ் அரசியல் முகங்கள் அத்தனையும் ஏதோ ஒரு வகையில் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள். அது சம்பந்தானாக இருக்கட்டும், மாவை சேனாதிராசாவாக இருக்கட்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் இருக்கும் முன்னாள் போராளிகள் அமைப்புக்களாக இருக்கட்டும். அதற்கு வெளியே இருப்பவர்களாக இருக்கட்டும். எல்லோரும் தற்போது ஏற்பட்டிருக்கும் அரசியற் சூழ்நிலையை எதிர்கொள்ளத் திராணியற்றவர்கள் என்பதே கடந்த மூன்று தசாப்தகாலங்களுக்கு மேலாகத் தமிழ் மக்களின் கருத்தாக இருந்தது.

இலங்கை வரலாற்றிலே சிங்களம் மட்டும் சட்டம் இயற்றப்பட்டபோது தமிழ் மக்கள் இருந்த அரசியல் சூழ்நிலைக்கே மீண்டும் வந்திருக்கிறோம். அப்போது இருந்த தமிழ் தலைமைகளால் சரிவர அச்சூழ்நிலை எதிர்கொள்ளப்படாததன் விளைவே இன்றைய இந்த நெருக்கடி நிலை தோன்றக் காரணம் எனலாம். அன்று அந்த விடயம் தமிழ்த் தலைமைகளால் முறையாக எதிர்கொள்ளப்பட்டு, ஒரு நீண்டகால அடிப்படையில் தன்னும் ஒரு வியூகம் அமைக்கப்பட்டு அந்த அரசியல் சூழ்நிலை எதிர்கொள்ளப்பட்டிருக்குமேயானால் நாம் இன்று இந்த நெருக்கடியை வலு இலுகுவாகக் கையாண்டிருக்க முடியும். தமிழ் தலைவர்கள் தாங்கள் இன்று மக்களை ஒரு இருட்டுக்குள் கொண்டு சென்று விட்டிருப்பவர்களே இன்றைய இந்த நிலைக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள். வடக்கில் மட்டுமல்ல கிழக்கில் தோன்றி இருக்கின்ற அந்தப் பாரிய அரசியல் நெருக்கடிக்கும் முக்கிய காரணமானவர்களும் இவர்களே!

இதில் வேதனை என்ன வென்றால் தமிழ் பரப்பு அரசியலை முற்றாக விளங்கிக் கொள்ளாதவராகவும், இடைச் செருகலாகவும் தமிழ் அரசுக் கட்சிக்குள் வந்து நுழைந்திருக்கின்ற சட்டத்தரணி சுமந்திரன் தமிழருக்கு வேண்டிய தீர்வைத் தீர்மானிப்பதே. சுமந்திரனைக் கட்சிக்கு உள் வாங்குவதென்ற முடிவையும், அவரே தமிழருக்கு வேண்டிய அரசியல் தீர்வைத் தீர்மானிப்பதென்றதையும் கட்சித் தலைமைகள் மட்டும் தீர்மானித்ததே ஒழிய தமிழ் மக்கள் ஒரு போதும் அதனைத் தீர்மானிக்கவும் இல்லை. அந்த முடிவை எட்டவும் இல்லை. எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தொடர்ந்தும் தாங்கள் தான் தமிழர்களுக்குத் தலைமை தாங்கப் போகிறோம் என்று முடிவெடுப்பார்களோயானால் முதலில் கட்சி ஒரு சுய விமர்சனத்துக்குள்ளாக்கப்படல் வேண்டும். மக்கள் அதிகம் விரும்பாத கட்சிக்குள் இடை நுழை பிரமுகர்கள் தமிழருக்கான முடிவை எடுப்பதில் இருந்து விலக்கப்படல் வேண்டும். கட்சி தமக்குரியதொரு உறுதியான கோட்பாட்டை வரையறுத்துத் தமிழ் மக்கள் முன்னர் வைக்க வேண்டும். தற்போது உள்ள அரசோடு இணைந்து செயற்படப் போகிறோம், மந்திரி பதவிகளைப் பெற்று தமிழருக்குச் சேவையாற்றப் போகிறோம் என்று எண்ணினால் அதனையும் தமிழ் மக்கள் முன்வைத்துத் தமிழ் மக்களின் அனுமதி பெறப்படல் வேண்டுமே ஒழிய அவர்கள் தன்னிச்சையாக ஒரு போதும் முடிவெடுக்கக் கூடாது. அப்படி முடிவு எடுக்கப்படுவதை மக்கள் ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை.


இதுவரை தமிழ் தலைமைகள் என்று சொன்னவர்கள் தீர்வு பற்றி வைத்திருந்த அத்தனை விடயங்களும் சந்திக்கு வந்துவிட்டன. எனவே தமிழ் மக்களுக்கதான தீர்வு என்று அவர்கள் முன்வைத்திருந்த இரகசிய ஒப்பந்தங்கள் அனைத்தும் செயலிழந்துவிட்டன. எனவே இனியும் தமிழர்களை ஏமாற்றாதொரு மனந் திறந்த, வெளிப்படையான அரசியல் நடவடிக்கைகளே தமிழ் மக்களுக்கு வேண்டும். இந்த விடயத்தில் கோத்தாபயவின் தலையிலான அரசு வெளிப்படையாக, தம்மால் ஏற்றுக் கொள்ளப் படக் கூடிய அரசியல் தீர்வு இது தான் என மனம் திறந்து பேசிவருவது வரவேற்கத் தக்கது. அது அவர்பால் நம்பிக்கை கொண்ட மக்களையும், அவர்பால் அவ நம்பிக்கை கொண்ட மக்களையும் ஏமாற்றாதொரு அரசியல் முன் நகர்வே. அவர் தன் ஆட்சியில் மூன்றாந்தரப்பு என்ற விடயத்துக்கே இடமில்லை என்று சொல்லி இருப்பதும் , எந்தவித சர்வதேச அழுத்தத்துக்கும் இடம் கொடுக்கப் போவதில்லை என ஜனாதிபதி மட்டுமல்ல, அவர் கீழ் பணியாற்றும் அமைச்சின் செயலாளர்கள் கூடச் சொல்லத்தொடங்கி விட்டனர். இதனைத் தமிழ் தலைமைகள் செம்மைபட விளங்கிக் கொள்ள வேண்டும்.

அவர்கள் நகர்வை முன்னிறுத்திச் செயற்படத் தயங்குகின்ற , மூன்றாந்தரப்பை இன்னும் நம்பி இருக்கின்ற பழைய தலைமைகள் விலகி நின்று புதிய கருத்துருவாக்கிகளுக்கு வழிவிட்டு ஒரு புதிய சக்தியோடு செயற்படக் கூடிய தமிழ் தலைமைக்கான வளமானதொரு அரசியற் சூழலை கட்சிக்குள் கட்சிகள் உருவாக்க வேண்டும். தனித் தனியான பெயர்ப்பலகைகளோடு பயணிக்க விரும்புகிறவர்களை புறந்தள்ளிவிட்டு, கூட்டு என்ற சொல்லுக்கே இடமில்லாது ஒரு கொள்கை. ஒரு கட்சி. ஒரு தலைமை என்ற புதிய வடிவத்துக்கான நடைமுறை அரசியலைச் சாத்தியப்படுத்தவல்லதொரு கட்சியாக அது வளர்த்தெடுக்கப்பட வேண்டுமே ஒழிய பழைய கட்சிகள் தமது கொள்கையை மாற்றாது, வரையறுக்காது அதே நடைமுறையுடன் புதிய கூட்டை உருவாக்கிச் செயற்படுவதென்பது மீண்டும் தமிழ் மக்களை புதிய வடிவத்தில் ஏமாற்ற முனையும் நடவடிக்கை என்றுதான் சொல்லலாம்.

எனவே தமிழ் மக்கள் ஒரு புதிய மாற்றத்துக்கான முயற்சியை மேற்கொண்டு செயற்படத் தொடங்கிய இச் சந்தர்ப்பத்தை மேலும் ஊக்குவிப்பவர்களாக வே அரசியல்வாதிகள் இருக்க வேண்டும். அவர்களின் தேவைகளைச் சாத்தியப் படுத்தக் கூடிய கொள்கையோடு, ஒருங்கிணைந்து செயற்படக் கூடியதொரு கட்சியாக - அமைப்பாகச் செயற்பட வேண்டியவர்களை இனங் காண்பதென்பதே இன்றைய காலத்தின் தேவை என்பதை நன்கறிந்து தமது முடிவுகளை எடுக்க வேண்டும். அதை விட்டு "தீர்வு வரும். தீர்வு வரும்" என்ற பழைய புராணத்தை அவர்கள் இன்னும் பாடிக் கொடுப்பார்களேயானால் அவர்கள் சுயநலவாதிகள். தமிழ் மக்களுக்கு எந்தவிதத்திலும் தலைமை தாங்கத் தகுதியற்றவர்கள். அவர்கள் பின்னால் செல்வதில் எந்த வித பயனுமில்லை என்று தமிழ் சமூகம் உணர வேண்டும். இதுவே இன்றைய காலத்தின் கட்டாயமாகவும் உள்ளது.

**- சர்வன் -**

# நான் வாக்காளன் சொல்லுறன், கேளுங்கோ...!



**யா**ழ்ப்பாணம் மாவட்டத்திலை சின்னச் சின்ன குற்றம் செய்யிற ஆக்கள் பொலிசிட்டை இருந்து தப்ப மணல் கடத்தல் காரரைத்தான் சந்திக்கினமாம்.. அந்தளவுக்கு யாழ்ப்பாணத்திலை வேலை செய்யிற பொலிசுக்கும் மணல் கடத்தல்காரர்களுக்கும் இடையிலை நல்ல உறவு இருக்கிதெண்டும், அரியாலையிலை கடமையில் இருக்கிற எல்லா பொலிஸ்காரரையும் உடனடியாக இடமாற்றம் செய்யுங்கோ எண்டும் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினரா இருக்கிற மு.ரெமிடியஸ் சொல்லி இருக்கிறார். இவர் ஒண்டுக்கும் பயப்பிடேல்லை. யாழ்ப்பாணத்திலை நடக்கிற சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்துவதற்கெண்டு ஒரு கலந்துரையாடலை மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலை மாவட்ட செயலகத்திலை நடந்தது. அந்தக் கலந்துரையாடலிலை பொலிஸ்காரரை வைச்சுக் கொண்டு அவைக்கு முன்னாலையே இப்பிடியானதொரு குற்றச்சாட்டை அவர் சொல்லி இருக்கிறார். மணல் கடத்தல் நடக்கிற இடங்களிலை உள்ள பொலிஸாரையும் இடமாற்றம் செய்யுங்கோ. அங்கை புதுப் பொலிஸ் காரரை நியமியுங்கோ. அப்ப தானாக மணல் கடத்தல் குறையும் எண்டும் அவர் அடிச்சுச் சொல்லி இருக்கிறார்.

அதுக்குப் பதில் சொன்ன யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் பெரியவர் மகேஷ் சேனாரட்ன, யாழ்ப்பாணத்தில் இருக்கிற மக்களுக்கு மணல் தேவையாக இருக்கு. அவையை நாங்கள் ஒண்டும் செய்லோது. அவை முறைப்படி அதுக்குரிய அனுமதியை எடுத்து அள்ளலாம். ஆனால் மண்ணைக் கொள்ளையடிச்சு எங்கடை மண்ணைக் கடத்திற மாபியாக்களைப் பிடிக்க வேணும். அதுக்குத் தேவையான முழு நடவடிக்கையையும் நாங்கள் எடுக்கிறம். ஆனால் நாங்கள் சட்டவிரோதமா மண் அள்ளுறதை முழுமையாகக் கட்டுப்படுத்த ஒத்துழைப்பினைத் தாறம். ஆனால் எங்களுக்கு மக்கள் தகவல் தந்து உதவ வேணும். அது தான் முக்கியம் எண்டு அவர் சொல்லுறார்.

ஆனால் இதைப் பாத்திட்டுச் சந்தியிலை நிக்கிற ஆறுமுகம் சொல்லுறார், எத்தினை பிரச்சினையைப் போய் பொலிசுட்டைச் சனம் சொல்லினம். அவை அதுக்கு ஒரு நடவடிக்கையும் எடுக்கிறதாக் காணேல்லை. கொக்குவில்லை ஒரு கிழவனை முன்னம் போட்டு ஒரு பெடி அடி அடி எண்டு அடிச்சவனாம். அதை அவையள் போய் பொலிசுட்டைச் சொல்லியும் அவனைப் பிடிக்கேல்லையாம். பிறகும் பிடிச்சுப் போட்டுக் கைவிட்டிட்டினமாம். உப்பிடிக் கனக்க நடந்திருக்கெண்டு சனம் அக்கறை இல்லாமல் கதைக்கினம். ஆன படியாலை சனத்துக்கு நம்பிக்கை வாற மாதிரியானதா ஒரு காரியத்தை வேணுமெண்டால் அமைச்சர் எடுக்கலாம். அவர் தன்ரை இடத்திலை இருக்கிற ஒரு ரெலிபோன் நம்பரைக் குடுத்து அதுக்கு எடுத்து இது போலை பிரச்சினையைச் சொன்னால் கூடப் பிரயோசனம் இருக்குமெண்டது வாக்காளன் எண்ட முறையிலை என்ரை யோசினையாக் கிடக்கு.

இப்ப இருக்கிற அரசாங்கத்திலை அவர் சொன்னாலும் கேப்பினம். இல்லாட்டி அங்கஜன் சொன்னாலும் கேப்பினம். ஆரெண்டாலும் இதை உடனடியாச் செய்ய வேணும். ஆனால் பொலிஸ் தரப்பிலை சொல்லி இருக்கினம் ஆறு வாள் வெட்டுக் குழுதான் யாழ்ப்பாணத்திலை இருக்கினம். அவையளை இனங் கண்டு வைச்சிருக்கிறம். வாற புது வருசத்துக்குள்ளை அவையளைப் பிடிப்பம். அது மட்டுமில்லை. கஞ்சா, வாள் வெட்டு, மணல் கொள்ளை எல்லாத்தையும் நிப்பாட்டுவம் எண்டு சொல்லியும் இருக்கினம்.

ஆனால் அவை அதைச் சொல்லிப் போட்டினம். ஆனால் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினரா இருக்கிற மு.ரெமிடியஸ் சொல்லிறார் பொலிசின்ரை துணையோடை தான் எல்லாக் களவுகளும், கைங்கரியங்களும் நடக்குதெண்டு. அப்ப எப்பிடிப் பொலிஸ் இதை நிப்பாட்டப் போகினம்? வேலிக்கு ஓணான் சாட்சியோ? உதைச் சாதாரணமா விடேலாது. உதுக்கை சூட்சுமம் கனக்கக் கிடக்கு. அது மட்டுமில்லை பொலிஸ் வாள் வெட்டுக்காரை இனம் கண்டிட்டம் எண்டு சொல்லினம். றெமிடியாஸ் சொல்லுறார் பொலிசுக்குத் தெரியாமல் நடக்காது எண்டு. அப்ப பாக்கப் போனால் பொலிஸ் உ தை நிப்பாட்டலாமோ? இல்லையோ? இப்ப எதுக்கு ஆமியை இறக்கிக் கிடக்கு?

அப்ப மணல் கொள்ளையையும், வாள் வெட்டுக் கொம்பனியளையும் ஆரோ தங்களுக்குத் தேள்வை எண்டு வளர்க்கினம்போலை. இப்பிடியான விசியங்களை மூலதனமா வைச்சு ஆரேன் கீழ்த்தரமான அரசியலை நடத்தப் பாக்கினமோ? உதைக் கண்டு பிடிக்க வேணும். பொலிஸ அப்பிடிச் சொல்லுது. ஆளுங் கட்சிக்கு ஆதரவான றெமிடியஸ் இப்பிடிச் சொல்லுறார். அப்ப அவை நினைச்சால் உந்த சூட்சுமத்தை வெளியாலை கொண்டு வரலாம்.


இப்ப பத்து வருசத்துக்கு முன்னம் புலியளிலை இருந்த ஆக்கள் கட்டின கோவணத்தைக் கண்டு எடுத்திருக் கெண்டு அறிஞ்ச உடனை அதடிக்கு ஆமி, பொலிஸ் எண்டு முப்படையளும் போய் பூதக் கண்ணாடியாலை படம் எடுத்து, இரசாயனப் பகுப்பாய்வுக்குள்ளாலை ஆர்? எப்ப கட்டினவை எண்டு அறிக்கை எடுத்து.. எத்தினை நாடகம்? ஆனால் குடா நாட்டுக்கை இருக்கிற வாள் வெட்டுக் கம்பெனியளையும் அவையளாலை கண்டு பிடிக்கேலாமல் கிடக்கு. கஞ்சா கடத்திறவனையும் கண்டு பிடிக்கேலாமைக் கிடக்கு . கள்ள மண் அள்ளுறவனையும் ஒண்டுஞ் செய்யேலாமைக் கிடக்கு . உதை அதிசயம் எண்டு சொல்லுறதோ! ஆச்சரியம் எண்டு சொல்லுறதோ? ஒண்டுமாத் தெரியேல்லை.

# வழிகாட்டுதல் என்பது வாழ்ந்து காட்டுதல்

‘உறங்கிக் கொண்டிருக்கும் தமிழரைத் தட்டி எழுப்புவது யார்?" என்று சிரித்திரன் மகுடி கேள்வி பதில் பக்கத்தில் ஒருவர் ஒரு கேள்வியைக் கேட்டிருந்தார். அதற்கு 'அனுராதபுரத்தில் ரயில் ஏறும் சிங்கள சகோதரர்கள்." என்று பதிலளித்திருந்தார் சிரித்திரன் சுந்தர் அவர்கள். பல்கலைக் கழகம் பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது. மனிதர்களை அல்ல. என்று பிறிதோர் கேள்விக்கு பதிலளித்தவரும் சுந்தர் அவர்களே. சிரித்திரன் என்ற நகைச்சுவை மாத சஞ்சிகையினை இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக வெளியிட்டு அதன் ஊடாகச் சமுதாயத்திற்கு நேர் வழி காட்டி நின்றவர் சுந்தர் அவர்கள். அவர் மாமனிதர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் சிறு பத்திரிகையொன்றின் திருவள்ளுவராண்டு 2050,கார்த்திகை 29ஆம் திகதிய வாரமலரில் வெளிவந்திருக்கக்கூடிய செய்தி விமரிசனம் தொடர்பில் சில பதிவுகளை பொது வாசகர் முன் வைப்பதற்கு வசதியா-கவே மேற்சுட்டிய சிரித்திரன் கேள்வி பதில் பகுதியைக் குறிப்பிட்டோம்.

அப்பத்திரிகையின் 111 இலக்கப் பக்கத்தில் 'தமிழர்கள்



நடுத்தெருவில் நிற்பதற்கு தமிழ்ப் புத்தி ஜீவிகளும் காரணம்" என்ற தலைப்பில் சிற்சில விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. கடந்த 11 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்ற நூல் வெளியீட்டு விழாவில் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் ஆற்றிய உரையினை முன்னிலைப் படுத்தியே அவ்விடயங்கள் விவாதிக்கப் பட்டுள்ளன

பட்டி மண்டபம் விவாத அரங்கு போன்றவற்றில் இரு தரப்பினர் பங்கேற்றுத் தத்தம் அணி சார்ந்து விவாதிப்பது போல பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களைத் தமிழ் புத்தி ஜீவிகளின் சார்பில் பேச வந்தவராகவும் அக் கட்டுரை ஆசிரியர் பேராசிரியரது உரையினை மறுத்துத் தான் ஊடகங்கள் சார்பில் வாதிடுபவராகவும் சிற்சில விடயங்களை முன்வைத்துள்ளார்

அத்துடன் இனி வருங்காலமதில் தமிழ் மக்கள் தொடர்பில் புத்தி ஜீவிகள் யாது செய்ய வேண்டும் என்பதையும் அறிவுறுத்த முற்படுகின்றார்

பேராசிரியர் அவர்கள் தமது உரையின் போது இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் எற்பாட்டால் உருவான 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தில் தமிழ் மக்களுக்கானஉரிமைகள் இருந்தனஎனினும் அவற்றை அன்றைய ஊடகங்கள் வெளியிடத் தவறிவிட்டிருந்தன


உண்மையில் 13 ஆவதுதிருத்தச் சட்ட மூலத்தை ஊடகங்கள் வெளியிட்டிருந்தால் இன்று தமிழ் மக்களின் நிலை வேறுவிதமாக இருந்திருக்கும் இது தவிர ஜனாதிபதத் தேர்தலின் போதுதமிழ் அரசியல் கட்சிகளை ஒரு நிலைப்படுத்தி யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்திற்குஅரசியல் பற்றி தெரிந்திருக்கவில்லை

என்பன போன்ற விடயங்களை குறிப்பிட்டிருந்ததாக கூறி புத்தி ஜீவிகள் என்ற அடிப்படையில் தமிழினத்தை வழிப்படுத்துவதில் அவர்கள் ஆற்றிய அரசிய ல் பணி என்ன என்பது தான் நம் கேள்வி என்ற வினா எழுப்பியுள்ள கட்டுரை ஆசிரியர் இன்று தமி ழினம் நடுத் தெருவில் நிற்பதற்கு எங்கள் தமிழ் புத்தி ஜீவி கள் மௌனம் காத்து நின்றமையே காரணமாகும் எனவும் அழித்துக் கூறுகின்றார்.தமிழ்புத்திஜீவிகள் என்றால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் பேராசிரியர் மற்றும் அதற்கு இணையான பதவி நிலைகளில் உள்ளவர்களே எனப் பொருள் கொண்டு வாதிடுபவராகவே மேற்படி கட்டுரை ஆசிரியர் தென்படுகிறார்.

பல்கலைக் கழகம் போன்ற நிறுவனங்களை நிர்வகிப்பதற்கெனப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு உயர் கல்வி அமைச்சுப் போன்ற நிறுவன அமைப்புகள் தொழிற்படுகின்றன. இவை பல்கலைக் கழகம் போன்ற நிறுவனங்களுக்கு விரிவுரையாளர். பேராசிரியர் போன்ற பதவி நிலைகளுக்குத் தெரிவாகும் நபர்கள் குறிப்பிட்ட சில தகுதிப்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டுமென நிபந்தனை விதித்துள்ளன. அந்தந்தத் தகுதிப் பாடுகள் தராதரங்களைப் பூர்த்தி செய்தவர்கள் நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டவர்கள் அந்தந்தப் பதவி நிலைகளில் பணியமர்த்தப் படுகின்றனர். இவர்களுக்குரிய சம்பளம் பதிவியுயர்வு பிரசலுகைகள் என்பன பணிக்கமர்த்திய நிறுவனங்களினாலேயே வழங்கப்படுகின்றன.

பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்தவர்களில் ஒரு பகுதியினர் கல்வி சாரா ஊழியர்கள் என்று அழைக்கப் படுகின்றனர். மறு பகுதியினர் கல்விசார் ஊழியர்கள் என்றே பேசப்பட வேண்டும் ஆனால் அவ்வாறான சொற்பதங்கள் மிக அருந்தலாகவே பயன்படுத்தப்படுகின்றது. பெரும்பாலும் விரிவுரையாளர், பேராசிரியர் என்றே அழைக்கப்படுகின்றனர்.

ஊழியர் ஒருவர் தமது தொழில்சார் மேன்மைகள் அபிலாசைகள் இலட்சியங்களை அடைவதற்குத் தமது தொழில் விசுவாசத்துடனும் பற்றுதியுடனும் பணியாற்ற வேண்டியது




அவசியம். தவிரவும் அவர்களுக்கென்று ஒரு குடும்பப் பொறுப்புகள் உள்ளன. அவையாவற்றையும் கவனித்த பின்பே சமூகம்சார் . அரசியல் சார் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட முடியும்.

தமது பதவி நிலை துறந்து அல்லது பதிவி நிலைகளில் இருந்தவாறே சமூகத்திற்காக தம்மை அர்பணித்தவர்களும் இல்லாமல் இல்லை. கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் மதியுரைஞராக விளங்கியதை உலகம் இன்னும் மறக்கவில்லை அ.வரதராஜப் பெருமாள், மு.திருநாவுக்கரசு போன்றவர்கள் தத்தமது வழிகளில் பணியாற்றுகின்றனர்.

1980 களில் நடுப்பகுதியில் இலங்கை அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் ஓர் உறுப்பினராகப் பேராசிரியர் கா.சிவத்தம்பிஅவர்கள் பணியாற்றியிருந்தார்

முறிந்தபனை நூலை எழுதி வெளியிட்டவர்களுள் ஒருவரான ராஜினி திராணகம. அவர் யாழ் பல்கலைக் கழகத்தைச் சார்ந்தவர் ஆவார்.

அவருக்கு முன்பிருந்தவர்கள் சமூகத்தைப் பல்கலைக் கழத்தினுள் பார்த்தார்கள் ஆனால் பேராசிரியர் அ.துரைராசா அவர்கள் பல்கலைக்கழகத்தைச் சமூகத்தினுள் கொண்டு வந்தார் என்று கூறுமளவிற்குப் பேராசிரியர் அ.துரைராசா அவர்கள் தம் காலத்தில் சிறப்பாகப் பணியாற்றியிருந்தார்.

யாழ் பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அகைதொழிலாளர் கல்வி போன்ற கற்கை நெறிகள் பேராசிரியர் அ.துரைராசா அவர்களது காலத்திலேயே ஸ்தாபிக்கப் பட்டதாகும் பேராசிரியரது மறைவின் போது நாட்டுமக்கள் அனைவரும் சோகத்தில் மூழ்கியது ஊரறிந்த விடயமே.

'இலங்கை மக்கள் என்பதற்காக தமிழ் மக்கள் என்ற அடையாளத்தையோ! தமிழ் என்பதற்காக இலங்கையர்கள் என்ற அடையாளத்தையோ! நாங்கள் இழந்து விட முடியாது." என்று நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் யுத்தத்திற்குப் பிந்திய எதிர் காலத்தில் தமிழ் மக்களுக்குரிய அரசியல் செல் நெறியினை வடிவமைத்தார்.

வழி காட்டுதல் என்பது வாழ்ந்து காட்டுதல் என்றொரு அனுபவ மொழிப் புழக்கத்தில் உள்ளது. பல்கலைக் கழகம் போன்ற நிறுவனங்கள் தவிர வெளியே வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருக்கின்ற சான்றோர்கள் பலர் உள்ளனர்.

அரசியல் களத்தில் புகழ் பெறவிரும்பாவிட்டாலும் சமூகத்தில் அவர்கள் சிறந்த நீதிமான்களாகவே மறைந்தும் மறையாமலும் வாழ்கின்றனர்.

ஓர் எடுத்துக் காட்டாக சொல்வதென்றால் காந்தி ஐயா காந்தி மாஸ்ரர் என்று அழைக்கப் பெற்ற பொ. கந்தையா அவர்கள் ஆசிரியராகப் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பொழுது, அது நாள் வரையான தனது சம்பாத்தியம், அதாவது ஆசிரியப் பணிக்கு வந்த நாள் முதல் மாத சம்பளத்திலிருந்து ஓய்வு பெறும் வரை பெற்றுக் கொண்ட சம்பளம் மற்றும் செலவு விபரங்களை ஓர் அட்டவணையாகத் தயாரித்து அச்சிட்டு சமூகத்தினர் அனைவருக்கும் விநியோகித்திருந்தார். தம்முடைய உணவுக்கான செலவு வீட்டு வாடகை அனைத்து வரவு செலவு விபரங்கயைும் மக்கள் முன் வைத்ததலை சிறந்த நீதமானாகக் காந்தி ஐயா வாழ்ந்தவர்.

27.03.1982 இல் மட்டக்களப்பு காரைதீவில் பிறந்த சாமித்தம்பி மயில்வாகனன் சுவாமி விபுலாநந்தரானதை உலகம் அறியும். சுவாமிகளது வெள்ளை நிற மல்லிகையே என்ற பாடல் உலகப் பிரசித்தமானது


இன்றும் கூட காலம் கடந்து போய்விடவில்லை. மக்களது இரட்சகர்கள் அரசியல் வழிகாட்டிகள் பெருந்தலைவர்கள் என்று கூறிக் கொள்பவர்கள் மாகாண சபை பாராளுமன்றம் போன்ற நிறுவனங்களில் பதவி வகிக்கும்போது தாம் சம்பாதித்து எவ்வளவு அனுபவிக்கும் சுகபோகங்கள் எவை என்பவற்றை வெளிப்படுத்தினாலே அது சிறந்தொருமுன் மாதிரியாக அமையும்

தமிழகத்தில் முதலமைச்சராக விளங்கிய காமராஜர் அவர்கள் காமமானபோது அவர் சம்பாதித்து வைத்திருந்த சொத்து விபரம் எதுவெனஉலகம் அறியும். பெருந்தலைவர் காமராஜர் என்று கொண்டாடப்படுபவர் கர்ம வீரர்காமராஜர் அவர்கள்.

இங்கே இலங்கையின் வடக்கு,கிழக்கு,மலையகம் மற்றும் நாட்டின் இதர பகுதிகளில் வாழும் தமிழ் மக்களது தனிப் பெருந்தலைவர்களாக, இரட்சகர்களாக, நீதிமான்களாக தம்மைக் காட்சிப் படுத்த ஆசைப் படுபவர்கள் காமராஜர் அவர்களது வாழ்க்கை முறையினை வசதியாக மறந்து விடுகின்றனர்.

இங்கே வாழும் வசதி வாய்ப்புக்கள் குறைந்த வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்கள் படுகின்ற இன்னல்கள் துயரங்கள் குறித்தோ, அரிசி விலை உயர்வது பற்றியோ பேசுவதற்கோ எழுதுவதற்கோ சமூகத்திற்கு வழிகாட்ட வெளிக்கிறம்பியவர்கள் விரும்புவதில்லை. இணுவையூர் சிவருசி போன்ற அன்பர்கள் அன்றாடம் செய்யும் சமுதாயப் பணிகளைக் கண்டு கொள்ள இரட்சகர்கள் நீதிமான்கள் பெருந்தலைவர்கள் விரும்புவதில்லை.

அரசாங்கத்தின் செலவு நன்மை கருதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதிக்குரிய உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை விடுத்துத் தமது சொந்த வீட்டிலிருந்து பணியாற்றுவதும் சாதாரண பயணிகள்



விமானத்தில் பயணம் செய்வதும், அலுவலகப் பணியாட்கள் எண்ணிக்கையைக் குறைத்ததும் சிறந்த முன் மாதிரியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என்பதெல்லாம் வெளிப்படையான உண்மை

இவை யாவற்றையும் கவனத்தில் எடுக்காதவர்கள் போலவே தமிழ் சமூகத்திற்கு வழி காட்ட ஆசைப்படும் பெருந் தலைவர்களும், இரட்சகர்களும், நீதிமான்களும் காணப்படுகின்றனர்

**- தி.உதயசூரியன் -**

இந்த நீதிமான்கள் விரும்புவதெல்லாம் தேர்தலின்போது வாக்காளப் பெருமக்கள் தாம் சுட்டிக் காட்டும் சின்னத்திற்கு எதிரே புள்ளடிபோட வேண்டும் என்பது மட்டும் தான். அது தான் இவர்கள் காட்டும் வழி?

பகுதி - 2

# காற்றாலை ஆற்றலின் தீமைகள்



சென்ற வாரம், நாங்கள் காற்றாலை ஆற்றலின் நன்மைகளைப் பார்த்தோம், எனவே இப்போது தீமைகளைப் பார்ப்போம். காற்றின் ஆற்றல் NIMBY காரணி முக்கிய பங்கு வகிப்பதில் பல குறைபாடுகளைக் கொண்டுள்ளது.

**1. காற்று ஏற்ற இறக்கங்கள்**

காற்றாலை ஆற்றல் சூரிய ஆற்றலுடன் ஒத்த குறைபாட்டைக் கொண்டுள்ளது, அது நிலையானது அல்ல. காற்று நிலையானது மற்றும் ஒருபோதும் வெளியேறாது என்றாலும், காற்றின் வேகம் மாறும். இது காற்றாலை விசையாழியின் செயல்திறனுக்கு கடுமையான சிக்கல்களை ஏற்படுத்தும். காற்றாலை மின்சக்திக்கு எந்தெந்த இடங்கள் பொருத்தமானவை என்பதை ஆய்வு செய்ய பயன்பாட்டு நிறுவனங்கள் கணிசமான நேரத்தையும் பணத்தையும் முதலீடு செய்கின்றன.

ஒரு காற்று விசையாழி திறமையாக இருக்க, அதற்கு போதுமான காற்றாலை ஆற்றல் இருக்க வேண்டும். இந்த காரணத்திற்காக, மலைகளின் மேல் அல்லது கடலுக்கு வெளியே காற்று விசையாழிகளைக் காணலாம். இந்த இடங்களில், காற்றின் சக்தியைக் குறைக்க நில தடைகள் குறைவாக உள்ளன.

**2. காற்று விசையாழிகள் விலை உயர்ந்தவை**

செலவுகள் குறைந்து வருகின்ற போதிலும், காற்று விசையாழிகள் இன்னும் மிகவும் விலை உயர்ந்தவை. முதலில், ஒரு பொறியியலாளர் ஒரு தள கணக்கெடுப்பை மேற்கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் காற்றின் வேகத்தை அளவிட ஒரு ஆராய்ச்சி விசையாழியை அமைப்பது இதில் அடங்கும். போதுமான தாகக் கருதப்பட்டால், ஒரு காற்றாலை விசையாழி வாங்கப்பட்டு, கொண்டு செல்லப்பட்டு நிறுவப்பட வேண்டும். இந்த செயல்முறைகள் அனைத்தும் காற்றாலை விசையாழிகளை வாங்குவதற்கும் நிறுவுவதற்கும் அதிக செலவில் பங்களிக்கின்றன.

காற்று விசையாழிகள் கட்டுமானத்தில் உள்ளன.

காற்று விசையாழிகளை நிறுவுவது ஒரு விலையுயர்ந்த செயல்.

மேற்கண்டவற்றை கடல் காற்று பண்ணைகளுக்கு நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளும்போது, செலவுகள் மிக அதிகமாகின்றன. கடலில் கட்டமைப்புகளை நிறுவுவது நிலத்தை விட மிகவும் சிக்கலானது. சில நிறுவனங்கள் கடலில் காற்று விசையாழிகளைக் கொண்டு செல்லவும் நிறுவவும் கூடிய பெஸ்போக் கப்பல்களைக் கூட நியமித்துள்ளன

**3. காற்று விசையாழிகள் வனவிலங்குகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன**

காற்றாலை விசையாழிகள் வனவிலங்குகளுக்கு அச்சுறுத்தலாக இருப்பதை நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம் – முதன்மையாக பறவைகள் மற்றும் வௌவால்கள். இருப்பினும், ஆராய்ச்சியாளர்கள் இப்போது மனிதனால் உருவாக்கப்பட்ட மற்ற கட்டமைப்புகளை விட வனவிலங்குகளுக்கு அச்சுறுத்தல் குறைவாக இருப்பதாக நம்புகின்றனர்.

காற்றாலை விசையாழிகளைக் காட்டிலும் செல்போன் மாஸ்ட்கள் மற்றும் ரேடியோ கோபுரங்கள் போன்ற நிறுவல்கள் பறவைகளுக்கு மிகவும் ஆபத்தானவை. ஆயினும்கூட, காற்றாலை விசையாழிகள் பறவை மற்றும் மட்டை மக்களிடையே இறப்பு விகிதங்களுக்கு இன்னும் பங்களிக்கின்றன.

**4. காற்று விசையாழிகள் சத்தமாக இருக்கின்றன**

காற்று விசையாழிகளின் முக்கிய குறைபாடுகளில் ஒன்று அவை உருவாக்கும் ஒலி மாசுபாடு ஆகும். நீங்கள் சில நேரங்களில் காற்றின் திசையைப் பொறுத்து நூற்றுக்கணக்கான மீட்டர் தொலைவில் இருந்து அவற்றைக் கேட்கலாம். பல காற்றாலை விசையாழிகளை சரியான காற்றின் திசையுடன் இணைக்கவும், கேட்கக்கூடிய விளைவுகள் மிக அதிகமாக இருக்கும். இந்த பிரச்சினை காற்றாலை ஆற்றலின் மிகப்பெரிய தாக்கங்களில் ஒன்றாகும்.

காற்று விசையாழிகளில் இருந்து வரும் சத்த மாசுபாடு பல வீட்டு உரிமையாளர்களின் வாழ்க்கையை பாழாக்கியுள்ளது. மக்கள்தொகை நிறைந்த பகுதிகளிலிருந்து தூரத்தில் அவற்றை நிறுவ பெரும்பாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டாலும், அவை சில நேரங்களில் மக்கள் வசிக்கும் இடத்திற்கு மிக அருகில் கட்டமைக்கப்படுகின்றன. இதனால்தான் புதிய காற்றாலைகள் பெரும்பாலும் மக்கள் ஆட்சேபனைக்கு எதிராக வருகின்றன.

**5. காற்று விசையாழிகள் காட்சி மாசுபாட்டை உருவாக்குகின்றன**

காற்று விசையாழிகளின் மற்றொரு குறைபாடு அவை உருவாக்கும் காட்சி மாசுபாடு. காற்று விசையாழிகளின் தோற்றத்தை நிறைய பேர் விரும்பினாலும், மற்றவர்கள் விரும்புவதில்லை, பலர் அவற்றை நிலப்பரப்பில் ஒரு களங்கமாகப் பார்க்கிறார்கள். எவ்வாறாயினும், இது தனிப்பட்ட கருத்துக்கு வரும். நாங்கள் அதிகமான காற்றாலைகளை உருவாக்கும் போது, பொதுமக்கள் ஏற்றுக்கொள்வது மிகவும் பொதுவானதாகி வருகிறது.

**தீர்மானம்**

எனவே காற்றின் ஆற்றலின் மாறுபட்ட நன்மை தீமைகளின் பட்டியல் எங்களிடம் உள்ளது. கருத்தில் கொள்ள பல குறைபாடுகள் இருந்தாலும், காற்று இன்று கிடைக்கக்கூடிய தூய்மையான மற்றும் மிகவும் சூழல் நட்பு ஆற்றல் ஆதாரங்களில் ஒன்றாக உள்ளது.

காற்று விசையாழிகள் மற்றும் அவற்றின் கத்திகள் இருப்பதை நீங்கள் விரும்புகிறீர்களோ அல்லது வெறுக்கிறீர்களோ, புவி வெப்பமடைதலுக்கு எதிரான எங்கள் போராட்டத்தில் இந்த தொழில்நுட்பம் முக்கியமானது. காற்றிலிருந்து நமது சக்தியை அதிக அளவில் உருவாக்குவதன் மூலம், புதை படிவ எரிபொருட்களை உட்கொண்டு, மண்ணை மாசுபடுத்தும் வழக்கமான மின் உற்பத்தி நிலையங்களின் மீதான நம்பகத்தன்மையை குறைக்க முடிகிறது.

நன்றி : வணக்கம் லண்டன்.

---


# தட்டிவானை நினைவுபடுத்தும் திலக்ஸ்ஸின் ஓவியம்





வல்வெட்டித்துறையை சேர்ந்த வல்வை சுலக்ஸனே கலைவண்ணத்தில் தட்டிவானை ஓவியமாக 16 மணித்தியாலங்களில் வரைந்துள்ளார். பழைய நினைவுகளை மீட்கும் வகையில் அவர் வரைந்த ஓவியத்திற்கு பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். தமிழர் தாயகப் பகுதியில் நீண்டகாலமாக பாவனையில் இருந்த தட்டிவான் போர்ச் சூழல் காலப்பகுதியில் – பேருந்து மிகவும் குறைவாக இருந்த காலத்தில் – முக்கியமான போக்குவரத்துச் சாதனமாக மக்களின் கவனத்தைப் பெற்றிருந்தது. 90 க்கு முன்னர் யாழ். நகரெங்கும் அதிகமான தட்டிவான்கள் புழக்கத்தில் இருந்தது. பயணங்களின் நினைவுகளாகப் பலரின் ஞாபகத்தில் இன்னும் இருக்கிறது. அதுவும் பருத்தித்துறை, கொடிகாமம், நெல்லியடி மக்கள் தட்டிவானை மறக்கமாட்டார்கள். இந்த நகரங்களிலேயே அதிக மாகக் காணப்பட்ட தட்டிவான் பயணங்களை நினைவுபடுத்துவதாக நெல்லியடி ஓவியம் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எண்ணக்கருவுக்கு அமைய இலங்கையை அழகுபடுத்தும் வேலைத்திட்டம் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் யாழ். குடாநாட்டிலும் பல முக்கிய கேந்திர நிலையங்களில் அவ்வாறான ஓவியங்கள் பல வரையப்பட்டுக் கொண்டிருக்கின்றன. வீதியோரங்களிலுள்ள வெற்றுச் சுவர்களை ஓவியங்கள் மூலம் அழகுபடுத்தும் பணியினை இளைஞர்கள், யுவதிகள் மேற்கொண்டு வருகின்றனர். அவ்வாறான செயற்திட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நெல்லியடியிலும் ஒரு இளைஞரால் முன்னெடுக்கப் பட்டிருக்கிறது. யாழ்.மண்ணில் சில வருடங்களுக்கு முன்னர் இருந்து போக்குவரத்துத் துறையில் கோலோச்சியதும், யாழ். மண்ணின் அடையாளங்களில் ஒன்றுமான தட்டிவானின் உருவத்தை நெல்லியடிச் சந்தியில் ஒரு இளைஞர் வரைந்திருக்கிறார். அவரால் வரையப்பட்ட தட்டிவான் சுவர் ஓவியம் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது.



# அடையாளம்

° திருமதி ரதிதேவி கந்தசாமி என்ற இயற்பெயரைக் கொண்ட தாமரைச் செல்வி வன்னி மாவட்டத்தில் உள்ள கிளிநொச்சியைச் சேர்ந்த பரந்தனைப் பிறப்பிடதாகக் கொண்டவர். இவர் ஒரு பட்டதாரி ஆசரியர். 1973 முதல் எழுதிவருகிறார். ஈழத்துப் பெண் எழுத்தாளர் வரிசையில் முக்கிய மானவர். சிறுகதை, நாவல், குறுநாவல் மற்றும் ஓவிய ஆகிய தறைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டதோடு பல பரிசில்களைப் பெற்றவர். அவரது பச்சை வயல் கனவு என்ற நாவல் அரச சாகித்திய விருதினை வென்றது என்பது குறிப்பிடக் கூடியது.

இன்றைய பொழுது மிகவும் கவலையான மனநிலையுடன் ஆரம்பித்ததில் எனக்கும் வருத்தம் தான். என்றைக்கு, காவல் பணிமனையினுள் நீலச் சீருடையுடன் ஒரு பணியாளனாய் நுழைந்தேனோ அன்றையிலிருந்தே என் மன உணர்வுகளைச் சமப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. ஆனாலும் இன்றைய பொழுது போலவே பல பொழுதுகளில் அந்தச் சமப்படுத்தல் எனக்குள் நிகழாமலே போய்விடுகிறது.

மேஜைமீது விரிக்கப்பட்ட வெள்ளைத் துணியின் மீது அந்த எலும்புக்கூடு வைக்கப்பட்டிருந்தது. பழுப்பு நிறத்தில் வினோதமான ஒருகோணத்தில் கை கால் வெவ்வேறாகக் கிடந்த அதைப் பார்க்கும்போது நெஞ்சுக் கூட்டுக்குள் குளிர் பரவியது போல் இருந்தது. நெஞ்செலும்பின் ஒரு பகுதி நொறுங்கிக் கிடந்தது. இது யாருக்குச் சொந்தமான எச்சம்...

கிளிநொச்சி நகரத்தை மீட்டெடுத்த இந்த ஒரு வருட காலமாக இப்படி எத்தனை எலும்புக்கூடுகளைக் கண்டு எடுத்தாயிற்று. வாய்க்கால் கரைகளில்... பற்றைகள் மூடிக்கிடந்த கொல்லைப் புறங்களில்... மலசலக் கூடங்களின் குழிகளில்... கிணறுகளின் அடியில்... அதுவும் நகரத்திற்கு மக்கள் திரும்பிக் கொண்டிருக்கும் இந்த நாட்களில்... அதிகமாகவே கண்டுபிடிக்கப்படுகிறது.

தங்கள் காணிகளைத் துப்பரவு செய்யும்போதும் கிணறுகளை இறைக்குபோதும் ஆவெனத் திறந்து கிடக்கும் மலசலக் குழிகளைப் பார்க்கும் போதும் எலும்புக்கூடுகளைப் பார்த்துவிட்டு அலறியடித்துக் கொண்டு மக்கள் எங்களிடம்தான் ஓடி வருகிறார்கள். யாரோ எவரோ என்ற பதைபதைப்புடன் செய்தி எங்கும் பரவிவிடும். நாங்கள் எலும்புக்கூட்டை எடுத்து ஆஸ்பத்திரிக்கு அனுப்ப, வைத்தியர் தன் பகுப்பாய்வு அறிக்கையுடன் எமது பணிமனைக்கு அனுப்பிவைப்பார். அங்கும் இங்குமாய் சனங்கள் அடையாளம் காண அலையும்.

இப்படி வெள்ளைத்துணி விரிப்பில் மூக்கை லேசாய் நெருடும் மணத்துடன் கிடைக்கும் ஒவ்வொரு எலும்புக்கூடுகளைப் பார்க்கும் போதும் மனதுக்குள் சொல்லமுடியாத துயரம் பொங்கும். அந்த வரிசையில் இது இன்னொரு எலும்புக்கூடு.

சிறிது காலம் முன்புவரை ரத்தமும் சதையுமாக இருந்த உடல். பத்து நாட்களுக்கு முன்பு வந்த தகவலைக் கொண்டுதான் இந்த எலும்புக்கூட்டைப் போய்ப் பார்த்தோம். வேலி பாய்ந்து ஓட முற்பட்ட அந்தக்கணத்தில் சுடப்பட்டு வேலிமேலேயே தொங்கிக் கொண்டிருந்த அதே நிலையிலேயே எலும்புக்கூடாகப் போயிருந்த மனிதன். இது அவனுடைய காணியாக இருக்கலாம். அல்லது ஓடிவந்த பாதையாக இருக்கலாம். உயிர்தப்பும் ஆசையில் ஓடி வந்து வேலிபாய்ந்த அந்தக் கடைசித் தருணத்தில் நிகழ்ந்த மரணம். தொங்கிய நிலையிலேயே மழையும் வெயிலும் பட்டு தசையும் இரத்தமும் காய்ந்து கரைந்து காணாமல் போயிருந்த தேகம். நெஞ்சின் பக்க எலும்பும் காற்பகுதியும் நொறுங்கிக் கிடந்த கோலம். வேலி ஏறிப் பாய்கின்ற அந்தக் கடைசிவினாடியில் கூட எப்படியும் தப்பி விடுவோம் என்ற நம்பிக்கையோடு இருந்திருப்பான், பாவம்.

மிதிவெடிகள் இருக்குமா என்று கவனமாக ஆராய்ந்து பற்றைகள் கடந்து அந்த வேலியை அடையப்பட்டபாடு. கிட்டத்தட்ட மூன்று நான்கு வருடங்களாக இந்த நிலையில் தொங்கிக் கொண்டிருக்க வேண்டும் என்று தோன்றியது.

எதற்காக இங்கு வந்திருப்பான்...

இடம்பெயர்ந்து ஓடிப்போன இடங்களில் பசி பட்டினி தாளாமல் தனது வீட்டுப்பொருட்களை எடுக்கவோ அல்லது தனது காணியுள் உள்ள தேங்காய்களைப் பிடுங்கி வரவோ அவன் வந்திருக்கக்கூடும். ஓவென்று வெறிச்சிட்டுக் கிடந்த ஊரில் இராணுவத்தைக் கண்டுவிட்டு அவன் ஓடித்தப்ப முயற்சித்திருக்கிறான். சூடு விழுந்த அந்தக் கடைசி வினாடியில் இவன் என்ன நினைத்திருப்பான்... தன்னை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மனைவி பிள்ளைகளை நினைத்திருப்பானோ...

அய்யோ... யாருக்கும் தெரியாமலே செத்துப்போய் விடுவேனோ? என்று பதைபதைத்திருப்பானோ.

இப்படி வருஷக்கணக்கில் இதே வேலியிலேயே தொங்கிக் கொண்டிருப்போம் என்று இவன் கனவுகூட கண்டிருக்கமாட்டான்.

நெஞ்சுக்குள் பாரமாய் கனத்தது.

நான் அந்த அறையைவிட்டு முன்பக்கம் வந்து மேஜையில் அமர்ந்தேன். நேர் எதிரே வீதி.


வீதியில் நிறைய சனங்களின் நடமாட்டம். மூட்டை முடிச்சுக்களை ஏற்றிக்கொண்டு ஆடிஅசைந்து கொண்டு ஒரு மாட்டுவண்டி கடந்து போனது.

அழிந்துபோன நகரத்துக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் மக்கள்... எதிர்ப்புறம் தரைமட்டமாய்ப்போன கட்டடக் கற்களை அப்புறப்படுத்திவிட்டுப் புதிதாய் மண்சுவர் எழுப்பி தடைகள் கட்டிக் கொண்டிருந்தார்கள்.

அடையாளம் காணப்படுவதற்காக இங்கே எலும்புக்கூடு வைக்கப்பட்டிருக்கும் செய்தி இன்றைய பத்திரிகையில் வந்திருந்தது. பார்த்துவிட்டு வரிசையாய் வரப்போகிறார்கள்.

வைத்தியரின் அறிக்கைப்படி இது முப்பத்திரண்டிலிருந்து முப்பத்தியைந்து வயதுவரையுள்ள ஆணின் எலும்புக்கூடு. தலையிலும் இடதுமார்பிலும் சூடுபட்டதால் நிகழ்ந்த மரணம்.

இளவயது மனிதன். இவனுடைய பெயர் பரமுவாகவோ பாலச்சந்திரனாகவோ இருக்கலாம். இவனுக்கு ஓர் இளம் மனைவி இருக்கக்கூடும். இரண்டோ மூன்றோ குழந்தைகளும் கூட மூன்றோ நான்கோ வருஷங்களாய் இவனைக் காணாமல் அவர்கள் எவ்வளவு தவித்துப் போயிருப்பார்கள்.




இந்த எலும்புக்கூட்டின் கழுத்தில் நீளமான தகடுகோத்த வெள்ளிச்சங்கிலி இருந்தது. வெள்ளியின் பளபளப்பு மறைந்து கறுப்பு படர்ந்திருந்த அந்தச் சங்கிலியையும் நைந்துபோய் நிறம் மாறியிருந்த சாரத்தின் துண்டுகளையும் சேகரித்து வைத்திருக்கிறோம். இவைகளைப் பார்த்துத்தான் யாரோ ஒரு பெண் வந்து அடையாளம் காட்டப்போகிறாள்.

யாராவது வந்து இது என் கணவர்தான்... இது என் பிள்ளைதான்... இது என் உறவுதான் என்று சொல்லும் அந்த நிமிடத்துக்காகத்தான் நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

யாரும் வந்து அடையாளம் காட்டாத எலும்புக்கூடுகளை, பின் அறைக்குள் பெட்டியில் அடுக்கி வைத்திருக்கிறோம். எத்தனை பெரிய துயரம் இது...

நகரத்தை இராணுவம் பிடித்த பின்னால் இப்பிரதேசத்தில் இருநூற்றி முப்பத்தி நாலு பேர் காணாமல் போயிருக்கிறார்கள். கிருஷ்ணபுரத்திலும் அம்பாள் குளத்திலுமாக எட்டுப்பேரை சடலமாக மீட்டு முடிந்தது. செஞ்சிலுவைச்சங்கம் மூலமாக நாற்பத்திரண்டு பேர் உயிருடன் இருப்பதாக அறியமுடிந்தது. இத்துடன் அறுபத்திரெண்டு எலும்புக்கூடு எடுத்தாயிற்று. மிகுதிப் பேருக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. எங்கே புதைந்து கிடக்கிறார்களோ...

ஒன்பது மணிக்கு முதலாவதாக ஒரு பெண், இளம்பெண் வந்தாள். அழுகை பரவிய முகத்துடன் தயக்கத்துடன் படி ஏறி உள்ளே வந்தாள். கூடவந்த முதியவர் வாசலுக்கு வெளியே நின்றுவிட்டார்.

இந்தப் பெண் முன்பும் எலும்புக்கூடுகள் வைக்கப்படும் நேரங்களில் அடையாளம் காண வந்திருக்கிறாள்.

போனதடவை இந்தப் பெண்ணுடன் எட்டுவயதுப் பையனும் வந்திருந்தான். எலும்புக்கூட்டைக் கண்டுவிட்டு அவன் பயந்து அலறிய அலறலில் கட்டடமே ஆடிப்போய் விட்டது. இன்றைக்கு அவனைக் கூட்டிவராமல் முதியவரோடு வந்திருந்தாள்.

பக்கத்து அறைக்குள் நானும் சிவரூபனும் அவளைக் கூட்டிப் போனோம். எலும்புக்கூட்டை மிரட்சியுடன் பார்த்தாள். வெள்ளிச் சங்கிலியையும் சாரத்துண்டுகளையும் பரிதவிப்புடன் பார்த்துவிட்டுக் கண்கலங்க இல்லை என்று தலையசைத்தாள். சோர்ந்து போய் வெளியே வந்து அந்த முதியவரிடம் ஏதோ சொல்லியபடி நடக்க அவர் தளர்ந்த நடையுடன் பின் தொடர்ந்தார். மிகவும் கவலையாத இருந்தது.

இந்தத் தடைவை வெள்ளிச்சங்கிலியும் சாரத்துண்டுகளும் அடையாளம் காண உதவியாகக் கிடைத்திருக்கின்றன. அநேகமான எலும்புக்கூடுகளுக்கு எந்தத் தடயமும் கிடைப்பதில்லை. நாயும் நரியும் தசைகளைப் பிய்த்து இழுத்துக் கொண்டு போய்விடுவதில் எலும்புகளும் சிதறிச் சிதைந்து போய்விடும். அங்கும் இங்குமாய்த் தேடி சிலவேளைகளில் கூட்டி அள்ளி, துண்டு துண்டாய்த்தான் எலும்புக்கூடுகளை எடுத்துவந்து வைப்போம். அவைகளை அடையாளம் காணமுடியாமல் சனம் பரிதவிப்போடு அலையும் காட்சி நெஞ்சை உருக்கும். அப்படியான சந்தர்ப்பங்களில் என் மனதைத் தேற்றமுடியாமல் நானே நொறுங்கிப் போவதுண்டு. இதென்ன கொடுமை என்ற பதைப்பில் கண்ணில் நீர் கூட வந்துவிடும்.

இப்படி அடையாளம் காணப்படாத பல எலும்புக்கூடுகள் பெட்டிகளில் பத்திரமாக இருக்கின்றன. காலம் முழுவதுமே யார் என்று அறியப்படாதவர்களாகவே அவர்கள் இருக்கப் போகிறார்கள்.

நீண்ட பெருமூச்சு எழுந்து அடங்கியது. பத்துமணிக்கு



சிறுகதை

மேலே தனியாகவும் கூட்டமாகவும் பல பேர் வந்தார்கள். அதிகம் பேர் பெண்கள்.

இவர்கள் ஒவ்வொருவரிடமும் எத்தனை சோகக்கதைகள் இருக்கக்கூடும். இந்தப் பணிமனையின் வாசலில் அமர்ந்து பெருங்குரலில் அழுதவர்களும் இருக்கிறார்கள்.

தமது கணவர்களை, தமது பிள்ளைகளை எப்போதோ ஒரு நாளைக்கு எலும்புக்கூடாகவேனும் மீட்டுத் தரப்போகின்ற ரட்சகர்களாக எங்களை நினைத்துத் தங்களது துயரக் கதைகளைக் கொட்டித் தீர்ப்பவர்களும் இருக்கிறார்கள். காணாமற்போன தங்கள் உறவுகள் உயிரோடு இருக்கிறார்களா அல்லது இறந்துவிட்டார்களா என்ற இரு கேள்விகளுக்குமிடையே ஊசலாடிக் கொண்டிருப்பவர்கள் இவர்கள்.

மூன்று மணிக்கு மேல் ஆட்கள் வருவது குறைந்துவிட்டது. மதியம் சாப்பிடமுடியவில்லை. வெய்யிலின் சூடு கனல் பறக்க வெளியே பரவியிருந்தது. அந்த வெம்மை மனதுக்குள்ளும் ஊடுருவியது.

இந்த வெள்ளிச்சங்கிலியை இவன் எங்கே வாங்கியிருப்பான்? ஏதாவது ஒரு கோவில் திருவிழாவில்...?

அல்லது தெருவோர மணிக்கடையில்...?

மிக ஏழ்மையான மனிதனாகத்தான் இருக்கவேண்டும். முப்பது வயதுக் காலத்திலேயே மரணித்துப் போனானே... இவன் வாழ்க்கையில் அனுபவிக்க எத்தனை சந்தோஷங்கள் இருந்திருக்கும்.

தன் குழந்தையின் பிஞ்சுக்கால் நெஞ்சில் உதைக்கும் போதெல்லாம் ரசித்துச் சிரித்திருப்பானே... சிரிக்கின்ற அந்த அப்பா எங்கே போனார் என்று இன்றைக்கு அந்தக் குழந்தை எவ்வளவு ஏங்கிப் போயிருக்கும்... எங்கோ காட்டுக்கரையில் உள்ள ஒரு குடிசையில் இவன் மனைவி இப்போது அழுது அழுதே தன்னைக் கரைத்துக் கொண்டிருப்பாள்.

வீடு பார்க்க என்றோ வீட்டில் உள்ள பொருட்களை எடுக்க என்றோ போன கணவனுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் பரிதவித்துக் கொண்டிருப்பாள். பத்திரிகைச் செய்தியைப் பார்க்கும் சந்தர்ப்பம் அவளுக்குக் கிடைத்திருக்குமா...?

தனது கணவனை எலும்புக்கூடாகவாவது கடைசியாய் ஒரு தடைவை பார்க்க அவளுக்கு வாய்ப்புக் கிட்டுமா...?

நாலரை மணிக்கு இரண்டு பெண்கள் தயங்கித் தயங்கி வந்தார்கள். தூசு படிந்து போயிருந்த முகங்கள். மிக ஏழ்மையான தோற்றம். முன்னால் வந்த பெண் "ஐயா என்ர ப [illegible]சனை நாலு வருஷமாய்க் காணேலை. எங்கட காணிக்க தேங்காய், பிடுங்கி வரப்போனவர்" என்று சொல்லி இரு கைகளையும் ஏந்தி நின்று கண்கலங்கி அழுதாள். "ஒவ்வொரு முறையும் வாறனான் ஐயா, அடையாளம் தெரியுதில்லை..." சேலைத்தலைப்பால் கண்ணீரைத் துடைத்தாள்.

இவர்கள் ஒவ்வொரு முறையும் வருபவர்கள் என்பது நினைவுக்கு வந்தது.

"அழாதேங்கோம்மா. இந்தத் தம்பியோட போய், பக்கத்து அறையில் பாருங்கோ. அடையாளம் தெரியுதோ எண்டு."

அறைக்குள் போனவர்கள் ஐந்து நிமிஷத்தில் திரும்பி வந்தார்கள். "இது இவர் இல்லை. இவரிட்ட இப்பிடி ஒரு சங்கிலி இல்லை. எனக்கெண்டால் அவர் ஒரு நாளைக்குத் திரும்பி வருவார் எண்டுதான் மனம் சொல்லுது. சாத்திரம் கேட்டனான். எங்கேயோ இருக்கிறாராம். கட்டாயம் வருவாராம்."

அவள் மற்றப் பெண்ணிடம் சொல்லிக்கொண்டு போவது என் காதிலும் விழுந்தது. அடுத்த எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்படும்வரை அவள் இதையேதான் சொல்லிக் கொண்டிருப்பாள்.

இவர்கள் வாசல் கடக்கையில் மஞ்சள் சேலை கட்டிய பெண் உள்ளே வந்தாள்.

அலுக்காமல் சலிக்காமல் திரும்பத் திரும்பப் பரிதவிப்போடு வரும் பெண்கள்.

இவள் வெகுதூரத்திலிருந்து நடந்து வருபவள்போல களைப்புடன் வந்தாள். இந்தப் பெண்ணை எனக்கு மிக நன்றாகத் தெரியும். பெயர்கூட நினைவில் இருக்கிறது.

பரிமளா. ஒவ்வொரு தடவையும் எலும்புக்கூடுகள் எடுக்கப்படும் போதும் வருவாள். கோணாவில் பக்கம்தான் எங்கோ இருக்கிறாள். அங்கிருந்து நடந்துதான் வந்திருக்கவேண்டும். தலை கலைந்து தூசு படிந்திருந்தது. இவளுக்கு மூன்று குழந்தைகள். கடைசிக் குழந்தை வயிற்றில் இருந்தபோதுதான் இவள் கணவன் காணாமல் போயிருந்தான்.

இந்தப் பெண்ணின் கண்களில் நிரந்தர அழுகை இருக்கிறது. சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டே உள்ளே வந்தாள்.

"ஐயா..." தயங்கி நின்றாள்.

"எலும்புக்கூடு அடையாளம் காண வைச்சிருக்கு எண்டு பேப்பரில் வந்ததாம். மத்தியானம்தான் பக்கத்துவீட்டுப் பிள்ளை சொல்லுது. உடனுக்கும் நான் ஓடி வாறன்"

"அங்க இருக்கு. போய்ப் பாருங்கோம்மா"

அவள் பக்கத்து அறைக்கு நடந்துபோனாள்.

நான் எதிரே வீதியைப் பார்த்தேன்.

இதென்ன துன்பமான கதை... மனதை வதைக்கும் உணர்வு... ஐந்து நிமிடம் கடந்துவிட்ட அந்த வினாடி...

"அய்யோ என்ர அவர்தான்... இது என்ர அவர்தான்... என்ர கடவுளே..." அந்தப் பெண்ணின் ஓவென்ற அலறல் சுவரெங்கும் மோதி மோதி அறைந்து ஒலித்தது.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகராகவும் நமது நூலக நிறுவனத்தின் (Noolaham Foundation) ஒரு தன்னார்வப் பணிப்பாளராகவும் பங்காற்றிய சிறீகாந்தலட்சுமி அருளானந்தம் அவர்கள் 25 மார்கழி 2019 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானர் என்ற துயரச்செய்தியைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

நூல்கள், நூலகங்கள், நூலகவியல் துறையை நெருக்கமாக ஆழமாக நேசித்த, சிறீகாந்தலட்சுமி அருளானந்தம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதம நூலகரும் நூலக விழிப்புணர்வு நிறுவகத்தின் அமைப்பாளரும் (Founder, Foundation for Library Awareness) அறிதூண்டல் மையத்தின் இயக்குநரும் (Director, Knowledge Stimulation Center) இலங்கை நூலகச் சங்கத்தின் முன்னாள் தலைவரும் இலங்கைத் தேசிய நூலகம் மற்றும் தகவல் அறிவியல் கல்லூரியின் முகாமைத்துவச் சபை உறுப்பினரும் நூலக நிறுவனத்தின் ஆளுகைச் சபை உறுப்பினரும் ஆவார்.

ஈழத்து நூலகவியல் துறையில் நிகரற்ற ஆளுமையையும் பங்களிப்பையும் வழங்கி வந்த சிறீகாந்தலட்சுமி அருளானந்தம் அவர்களின் பிரிவு எம்மை ஆழ்ந்த துயரில் ஆழ்த்துகிறது. துயருறும் அவரது குடும்பத்தார், நண்பர்கள், மாணவர்களுக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களை பணிவுடன் முன்வைக்கிறோம்.

தமிழ் நூலகவியலைத் தெளிவாக வரையறுத்து வழிகாட்டும் நூல்களை அவர் வெளியிட்டமை அவரது மிக முக்கியமான பங்களிப்பு ஆகும். கலைக்களஞ்சியம் (Encyclopedia), கலைச்சொற்றொகுதி (Glossary), சொற்பொருளாய்வுக் களஞ்சியம் (Thesaurus) முதலான விடயப்பரப்புக்களையும் உள்ளடக்கி அவை அமைந்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. தூவியின் பகுப்பாக்கத்தையும் அவர் தமிழாக்கியுள்ளார்.

நூலகவியல் ஆய்விலும், கற்பித்தலிலும் முறையான பயிற்சியையும் ஆழ்ந்த அனுபவத்தையும் கொண்ட இவர் ஈழத்து தமிழ் நூலகவியல் துறையை உலகத் தரத்துக்கு உயர்த்தும் நோக்குடன் தனது வாழ்நாள் முழுதும் செயற்பட்டு வந்தார். மாணவர்களை பாடத்திட்டத்துக்கு அப்பால் சிந்திக்க, செயற்பட ஊக்கப்படுத்தினார்.

நூலகங்களை அவர் சமூக அறிவு வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்குமான முக்கிய கருவியாகக் கருதினார். நூலகங்களைக் கட்டியெழுப்பினால் மட்டும் பயனில்லை. அவை மக்களை முழுமையாகச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் வாசிப்பைத் தூண்டும் விழிப்புணர்வு ஊட்டலை அவர் தம் வாழ்வின் ஒரு முக்கிய இலக்காக வரித்துக் கொண்டார். "வளமான வாசிப்பு மானுடத்தின் மேம்பாடு" என்பது அவர் முன்வைத்து செயற்பட்ட குறிக்கோள் வாசகம் ஆகும்.

சிறீகாந்தலட்சுமி அருளானந்தம் அவர்கள் இலங்கைத் தமிழரின் அறிவு வளங்களை ஆவணப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வந்த ஆவணப்படுத்துனர். தன் சொந்த வளங்களை எல்லாம் இப் பணியில் பயன்படுத்தி ஓர் அருமையான அரும்பொருட்கள் சேகரிப்பினை உருவாக்கியுள்ளார்.

நூலக நிறுவனத்தின் ஆரம்ப காலம் முதல் பங்களித்து வந்த இவர் நூலகச் சேகரங்களைப் பகுப்பாக்கம் செய்து ஒழுங்குபடுத்துவதில் முக்கிய பங்காற்றி வந்தார். அத்துடன் நூலக நிறுவனத்தின் ஆளுகைச் சபையில் செயற்பட்டதோடு அரிய ஆவணங்களை எண்ணிம ஆவணங்களாக்கும் பணியிலும் வழிகாட்டி வந்தார்.

நூலகர், எழுத்தாளர், ஆசிரியர், ஆய்வாளர், ஆவணப்படுத்துனர், செயற்பாட்டாளர் என்ற இணையற்ற ஒரு பன்முக ஆளுமையை ஈழத் தமிழ் பேசும் சமூகம் இழந்து தவிக்கிறது. உயர்ந்த இலட்சியங்களையும் எண்ணக் கருக்களையும் முன்நிறுத்தி, அவற்றை நோக்கி நித்தம் பயணித்த தன்னிகரற்ற ஆத்மா இன்று எம்மிடை இல்லை என்பதை எம்மால் நம்பமுடியவில்லை. எம்மோடு பகிர்ந்து கொண்ட அவரின் பெரும் கனவுகள் எம் முன் நிற்கின்றன. அக் கனவுகள், செயற்திட்டங்கள் நோக்கி எம் பயணம் தொடரும் என்ற உறுதியினை நாம் அவருக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

**ஆளுகைச் சபையினர், தன்னார்வலர்கள், பணியாளர்கள்**

**நூலக நிறுவனம்**

## முற்றுப்பெறாத புத்தகம்

# மலச்சிக்கல் சிக்கலால் அவதியா? மாத்திரையில்லாமல் தவிர்க்க! நிபுணர்களின் அறிவுரை...


மலச்சிக்கலால் இன்று வயது பேதமில்லாமல் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். மிகப்பெரிய ஆரோக்கிய சீர்கேட்டை உண்டாகும் மலச்சிக்கல் பிரச்சனையை யாரும் பெரிதுபடுத்துவதில்லை என்பது கவலை தரும் விஷயம். நம் முன்னோர்கள் காலையில் எழுந்ததும் காலைக் கடன் கழிப்பதைக் கடைபிடித்து பிள்ளைகளுக்கும் கண்டிப்புக் காட்டி பழகினார்கள். இன்று சிறு பிள்ளைகள் காலை வெகுசீக்கிரம் பள்ளிக்கு கிளம்பும் போது மலம் கழிப்பதில்லை. அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்பது குறிப்பிடதக்கது.

ஏன் இதற்கு முக்கியத்துவம் என்றால் ஒவ்வொரு வேளை உணவும் சாப்பிட்டபிறகு உடல் உணவு செரிமானத்துக்கு பிறகு தேவையற்ற சக்கைகளை உப்புகளோடு வெளியேற்றுவது உடல் இயற்கையாக செய்கிறது. இது வெளியேறாவிட்டால் இவை மலக்குடலில் தங்கி கண்டிப்பாக பல்வேறு பாதிப்புகளை உண்டாக்கும்.

மலச்சிக்கலால் வரும் சிக்கல்

மலச்சிக்கல் அதிகரிக்கும் போது அவை மூல நோயை உண்டாக்கிவிடும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவை மட்டும் உண்டாவதில்லை. உடலில் சமமாக இருக்க வேண்டிய வாயுவானது அதிகரிக்க தொடங்குகிறது. இவை வேறுவிதமான நோய்தாக்கத்துக்கு காரணமாகிறது. மலச் சிக்கல் தொடரும் போது சிலருக்கு தலைலவலி உண்டாகும். சிலருக்கு பசி இருக்காது மந்தமாகவே இருக்கும். வயிறு உப்புசம் உண்டாகும்.

ஏற்கனவே ஆஸ்துமா நோயால் பாதிக்கப்பட்டிருந்தால், மலச்சிக்கல் பிரச்சனை இருந்தால், அடிக்கடி இந்த உபாதைகள் அதிகரிக்கும். மூட்டுவலி. நீரிழிவு பிரச்சனை இருப்பவர்களுக்கு உபாதைகளும் வலியும் அதிகரிக்கும்.




இவை தவிர உடலில் தேங்கும் கழிவுகளை வெளியேற்றாத உடல் ஆரோக்கிய மாக இருக்கும் என்று எப்படி சொல்ல முடியும். ஆனால் அன்றாட வாழ்வியல் முறைகளை சில மாற்றங்களை கடைபிடிப்பதன் மூலம் இதை எளிதாக சரிசெய்ய முடியும்.

### தண்ணீர் அவசியம்

மலச்சிக்கல் இருந்தால் தான் என்றில்லை, பொதுவாக எல்லோரும் கடைபிடிக்க வேண்டியது அவசியம். குழந்தைகள் முதல் வயதானவர்கள் வரை அனைவரும் இரவு படுக்கும் முன்பு இரண்டு தம்ளர் மிதமான வெந்நீர் குடிக்க வேண்டும். பிள்ளைகளையும் கண்டிப்பாகப் பழக வேண்டும். மறுநாள் காலையில் பள்ளிக்கு செல்லும் குழந்தைகளை சற்று முன்கூட்டியே எழுப்பிப் பல் துலக்க வைத்து இரண்டு தம்ளர் நீர் குளிர்ச்சியும் வேண்டாம்.

மிதமான வெந்நீரும் வேண்டாம் சாதாரண நீரை குடிக்க வையுங்கள். எல்லோரும் குடியுங்கள். ஐந்து நிமிடம் நடக்கவிடுங்கள். குறைந்தது பிள்ளைகளை நன்றாக உட்காரவைத்து எழுப்பி தோப்புகரணம் பயிற்சி செய்ய வைத்து மலம் கழிக்க செய்யுங்கள். தொடர்ந்து ஒரு வார பயிற்சிக்கு பிறகு அனைவருமே காலையில் மலத்தை வெளியேற்றுவீர்கள் எந்த விதமான பிரச்சனையுமில்லாமல். செரிமான பிரச்சனைகளும் மந்தமும் குறையதொடங்கும்.

### கீரைகள்

கீரைகள் ஆரோக்கியமான உடலுக்கு மிகவும் நல்லது. தினமும் ஒரு வேளை உணவு கீரை கூட்டு, பொரியல், குழம்பு, துவையல் எடுத்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள் மருத்துவர்கள். கீரைகள் பற்றி சொல்லிகொண்டே போகலாம். மலச்சிக்கல் பிரச்சனையை முழுவதும் எளிதாக தீர்க்க உதவுவதில் கீரை மிக முக்கியபங்கு வகிக்கிறது. அந்தகாலத்தில் உடல் மந்தமாக இருந் தாலோ வயிற்றில் பூச்சி அறிகுறி இருந்தாலோ மாத்திரைகளை நாட மாட்டார்கள்.

பேதி கீரை என்னும் கீரையை பருப்பு சேர்த்து சமைத்து சாப்பிடுவார்கள். இது உடலில் இருக்கும் மொத்த அழுக்கையும் வெளியேற்றை வயிற்றை சுத்தமாக்கும். மலச்சிக்கல் வராமல் இருக்கக் கீரை என்றால் வந்த பிறகு குணப்படுத்தவும் கீரைகள் மிக முக்கிய பங்குவகிக்கிறது. 10 ரூபாய் கீரை கட்டில் உங்கள் உடலின் கழிவுகள் வெளியேற்றப் படுகிறது. வாரம் இரண்டு நாளாவது கீரை சேர்த்துகொள்வது நல்லது.

### நார்ச்சத்து நிறைந்த காய்கறிகள்

பசுமையான காய்கறிகளில் கரை யும் கரையாத நார்ச்சத்து நிறைந்த காய்கறிகளை அன்றாடம் எடுத்துகொள்வது நல்லது. நார்ச்சத்துள்ள காய்கறிகள் குடலில் மலத்தை நகர்த்தி ஈரத்தை உறிஞ்சி எளிதாக வெளியேற்ற உதவும். தினமும் திரவ ஆகாரத்தை அதிகம் எடுத்துகொள்வது நல்லது. வாழைத்தண்டு சாறு, பழச்சாறுகளோடு மலச்சிக்கல் பிரச்சனை தென்பட்டால் அதிகம் திரவ ஆகாரத்தோடு அன்றாடம் இரண்டு வாழைப்பழங்களை சாப்பிடுவது நல்லது.

இவைதவிர இரவு படுப்பதற்கு முன்பு ஒரு தம்ளர் நீரில் 5 கறுப்பு உலர் திராட்சையை சேர்த்து ஊற வைத்து மறுநாள் காலை வெறும் வயிற்றில் அந்த நீரை குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும். குறிப்பாக பிள்ளைகள் மதியம், இரவு நேரங்களில் மலம் கழிப்பதை தவிர்த்து காலையில் மலம் கழிப்பது பழக்கமாகும். மலம் மலக்குடலில் தங்காமல் முழுமையாக வெளியேறும்.

### தவிர்த்துவிடுங்கள்

இரவு தூக்கமின்மை பிரச்சனையும் மலச்சிக்கலை உண்டாக்கும். உடலில் போதிய நீர்ச்சத்து இல் லாத போது அவை மலத்தை கடினமாக்கும். தினமும் இரண்டு வேளை காபி டீ போதுமானது. அதற்கு மேல் வேண்டாம். மலச்சிக்கல் பிரச்சனை இருப்பவர்கள் கண்டிப்பாக அதை தவிர்த்து இளநீர், பழச்சாறுகளை அருந்தலாம். அதிக இனிப்பு வகைகளை தவிர்ப்பது நல்லது. அதிகப்படியான மாவு உணவுகள், துரித உணவுகள், எண்ணெய் பொருள்கள் எப்போதுமே உடலுக்கு தீமை தருபவை அதனால் தவிர்ப்பதே பாதுகாப்பானது.

அதிக புளிப்பு நிறைந்த உணவுகளை தவிர்ப்பது நல்லது. மைதா உணவுகள், பேக்கரி வகைகள், மாடர்ன் உணவுகளை தவிர்த்தால் மலச்சிக்கலுக்கு ஓகே சொல்லிவிடலாம். சிக்கல் வராமல் தப்பித்துக் கொள்ளலாம்.

# அறுகம் புல்

ஆனைமுகப் பெருமானுக்குப் பக்தர்கள் அதிகம் அணிவிப்பது அறுகம் புல் மாலைதான் "ஆல் போல் தழைத்து அறுகு போல் வேர்விட்டு வாழ்க" என்று நாம் மணமக்களை வாழ்த்துவதில் இருந்து அறுகு என்பது அறுகம் புல்லைத் தான் குறிக்கிறது. அறுகம்புல்லைப் பற்றித் தெரிந்து இருந்தாலும் அதன் மருத்துவக் குணங்களைப் பற்றிபார்ப்போம்.

1. "எண் சாண் உடம்பிற்குச் சிரமே சபிரதானம்" என்பதற்கு இணங்க தலையில் உண்டாகும் பேன்,பொடுகுத் தொல்லை நீங்க குளிர்ச்சியாக அறுகம்புல் வேரை நிழலில் உலர்த்திப் பொடியாக்கி நல்லெண்ணெயில் கலந்து காய்ச்சி, தலையில் தேய்த்துக் குளித்து வர எல்லாவிதத் தோல் நோய்களும் குணமாகும்.

2. அறுகம் புல்லை ஒரு கைப்பிடி அளவு எடுத்து நீர் விட்டு வடிகட்டி அதனுடன் பால் சர்க்கரை சேர்த்துக் குடித்துவர சிறு நீர் சம்பந்தமான நோய்கள் மற்றும் சிறுநீர் பை நோய்கள் நீங்கிச் சிறு நீர்ப்பையும் பலப்படும்

3. அறுகம் புல்லுடன் வெண் தாமரை பூ இதழ்களைச் சேர்த்துக் கசாயமாக்கித் தினமும் இரு வேளை குடித்து வர இதய பலவீனம் நீங்கி இதயமும் ரத்தக் குழாய்களும் உறுதிபெறும்.

4. தீராத வயிற்று வலிக்கு அறுகம் புல்லுடன் வேப்பிலையைச் சம அளவு எடுத்து நீர் விட்டுகாய்ச்சி வடிகட்டி 100 மி.லி அளவு குடித்துவர குணமாகும்.


5. அறுகம் புல்லின் கணுக்களை நீக்கிவிட்டு 10 கிராம் அளவு எடுத்து வெள்ளை மிளகு 10 சேர்த்து 4 டம்ளர் நீர் விட்டுக் காய்ச்சிப் பாதியாக வற்றியதும் அதில் சிறதளவு பசுவெண்ணெய் சேர்த்துக் குடித்துவர மருந்துக்களை உட்கொள்வதால் ஏற்படும் வெப்பம் நீர் கடுப்பு மூலக் கடுப்பு வெள்ளை படுதல் போன்றவை குணமாகும்.

6. அறுகம் புல் வேர்,ஆவாரம்பூ இவை இரண்டையும் நிழலில் உலர்த்தி இடித்துச் சலித்து பொடியாக்கிக் கொள்ளவும். இதில் 2 கிராம் அளவு எடுத்து அத்துடன் நெய் கலந்து சாப்பிட மூல நோய் குணமாகும்.

7. அறுகம் புல்லுடன் மஞ்சளும் சுண்ணாம்பும் சேர்த்து அரைத்து நகச் சுற்று உள்ள இடத்தில் பூசிவர வலியும் வீக்கமும் குறையும்




பிரண்டையில் உள்ளகல்சியம், கரோட்டின் மற்றும் வைட்டமின் 'சி'நோய் எதிர்ப்புசக்திக்கு இன்றியமையாதவை. பிரண்டையை சிறுதுண்டுகளாக நறுக்கி அரைவேக்கடாக வேகவைத்து உப்பிட்டமோரில் போட்டு உலர்த்திப் பின் அதனை வற்றலாக பயன்படுத்திவரச் செரியாமை, அல்சர், புளியேப்பம் போன்ற வயிற்றுக் கோளாறுகள் நிவர்த்தியாகும் பிரண்டைச் சாற்றில் புளி, உப்புக் கலந்து காய்ச்சி பொறுக்கும் சூட்டில் பற்றிட சதைப் பிறழ்ச்சி, அடிபட்ட வீக்கம், எலும்பு முறிவு ஆகியவை தீரும்



# பிரண்டை

பத்து ஆண்டுகளில் நீங்கள் ஒரு செல்வந்தர் ஆக ஆசைப்படுகிறீர்கள். ஏதேனும் நேர்மையான தொழில், வணிகம் அல்லது சேவை செய்துதான் நீங்கள் செல்வந்தர் ஆக முடியும்!

உங்கள் ஆசையை வலிவாக்கி குறிக்கோள் ஆக்கி விட்டீர்கள். செல்வந்தராக என்ன செய்ய வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? எப்பொழுது செய்ய வேண்டும்? எங்கே செய்ய வேண்டும்? என்னும் வினாக்களை உங்களுக்கு நீங்களே கேளுங்கள்.

வினாக்களுக்கு விடையாக உங்கள் எண்ணம் விரி-வடையும். உங்களுக்குத் தேவையான யோசனைகளை உங்கள் ஆழ்மனம் வழங்கும். உங்கள் ஆழ்மனம் தரும் யோசனைகள் தான் உங்களுக்கு வெற்றியைத் தரும். யோசனைகளைப் பெறுவதற்கு நீங்கள் மற்றவரை நம்பி இருக்கக் கூடாது.

யோசனைகளை உருவாக்குவதற்காக நீங்கள் அடிக்கடி கண்களை மூடி, கவனத்தைக் குவித்துச் சிந்திக்க வேண்டும்.

(எண்ணத்தை) மாற்றி அமைக்க முடியும் என்பதுதான்'.

சிந்தனை என்னும் மனச்சித்திரத்தை மாற்றி நீங்கள் உங்களை உருவாக்கி விடவும் முடியும். உங்களை அழித்துக் கொள்ளவும் முடியும்.

எண்ணம் செயல் ஆகிறது. செயல் பழக்கம் ஆகிறது. பழக்கம் வழக்கம் ஆகிறது. வழக்கம் உங்கள் வாழ்க்கையை நிர்ணயிக்கிறது.

ஆழ்மனச் சக்தியைப் பெருக்கி அற்புதச் சாதனை படைக்க விரும்பும் நீங்கள் உடனடியாகச் செய்ய வேண்டியது என்ன?

உங்கள் மனப்பான்மையை மாற்றி அமைக்க வேண்டும். மனப்பான்மை மாற, மாற நீங்களும் மாறுவீர்கள். உங்கள் சூழ்நிலையும் மாறிவிடும்.

எல்லாம் எனக்கு எதிராகவே இருக்கிறது. எடுத்ததெல்லாம் தோல்வியில் முடிகிறது. ஆதரிப்பார் எவருமில்லை. ஆன மட்டும் முயற்சித்து விட்டேன் என்னும் எதிர்மறை மனப்பான்மையை விரட்டி விட்டு என்ன நிலையை அடைய விரும்புகிறீர்களோ அதை அடைந்து விட்டதாக நீங்கள் கற்பனை மனச்சித்திரம் ஆக்க வேண்டும்.

அதில் ஏற்றிச் செல்வதுபோல மனச்சித்திரம் வரையுங்கள். உங்கள் தொழிலில் அது பயன்படுவது போன்று கற்பனை செய்யுங்கள்.

நீங்கள் எவ்வாறெல்லாம் காட்சிகளைக் கண்டீர்களோ, அவை நிதர்சனமாக நடப்பதைக் காண்பீர்கள்.

கார் எப்படிக்கிடைக்கும்? பணத்திற்கு என்ன செய்வது? யார் தருவார்கள்? என்றெல்லாம் நீங்கள் சிந்திக்கக் கூடாது.

உங்களுக்கு கார் கொடுக்கும் பொறுப்பை ஆழ்மனத்திடம் ஒப்படைத்து விட்டீர்கள். ஆழ்மனத்திற்கு நம்பிக்கையோடு கட்டளை கொடுக்கிறீர்கள். தற்போது மனச்சித்திரம் வரைவதன் மூலம் 'கார் கிடைக்கப் போகிறது' என்னும் நம்பிக்கை வலிமை அடைகிறது. நம்பிக்கை போதுமான வலிமை பெறும்போது அற்புதமான வழியில் கார் உங்களைத் தேடி வந்துவிடும்.

இதுபோன்ற எந்தக் குறிக்கோளானாலும் அதை அடைய வழிவகுப்பது நம்பிக்கையே. நம்பிக்கையை வளர்க்கின்ற உத்தி 'மனச்சித்திரம்' வரைதலே.

மனச்சித்திரம் வரையும்போது நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய செய்திகள் கீழே உள்ளன.




கவனத்தைக் குவிக்கும்போது உங்கள் மனக்கண்ணில் திரைப்படம் போன்ற தொடர் காட்சிகள் ஓடுகின்றன. அத் திரைப்படமே சிந்தனை அல்லது எண்ணம் ஆகும்.

உங்கள் குறிக்கோளில் வெற்றியைப் பெற எண்ணமே முதற்படியாக அமைகிறது. எண்ணமே செயலுக்கு முன்னோடி என்கிறார் தாமஸ் கார்லைல்.

உங்கள் முன்னேற்றத்தில் சிந்தனை என்னும் எண்ணம் எத்தகைய சிறந்த பங்கை வகிக்கிறது தெரியுமா?

ஆன்றோரின் பொன்மொழிகள் அதைத் தெளிவாக்கு வதைக் காணுங்கள்.

'நீ என்ன நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்' என்று கீதை சொல்கிறது.

'தன் இருதயத்தின் நினைவுகளுக்கேற்ப மனிதன் இருக்கிறான்' என்று பைபிள் கூறுகிறது.

'அனைத்திற்குமே மூலம் மனமே. நாம் என்ன எண்ணுகிறோமோ அதுவாகவே ஆகிறோம்' என்று புத்தர் கூறுகிறார்.

ரோமானியப் பேரரசனும், தத்துவ ஞானியுமான மார்க்கஸ் அவ்ரேலியஸ் கூறுகிறார்.

'நம் வாழ்க்கை என்பது நம் எண்ணத்தால் உருவாக்கப்படுகிறது'.

ஆக நீங்கள் நடத்துவது வெற்றி வாழ்க்கை ஆயினும், வறுமை வாழ்க்கை ஆயினும் அதை உருவாக்கியது உங்கள் எண்ணமே என்பது தெளிவாகிறது.

எண்ணம் என்பது தொடர் மனச் சித்திரமே என்பதையும் அறிந்து இருக்கிறீர்கள்.

வெற்றியையும், செல்வத்தையும் விரும்புகிற நீங்கள், உங்கள் எண்ணத்தை அதற்கேற்ப மாற்றி அமைத்துக் கொள்ளும் போது நீங்கள் அதுவாகவே ஆகிவிடுவீர்கள்.

எண்ணத்தை நீங்கள் விரும்புகிறபடி மாற்றி அமைத்துக் கொள்ள முடியுமா? முடியும்.

ஹார்வர்டு பல்கலைக்கழக உளவியல் பேராசிரியர் வில்லியம் ஜேம்ஸ் கூறுகிறார்.

'என் தலைமுறையின் மிகப்பெரும் கண்டுபிடிப்பு எதுவென்றால், மனிதன் தன் மனப்பான்மையை

ராபர்ட் க்ரீகல் கூறுவதை வேதவாக்காக நினைத்துப் பலமுறை படியுங்கள்.

'விளையாட்டிலோ, வியாபாரத்திலோ ஈடுபட்டிருக்கிற ஒருவனுடைய வெற்றி, தோல்வி பயத்தை ஒழிப்பதிலும், முன்னர் பெற்ற வெற்றி மற்றும் அதன் மூலம் அடைந்த உணர்ச்சியை நினைவு கூர்வதிலும், இனி வரப்போகும் முன்னேற்றத்தையும், வெற்றியையும் முன்னரே கற்பனைக் கண் கொண்டு முழுமையாகக் காண்பதிலும் இருக்கிறது'.

உங்கள் கடந்தகால நிலையும், சூழ்நிலையும் உங்கள் எண்ணத்தின் விளைவே. உங்கள் எதிர்கால நிலையும் சூழ்நிலையும் உங்கள் இப்போதைய எண்ணத்தின் விளைவாகவே இருக்கும்.

உங்கள் வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிப்பது எது? உலகில் நடக்கும் காரியங்களா? உங்கள் சூழ்நிலையா? நிச்சயமாக இல்லை.

உங்கள் சிந்தனையில் உலகை எவ்வாறு காண்கிறீர்களோ, அதுவே நிர்ணயிக்கிறது.

ஆகவே உங்கள் நிலையையும், உங்கள் சூழ்நிலையையும், சாதகமாக, நன்மை தருவதாக மாற்றுகின்ற சக்தி மனச்சித்திரமாகிய சிந்தனையில் இருக்கிறது என்பதை நினைவில் இருத்துங்கள்.

ஆறுமாதக் குறிக்கோள் அல்லது பத்து ஆண்டுக் குறிக்கோள் எதுவாயினும், அதை அடைவதற்கான ஆழ்மனச் சக்தியைப் பெருக்குவதில் மனச்சித்திரத்தின் பங்கு எவ்வளவு முக்கியமானது என்று புரிந்து கொண்டீர்களா?

ஆழ்மனக் கட்டளை, மனச்சித்திரம் இவ்விரு உத்திகளையும் ஒரே சமயத்தில் தொடர்ந்து பயன்படுத்தும்போது உங்கள் மனோசக்தி பெருக ஆரம்பிக்கும்.

ஆறுமாதத்திற்குப் பின்னர் உங்களிடம் ஒரு கார் இருக்க வேண்டும் என்று விரும்புகிறீர்களா?

என்ன கார் என்று முடிவு செய்யுங்கள். என்ன நிறம் என்று முடிவு செய்யுங்கள். அந்தக் காரை நீங்கள் ஓட்டுவது போலக் கற்பனை செய்யுங்கள். உங்கள் குடும்பத்தினரை

- சிந்தனையில் இருந்தே செயல் பிறக்கிறது. மனதில் இடம் பெறுகிற எண்ணமே செயலுக்கு ஊக்கம் தருகிற தீப்பொறி.
- கற்பனையில் காண்கிற, எதுவும் ஏற்கனவே உலகில் இருக்கிறது. ஆகவே, அதை அடையும் முழு வாய்ப்பும் உங்களுக்கு இருக்கிறது.
- மனச்சித்திரம் மேலும், மேலும் ஆழ்மனதில் பதிவதன் மூலம்தான் மனம் திண்மை பெறும். மனம் திண்மை பெறும்போது விரும்பிய பொருள் நம்மைத் தேடி வரும்.
- எண்ணம் திண்மை பெறும்போது தோல்வி என்று எதுவும் இல்லை. காலம் சிறிது நீடிக்கலாமே தவிர நினைத்ததை அடைவது நிச்சயம்.

ஆழ்மனக் கட்டளையும், மனச்சித்திரமும் சேர்ந்தது தியானம். தியானம் என்பதே பல நூறு ஆண்டுகளுக்கு முன்னர் தவம் எனப்பட்டது.

தவவலிமையினால் நம் முன்னோர் 'செய்தற்கரிய' 'நம்பவியலாத' அற்புதமான சாதனைகளைச் செய்தனர் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஆழ்மனக் கட்டளை கொடுக்கும்போதே அதற்கேற்ற மனச்சித்திரம் வரைவதன் மூலம் நீங்கள் அற்புதங்களை நிகழ்த்துபவராக மாறிவிடுகிறீர்கள்.

ஒவ்வொரு ஆறுமாதமும் ஒரு குறிக்கோள் நிறைவே-றும் போது பத்து ஆண்டுக் குறிக்கோளையும் சாதிக்கும் உறுதியான நிலைக்கு வந்துவிடுவீர்கள்.

நீங்கள் நினைத்ததை முடிப்பவராகவும், விரும்பியதை அடைபவராகவும், மாறுவதற்கு ஆழ்மனக் கட்டளையும், மனச் சித்திரமுமே வழிவகுக்கும்!


ஆழ்மனக் கட்டளை கொடுப்பது உங்களுக்குச் செய்ய இயலாததா? மனச்சித்திரம் பார்த்தல் உங்களுக்கு இயலாததா? மனச்சித்திரம் வரைவது கடினமான காரியமா? நிச்சயமாக இல்லை.

ஆகவே இன்றே தொடங்கி விடுங்கள்!

உங்கள் ஆறுமாத, பத்து ஆண்டுக் குறிக்கோளுக்கான தியானம் செய்யும்போது நம்பிக்கை எவ்வாறு உங்களிடம் மந்திர சக்தியைப் பெருக்குகிறது என்று தெரியுமா!





## அட்டபுரத்து மேத்யூ ஏபிரகாம் - (அபி) (Abi Aberaham)




இவர் இந்தியாவின் பிரபல கார்டுனிஸ்ட் மற்றும் பத்திரிகையாளர், எழுத்தாளரும் ஆவார். 11.06.1924ல் கேரளாவின் மாவெலி கராவில் பிறந்தார். இவர் கணிதம், பிரஞ்சு, மற்றும் ஆங்கிலத்தில் பட்டம் பெற்ற ஓர் டென்னிஸ் சம்பியனாவார். 1945ல் பாம்பே குரோனிக்கல் மற்றும் பாம்பே செண்டினல் பத்திரிகையாளருமாவார். "ஷங்கர் வீக்லியில்" பணியாற்றுவதற்காகப் புதுடில்லிக்கு கே.ஷங்கர் பிள்ளை அபுவை அழைத்தார்

1953ல் லண்டனில் ஸ்டார்ட்டின் பிரெட்ஜோயை சந்தித்தார். அவரே அபுவை லண்டனுக்குச் செல்ல ஊக்குவித்தார். 1953ல் அபு லண்டன் சென்றார் அங்கு தனது கார்டூன்களை "பன்ச்" பத்திரிகை மற்றும் "டெய்லி ஸ்கெட்ச்" ஆகிய பத்திரிகைகளுக்கு வழங்கினார் 1956ல் "டிரிபியூனில்" அபுவின் இரண்டு கார்ட்டூன்கள் வெளிவந்தன. உலகின் பழமையான ஞாயிறு பத்திரிகையான "த ஒப்சேவர்" பத்திரிகையின் ஆசிரியரான டேவிற் ஆஸ்டரின் வேண்டுகோளுக்கிணங்க "அபு" என தனது பள்ளிக்கூட புனைபெயரில் கார்ட்டூன்களை வரைய ஆரம்பித்தார்.

இவர் பிரிட்டிஷ் கலாசாரத்திற்குள் தன்னை மூழ்கடித்துத் தீவிரமான அரசியல் கார்ட்டூன்களை வரைந்தார். அவரது கார்ட்டூன்களில் பெரும்பாலும் இடதுசாரிகளின் மனச்சாட்சியை உலுக்கும் கருக்கள் அதிகம். உலகெங்கிலுமுள்ள செய்திகளை அபு அவரது கார்ட்டூன்களூடாக வெளிக் கொணர்ந்தார்.






1966ல் "தி கார்டியன்" பத்திரிகையில் பணியாற்றச் சென்றார். அதே நேரம் "ட்ரிபியூனுக்கான வாராந்தக் கார்ட்டூன்களையும் அவர் வரையத் தவறியதில்லை. 1968ல் வியட்னாம் மீதான போரைப் பற்றிய கார்ட்டூன்களின் தொகுப்பினை வெளியிட்டார்.

1969ல் இந்தியா திரும்பிய அவர் 1972 தொடக்கம் 78 வரை இந்திய நாடாளுமன்றத்தின் மேல்சபை உறுப்பினராக இருந்தார். அபுவின் கூர்மையான அறிவும், எளிய நரம்புக் கோடுகளாலான அவரது கார்ட்டூன்களும் அரசியலில் ஊழல் மீது இரக்கமற்ற தாக்குதலாக வெளிவந்தது. தனிமனித அடையாள மாக அவருடைய கார்ட்டூன்கள் எளிமையாகக்கோடு களின் வகைப்படுத்தலாக இருந்தன. அவை ஒரு சிறு குறிப்பைத்தானும் தவறவிடாத "பன்ச்" வரிகளைக் கைது செய்வதாக உள்ளன. இதன் மூலம் அவை வெளிப்படையான கருத்துவெளிப்பாடாக அமைந்து காணப்படுவது சிறப்பு. இவர் 1981 வரை இந்தியன் எக்ஸ்பிரஸில் அரசியல் கார்ட்டூனிஸ்டாக பணியாற்றினார். 1981ல் இருந்து அபு பணியை பல பத்திரிகைகளுக்கு வழங்கினார். 1988ல் கேரளாவுக்குத் திரும்பினார். இவ்வாறான நீண்ட கலைப் பயணத்தின் பின் 2002ஆம் ஆண்டு இவ் உலகைவிட்டு ஓர் கார்ட்டூன் சரித்திரம் விடைபெற்றது.





## கேசவ ஷங்கர் பிள்ளை (ஷங்கர்)



இந்தியாவின் அரசியல் கார்டூன்களின் தந்தை எனப் போற்றப்படும் கேசவ ஷங்கர் பிள்ளை கேரளத்தைச் சேர்ந்த "காயம்குளத்தில்" 31.07.1902 ல் பிறந்தார். அரசியல் கார்டூன்கள் வரைவதில் இந்தியாவின் பிதா மகன் எனக் கருதப்படுகின்றார்.

பள்ளிப்படிப் பை மகாவேடிக்கராவிலும், காயக்குளத்திலும் பயின்ற இவர் "மகாராசா கல்லூரியிலும் பின் மும்பைக்குச் சென்று சட்டக் கல்லூரியிலும் சேர்ந்து படித்தார். கார்டூனில் அதிக ஆர்வம் கொண்ட இவர் 1948ல் "ஷங்கர் வீக்லி", இந்தியாவின் "பஞ்ச்" என்ற நிறுவனத்தை நிறுவினார். அபி ஏபிரகாம், ரங்கா, குட்டி போன்ற காரட்டூனிஸ்டுகளை உருவாக்கிய பெருமை இவரையே சாரும். 1975ல் அவசர நிலை காரணமாக இவரது "ஷங்கர் வீக்லி" நிறுவனம் மூடப்பட குழந்தைகளுக்கான பணியில் தனியாக கவனம் செலுத்தினார்.

ஷங்கரின் முதலாவது கார்டூனாக வரைந்தது அவரது ஆசிரியர்களில் ஒருவரது தூக்கக் காட்சியாகும். ஷங்கர் நாடகங்களில் அதிக ஆர்வம் கொண்டவர். அத்துடன் சாரணர், இலக்கிய நடவடிக்கைகள், வெள்ள நிவாரணம் குறித்த நிதி சேகரிப்பு போன்றவற்றினூடு ஏழைகளுக்கும், துயரமளிக்கும் மக்களுக்குமான இந்த அக்கறை வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தது மட்டுமல்லாது அவரது கார்டூன்களிலும் அது




வெளிப்பட்டது.

ஷங்கரின் கார்டூன்களை "பிரஸ்" பத்திரிகை மற்றும் "பாம்பே குரோனிக்கல்" ஆகியவற்றில் வெளி வந்தன. 1932ல் "த ஹிந்துஸ்தான் ரைம்ஸ்" பத்திரிகையின் ஆசிரியரான போதென் ஜோசப் உடன் இணைந்து 1946 வரை கார்டூனிஸ்டாக பணியாற்றினார். 14 மாதம் லண்டனில் பயிற்சி மற்றும் பல்வேறு கலைப்பள்ளிகளில் கார்டூனின் மேம்பட்ட நுட்ப முறைகளை படிக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டார். பிரதமர் இந்திரா காந்தி ஆட்சியின் நெருக்கடி காலத்தில் "ஷங்கர் வீக்லி" வெளியிடுவதை நிறுத்தினார். தொடர்ந்தும் குழந்தைகளுக்கான புத்தகங்கள், ஓவியங்கள், கதைகள் ஆகியவற்றைப் படைத்தார். 1965ல் ஷங்கரினால் அனைத்துலக பொம்மைகள் அருங்காட்சியகம் ஒன்று தொடங்கப்பட்டது இங்கு குறிப்பிடத் தக்கது இவரது சிந்தனை ஆற்றலையும், எளிய கோடுகளின் மாயாஜால வித்தைக்கும் கிடைத்த உயரிய விருதுகளாக. பத்மஸ்ரீ (1956), பத்மபூசன் (1966), பதமவிபூசன் (1976), இலக்கிய விருது என பல்வேறு உயரிய விருதுகளுக்குச் சொந்தக்காரரான இவர் 26.12.1989ல் மறைந்தார்.



# கிரக நிலையும் இராசி பலனும் இந்த வாரம்

ஜனவரி 05 முதல் ஜனவரி 11 வரை (மார்கழி 20 முதல் 26 வரை)



கணித்தவர்
ஜோதிட மாமணி, முனைவர் முருகு பால முருகன்
Dip in astro, B.L, M.A.astro. PhD in Astrology.
No: 19/33 வடபழனி ஆண்டவர் கோயில் தெரு,
தபால் பெட்டி எண் - 2255. வடபழனி,
சென்னை - 600 026 தமிழ்நாடு, இந்தியா.
cell: 0091 7200163001, 9383763001,

| | | | |
|---|---|---|---|
| | சந்தி | | ராகு |
| | திருக்கணித கிரக நிலை | | |
| சுக்கி, | | | |
| சனி, கேது, குரு, சூரியன், புதன் | செவ் | | |

கிரக மாற்றம் இல்லை

09-01-2020 கும்பத்தில் சுக்கிரன் அதிகாலை 04.23 மணிக்கு

**இவ்வார சந்திரன் சஞ்சரிக்கும் ராசிகள்**

மேஷம் 04-01-2020 காலை 10.05 மணி முதல் 06-01-2020 இரவு 08.36 மணி வரை.

ரிஷபம் 06-01-2020 இரவு 08.36 மணி முதல் 09-01-2020 அதி காலை 03.49 மணி வரை.

மிதுனம் 09-01-2020 அதிகாலை 03.49 மணி முதல் 11-01-2020 காலை 07.52 மணி வரை.

கடகம் 11-01-2020 காலை 07.52 மணி முதல் 13-01-2020 காலை 09.55 மணி வரை.

**இவ்வார சுப முகூர்த்த நாட்கள்**

05.01.2020 மார்கழி 20 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை தசமி திதி அசுவினி நட்சத்திரம் சித்தயோகம் காலை 09.30 மணி முதல் 10.30 மணிக்குள் கும்ப இலக்கினம். வளர்பிறை08.01.2020 மார்கழி 23 ஆம் தேதி புதன்கிழமை திரயோதசி திதி ரோகிணி நட்சத்திரம் சித்தயோகம் காலை 09.00 மணி முதல் 10.00 மணிக்குள் கும்ப இலக்கினம். வளர்பிறை




**மேஷம் அசுவனி, பரணி, கிருத்திகை 1-ஆம் பாதம்.**

தன்னிடத்தில் அன்பும் பாசமும் கொண்டவர்களுக்கு எந்தவித துன்பங்கள் நேர்ந்தாலும் பிரதிபலன் பாராது அவர்களுக்கு உதவும் பண்பு கொண்ட மேஷ ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு பாக்கிய ஸ்தானத்தில் குரு, கேது சஞ்சரிப்பதும் சுக்கிரன் 10, 11-ல் சஞ்சரிப்பதும் பொருளாதார ரீதியாக சாதகமான பலன்களை தரும் அமைப்பாகும். சிறப்பான பணவரவு ஏற்பட்டு உங்கள் தேவைகள் பூர்த்தியாகும். பணியுரிபவர்களுக்கு தகுதிக்கு ஏற்ற பதவி உயர்வுகள் கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் உஷ்ண சம்மந்தப்பட்ட பாதிப்புகள் தோன்றி மறையும். கணவன்- மனைவியிடையே ஒற்றுமை சிறப்பாகவே இருக்கும். ஆடை, ஆபரணம் போன்றவற்றை வாங்கும் வாய்ப்பு அமையும். திருமண சுபகாரிய முயற்சிகளில் அனுகூலப்பலன் உண்டாகும். உற்றார் உறவினர்களின் ஆதரவு மகிழ்ச்சி அளிக்கும். வெற்றி தரும் நாட்கள் - 5, 6, 9, 10.




**ரிஷபம் கிருத்திகை 2,3,4-ஆம் பாதங்கள் ரோகிணி, மிருகசீரிஷம் 1,2-ஆம் பாதங்கள்.**

எந்த கஷ்டத்தையும் தாங்கக்கூடிய சகிப்பு தன்மை அதிகம் கொண்ட ரிஷப ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 2-ல் ராகு, 7-ல் செவ்வாய், 8-ல் சூரியன், சனி, கேது சஞ்சரிப்பதால் நீங்கள் எதிலும் நிதானத்துடனும், முன்னெச்சரிக்கையுடனும் செயல்படுவது நல்லது. உடனிருப்பவர்களிடம் பேச்சை குறைப்பது சிறப்பு. உடல் ஆரோக்கியம் அவ்வளவு சிறப்பாக அமையாது. அன்றாட பணிகளை செய்து முடிப்பதில் மந்தநிலை உண்டாகும். வாகனங்களில் பயணம் செய்யும் போது சற்று கவனம் தேவை. குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்து நடப்பதும், நற்பலனைத் தரும். குரு 7-ல் இருப்பதால் பணவரவுகள் திருப்திகரமாக அமைந்து உங்கள் தேவைகள் பூர்த்தியாகும். வெற்றி தரும் நாட்கள் - 7, 8, 11.




**மிதுனம் மிருகசீரிஷம் 3,4-ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3-ஆம் பாதங்கள்.**

சமூக வாழ்வில் நல்ல ஈடுபாடும் கலை, இசைத் துறைகளில் சிறந்து விளங்கும் ஆற்றல் கொண்ட மிதுன ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 6-ல் செவ்வாய், 7-ல் குரு, புதன் சஞ்சரிப்பதால் சகல விதத்திலும் வலமான பலன்களை பெறுவீர்கள். தனவரவு உண்டாகும். குடும்ப ஒற்றுமை ஓரளவு சிறப்பாக இருக்கும். உற்றார் உறவினர்களும் சாதகமாக செயல்படுவார்கள். உத்தியோகஸ்தர்கள் அனைத்துப் பணி- களையும் சிறப்பாக செய்து முடிக்கலாம். மாணவர்கள் முயன்று படித்தால் மட்டுமே நல்ல மதிப்பெண்களை பெற முடியும். ஆருத்ரா தரிசனம் அன்று சிவ வழிபாட்டை மேற்கொண்டால் சிறப்பான பலனை அடையலாம்.

வெற்றி தரும் நாட்கள் - 5, 6, 9, 10.




**கடகம் புனர்பூசம் 4-ஆம் பாதம், பூசம், ஆயில்யம்.**

தன்னை நம்பியவர்களுக்கு நல்ல எண்ணத்துடன் உதவிகள் செய்தாலும் அடிக்கடி மற்றவர்களால் ஏமாற்றங்களை சந்திக்கும் கடக ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு ருணரோக ஸ்தானமான 6-ல் சனி, கேது, சூரியன் சஞ்சரிப்பதால் எல்லா வகையிலும் ஏற்றமிகுந்த பலன்களை அடைவீர்கள். எடுக்கும் முயற்சியில் அனுகூலம் இருக்கும். அசையும், அசையா சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும். குடும்பத்தில் சுபச் செலவுகள் அதிகரிக்கும். பணவரவுகள் சிறப்பாக அமைவதுடன் எதிர்பாராத உதவிகளும் கிடைக்கப் பெற்று தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பார்க்கும் உயர்வுகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் அமையும். சிலருக்கு வெளியூர், வெளிநாடுகளில் பணிபுரிவதற்கான யோகம் கிட்டும். மாணவர்களின் கல்வி திறன் சிறப்பாக இருக்கும். வெற்றி தரும் நாட்கள் - 5, 6, 7, 8, 11.




**சிம்மம் மகம், பூரம். உத்திரம் 1-ஆம் பாதம்.**

அன்பு, பண்பு, மரியாதை, தெய்வ பக்தி யாவும் உடையவராகவும், சூது வாது அறியாமல் அனைவரையும் எளிதில் நம்பிவிடுபவராகவும் விளங்கும் சிம்ம ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு பஞ்சம ஸ்தானமான 5-ல் குரு, புதன் சஞ்சரிப்பதும் லாப ஸ்தானமான 11-ல் ராகு சஞ்சரிப்பதும் சிறப்பான அமைப்பாகும். பண வரவுகள் சிறப்பாக இருக்கும். கடன்கள் சற்று குறையும். திருமண சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் அனுகூலம் உண்டாகும். பெரிய மனிதர்களின் தொடர்பு கிட்டும். உத்தியோகஸ்தர்களுக்கு பணியில் நிம்மதியான நிலையிருக்கும். எதிர்பார்க்கும் உயர்வுகளும் கிடைக்கும். கொடுக்கல்- வாங்கலில் சற்று சிந்தித்து செயல்பட்டால் லாபத்தினை பெற முடியும். மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவதுடன் விளையாட்டு போட்டிகளிலும் சிறந்து விளங்க முடியும். வெற்றி தரும் நாட்கள் - 7, 8, 9, 10.




**கன்னி உத்திரம் 2,3,4-ஆம் பாதங்கள், அஸ்தம், சித்திரை 1,2-ஆம் பாதங்கள்.**

எவ்வளவு தான் கற்று அறிந்து இருந்தாலும் எந்தவித தயக்கமும் இன்றி தாம் கற்றதை பிறருக்கும் போதிக்கும் பண்பு கொண்ட கன்னி ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 3-ல் செவ்வாய், 4-ல் புதன், 5-ல் சுக்கிரன் சஞ்சரிப்பதால் எதிர்பாராத உதவிகள் சில கிடைத்து அதன் மூலம் உங்களுக்கு இருக்கும் பிரச்சினைகள் குறையும். மங்களகரமான சுபகாரியங்கள் எளிதில் கைகூடும். வெளியூர், வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரிய விரும்புவோரின் விருப்பங்களும் நிறைவே- றும். தொழில், வியாபாரத்திலும் சிறப்பான லாபம் அமையும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த மந்த நிலை நீங்கி சுறுசுறுப்புடன் செயல்படுவார்கள். ஆருத்ரா தரிசனத்தன்று சிவ வழிபாட்டை மேற்கொள்வது, சனிக்குரிய பரிகாரங்கள் செய்வது மிகவும் நல்லது.

வெற்றி தரும் நாட்கள் - 9, 10, 11.




**துலாம் சித்திரை 3,4-ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3-ஆம் பாதங்கள்.**

எந்தவொரு விஷயத்திலும் சிந்தித்து செயல்படும் ஆற்றலும், கொடுத்த வாக்குறுதியினை எப்பாடுபட்டாவது காப்பாற்றும் பண்பும் கொண்டவராக விளங்கும் துலா ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு முயற்சி ஸ்தானமான 3-ல் சூரியன், சனி, கேது சஞ்சரிப்பதும், ராசியதிபதி சுக்கிரன் 4, 5-ல் சஞ்சரிப்பதும் உன்னதமான அமைப்பு என்பதால் உங்களுடைய செயல்களுக்கு பரிபூரண வெற்றி கிடைக்கும். பொருளா- தார நிலை சிறப்பாக இருக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றங்களைப் பெற முடியும். வெளியூர் வெளிநாட்டு தொடர்புடையவற்றால் நல்ல லாபம் கிடைக்கும். கொடுக்கல்- வாங்கலில் பெரிய தொகைகளை பிறருக்கு கடனாக கொடுப்பதை தவிர்க்கவும். மாணவர்கள் எதிர்பார்த்த மதிப்பெண்களை பெற்று விட முடியும். வெற்றி தரும் நாட்கள் - 5, 6, 11.




**விருச்சிகம் விசாகம் 4-ஆம் பாதம், அனுஷம், கேட்டை.**

பேச்சில் கடுமை இருந்தாலும் அதில் உண்மையிருக்கும் என்பதை யாராலும் மறுக்க முடியாத அளவிற்கு பேசும் ஆற்றல் கொண்ட விருச்சிக ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு குரு பகவான் 2-ல் இருப்பதால் பணபுழக்கம் சிறப்பாக இருக்கும் என்றாலும் ஜென்ம ராசியில் செவ்வாய், 2-ல் சனி, கேது சஞ்சரிப்பதால் குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்து செல்வது, பேச்சில் பொறுமையுடன் இருப்பது நல்லது. ஆரோக்கியத்தில் அக்கறை எடுத்துக் கொள்வது உத்தமம். பணவரவுகள் சிறப்பாக இருந்தாலும் ஆடம்பர செலவுகளை குறைப்பதன் மூலம் கடன்கள் ஏற்படுவதை தவிர்க்கலாம். திருமண சுபகாரியங்களுக்கான முயற்சிகளில் சாதகமான பலன் உண்டாகும். அசையும், அசையா சொத்துகள் வாங்கும் முயற்சிகளில் சிந்தித்து செயல்பட்டால் வீண் விரயங்களை தவிர்க்கலாம். வெற்றி தரும் நாட்கள் - 5, 6, 7, 8.




**தனுசு மூலம், பூராடம், உத்திராடம் 1-ஆம் பாதம்.**

மற்றவர்களுக்கு உதவி செய்யும் பண்பும் சிறு வயதிலிருந்தே தெய்வ பக்தியும், தர்ம சிந்தனையும் கொண்ட தனுசு ராசி நேயர்களே, உங்களுக்கு ஜென்ம ராசியில் சூரியன், சனி, கேது சஞ்சரிப்பதால் எதிலும் நிதானத்துடன் செயல்படுவது நல்லது. கணவன்- மனைவியிடையே ஒற்றுமை குறையும். முன்கோபத்தைக் குறைத்துக் கொண்டு பேச்சில் பொறுமையை கடைப்பிடிப்பது உத்தமம். நீங்கள் நல்லதாக நினைத்து செய்யும் காரியங்களும் சில நேரங்களில் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்தி விடும் என்பதால் எதிலும் கவனமாக செயல்படுவது நல்லது. உத்தியோகத்தில் வேலைப்பளு சற்றுக் கூடுதலாக இருக்கும். தேவையற்ற பயணங்களை தவிர்த்தால் அலைச்சல்கள் குறையும். மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்துவதோடு விளையாட்டு போட்டிகளில் சிந்தித்து செயல்பட்டால் வெற்றியினைப் பெற முடியும்வெற்றி தரும் நாட்கள் - 7, 8, 9, 10.




**மகரம் உத்திராடம் 2,3,4-ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2-ஆம் பாதங்கள்.**

எப்பொழுதும் ஜாலியாகவும், நகைச்சுவை உணர்வுடனும், கள்ள கபடமற்று வெகுளித்தனமாக செயல்படும் குணம் கொண்ட மகர ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு 6-ல் ராகு, 11-ல் செவ்வாய் சஞ்சரிப்பதால் எதையும் எதிர்கொண்டு ஏற்றங்களை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும் என்பதால் கிடைக்கும் வாய்ப்புகளை நழுவ விடாதிருப்பது உத்தமம். கூட்டாளிகளையும், தொழிலாளர்களையும் அனுசரித்து செல்வதன் மூலம் ஓரளவு ஆதரவுடன் செயல்படுவார்கள். கொடுக்கல் - வாங்கலில் பெரிய தொகைகளை ஈடுபடுத்துவதை தவிர்க்கவும். உத்தியோகஸ்தர்களுக்கு பணியில் நிம்மதியான நிலை இருக்கும். மாணவர்கள் கல்வி ரீதியாக மேற்கொள்ளும் பயணங்களால் தேவையற்ற அலைச்சல்களை சந்திக்க வேண்டியிருக்கும். வெற்றி தரும் நாட்கள் - 9, 10, 11.




**கும்பம் அவிட்டம் 3,4-ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1,2,3-ஆம் பாதங்கள்.**

தம்முடைய சொந்த பொருட்களை பிறருக்கு தானமளிக்க கூடிய அளவுக்கு பரந்த நோக்கம் கொண்டவராக விளங்கும் கும்ப ராசி நேயர்களே, உங்கள் ராசிக்கு லாப ஸ்தானமான 11-ல் குரு, சூரியன், சனி சஞ்சரிப்பதால் நீங்கள் நினைத்ததெல்லாம் நடக்ககூடிய உன்னதமான வாரமாக இவ்வாரம் இருக்கும். நல்ல வாய்ப்புகள் உங்களை தேடி வரும். எடுக்கும் முயற்சிகளில் தடையின்றி வெற்றி கிட்டும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உடனிருப்பவர்களால் அனுகூலங்கள் உண்டாகும். புதிய வேலை தேடுபவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு கிட்டும். மாணவர்கள் தேவையற்றப் பொழுது போக்குகளை தவிர்த்து கல்வியில் சற்று கவனமுடன் செயல்படுவது உத்தமம். வெற்றி தரும் நாட்கள் - 5, 6, 11.




**மீனம் பூரட்டாதி 4-ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி .**

பயந்த சுபாவம் கொண்டவராக இருந்தாலும் தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள காலம் நேரம் பார்க்காமல் உழைக்கும் ஆற்றல் கொண்ட மீன ராசி நேயர்களே, சூரியன் புதன் 10-ல் சஞ்சரிப்பதால் நல்ல வாய்ப்புகள் உங்களை தேடி வரும். உங்களுடைய முயற்சிகளுக்கு பரிபூரண வெற்றி கிடைக்கும். உங்களது மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். செய்யும் தொழில், வியாபாரத்தில் இதுவரை இருந்த போட்டிகள், மறைமுக எதிர்ப்புகள் யாவும் விலகி தொழில் மேன்மையடையும். கூட்டாளிகளை சற்று அனுசரித்து செல்வது நல்லது. சிலருக்கு வீடு, வாகனம் போன்றவற்றை வாங்குவதில் சிறு தடை தாமதத்திற்கு பின் அ-னுகூலப் பலன் கிட்டும். மாணவர்கள் தேவையற்ற நண்பர்களின் சகவாசத்தை தவிர்த்து கல்வியில் ஈடுபாட்டுடன் செயல்படுவது உத்தமம். வெற்றி தரும் நாட்கள் - 7, 8.

# ஜென் கதைகள்

பல்கலைக்கழக மாணவன் ஒருவன் ஜென் குரு ஒருவரைக் காணச் சென்றான்.

'நீங்கள் கிறிஸ்த்தவர்களின் வேதமான பைபிளைப் படித்திருக்கிறீர்களா?' என்றான்.

'இல்லை, நீ படித்தால் கேட்கிறேன்' என்றார்.

அவன் படிக்க ஆரம்பித்தான்.

'உன் எண்ண விதைகளை எந்த மழைக்காகக் காக்க வைக்கிறாய்? அழகான இந்த லில்லி மலர்கள் எவ்விதம் வளர்கின்றன பார். அவை உழன்றோ, சுழன்றோ, திர்ந்தோ, வருந்திக் கொண்டோவோ உழைக்கின்றன? இத்தனை புகழ் அடைந்த சாலமன் அட்டவணை போட்டுக்கொண்டா உழைத்தான்? எண்ணங்களை நாளைக்காகக் காக்கவைத்தால் நாளை எண்ணமே செயலென்று கருதிவிடக் கூடும்'.

மாணவன் தொடர்ந்தான்.

'கேளுங்கள் கொடுக்கப்படும் தேடுங்கள் கிடைக்கப்பெறும் தட்டுங்கள் திறக்கப்படும். கேட்டவன், கொடுத்தவன், தேடியவன், தட்டியவன் அனைவருக்கும் அது திறக்கப்படும்'.

'மிக உன்னதமான கருத்துக்கள். இதை உபதேசித்தவர் பௌத்தத்திலிருந்து அதிக தூரத்தில் இல்லை'.

நம்முடைய தினசரி வாழ்க்கையிலிருந்து ஒரு உதாரணம் சொன்னால் இந்தக் கதையின் கருத்து விளங்கும்.


'அந்த பையனைப் பார்த்தீங்களா? நம்ம அருண்மாதிரியே ரொம்ப க்யூட்' என்று சொல்லும் தாய்மார்களின் மனப்பாங்கு இந்த ஜென் துறவியிடம் தெரிகிறது.

ஒரு விஷயத்தைப் பற்றி நாம் உருவகப்படுத்தி வைத்திருக்கிறதை விட சிறப்பான கருத்தை இன்னொருவர் சொன்னால் கூட அதை நாம் எப்படி ஏற்போம் தெரியுமா?

'ஏறக்குறைய கிட்ட வந்துட்டே'

ஞானிகள் மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு உன்னதமான கருத்துக்களை அடையாளம் காணுகிறவர்களாக இருப்பார்கள்.

ஆனால் அவர்கள் அடையாளம் காணும் விதத்தில் தாங்கள் சார்ந்திருக்கும் மதத்தின்மேல் இருக்கும் பெருமிதம் வெளிப்படும்.



# சபிக்கப்பட்ட துறவி



பால் மலைத் தொடரில் மிகவும் உயரமானது பலிபீடச் சிகரம். அதன் உச்சியில் பாழடைந்து சிதிலமான மடாலயம் ஒன்று இருளடைந்து கிடக்கிறது. ஒரு காலத்தில் அதைப் பேழை என்று அழைத்தார்கள். அது ஆதி வெள்ளப் பெருக்கோடு சம்பந்தப்பட்டது என்று நீண்டகாலமாகப் பேசப்பட்டு வந்தது

பேழை அல்லது கப்பல் என்று குறிப்பிடப்படும். அதைப் பற்றிப் பல கதைகள் பின்னப்பட்டுப் பேசப்பட்டு வந்தன. ஒரு கோடை காலத்தில் அந்த மலையோர மக்களோடு நான் காலம் கழிக்க நேர்ந்த போது அவர்கள் சொன்ன கதை இது தான்

அந்தப் பகுதி வளமான பள்ளத் தாக்குகளையும், வற்றாத நீரோடைகளை யும் பக்குவமான பருவ நிலைகளையும் கொண்டதாகத் திகழ்ந்ததால் அவர்கள் அங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட முடிவு செய்தார்கள்.

நோவாவின் வாழ் நாள் முடிவுக்கு வருவதாகத் தோன்றியதால் அவர் தம் புதல்வர்களில் ஒருவரான சேம் என்பவனை அழைத்தார். அவன் கனவுகளில் மூழ்கி இருப்பவன். தன்னைப் போலவே எதிர்-காலம் பற்றிய எண்ணங்கள் கொண்டவன் என்பதால் தான் அவனை மட்டும் அழைத்தார்.

நோவா அவனிடம் இப்படிச் சொன்னார் "கேள் மகனே! உனது தந்தையின் அறுவடை ஆண்டுகள் செல்வ வளம் மிக்கவையாக அமைந்திருந்தன. இனி இந்தக் கடைசிக் கதிர் அரிவாளுக்குக் காத்திருக்கிறது நீயும் உன் சகோதரர் களும், உங்கள் பிள்ளைகளும், அந்தப் பிள்ளைகளின், பிள்ளைகளும் இந்தபூமியின் மீது பல்கிப் பெருகிமக்களால் இதை நிரப்புவீர்களாக! கடற்கரை மணலினும் பலவாக நீங்கள் பெருக வேண்டும். அப்படித்தான் கடவுள் எனக்கு வாக்களித்திருக்கிறார்.

உயிர் சுடர் தெறிக்கும் இந்த நாட்களில் எனக்கு மரணபயம் ஏற்பட்டு விட்டது. பேராசையும், கயமையும் மனிதரிடையே பரவி ஆதிவெள்ளப் பெருக்கை மறந்து விடுவார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. நூற்றி ஐம்பது நாட்கள் வெள்ளத்தின் ஆழத்திலும், அலையடிப்பிலும் சூழலிலும் நமது பேழை தத்தித் தவித்ததையும் அதில் நாம் வெற்றி கண்டதையும் அவர்கள் மறந்துவிடுவார்கள். புதிய வாழ்வுக்கு வழி வகுத்த நம்பிக்கைத் தேவனையும் அவர்கள் மறந்து விடக் கூடும்.

மகனே! அவ்வாறு ஆகாதவாறு நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும். இந்த மலைத் தொடரிலேயே உயரமான சிகரத்தின் மீது பலிபீடம் ஒன்றைக் கட்டு அந்த சிகரத்திற்குப் பலிபீடச் சிகரம் என்ற பெயரிடு. அந்தப் பலிபீடத்தைச் சுற்றி ஒரு பெரிய வீட்டைக் கட்டிவிடு. அது எல்லாவிதத்திலும் நமது கப்பலைப் போலவே அமைந்திருக்க வேண்டும். ஆனால் அளவில் சிறியதாக அமைந்திருக்க வேண்டும். அதற்கும் கப்பல் என்றே பெயரிடு.

அந்தப் பலிபீடத்தின் மீது தான் நான் என் நன்றியை வழங்கப் போகிறேன். நான் அங்கே ஏற்றி வைக்கப் போகும் தீயை நீ என்றும் அணையாமல் பாதுகாத்து வரவேண்டும்.

அந்த இல்லத்தில் சிறு குழுவினர் மட்டும் வாழ்ந்து வரவேண்டும். ஒன்பது பேர் மட்டும் ஒன்று குறையவும் கூடாது, அதிகரிக்கவும் கூடாது. ஒன்பதே பேர் அவர்க-ளைக் கப்பல் தோழர்கள் என்றே அழைக்க வேண்டும். அவர்க-ளில் யாராவது இறந்துவிட்டால், உடனே கடவுள் ஒருவரை அனுப்பி வைப்பார். அவர்கள் யாரும் அந்த மடாலயத்தை விட்டு வெளியேறக் கூடாது. அவர்கள் பிரிந்து விடாமல் ஒரு கொத்தாக வாழ்ந்து வரவேண்டும். அந்த இல்லமே அவர்க-ளின் தாயகம். அணையா நெருப்பே அவர்களின் நம்பிக்கை. அவர்கள் வேண்டிக் கொள்ள வேண்டியது வழிகாட்டும் எல்லாம் வல்லவனையே.

தந்தை சொல் ஒவ்வொன்றையும் கவனமாகக் கேட்டு வந்த புதல்வன் சேம் அந்த ஒன்பது பேர் எண்ணிக்கைக்கான காரணத்தைக் கேட்டான். நீண்ட நெடிய காலங்களைச் சுமந்து கொண்டிருப்பதால் கனம் தாளாத அந்தக் குடும்பத் தலைவர் அதற்குப் பதில் சொன்னார்.

மகனே நமது பேழைக் கப்பலில் பயணம் செய்தவர்களின் எண்ணிக்கை அது என்றார். சேம் நினைத்துப் பார்த்தான். அவன் கணக்கிற்கு எட்டுத்தான் வந்தது தாய்,தந்தை,தான்,தன் மனைவி, இரண்டு சகோதரர்கள். அவர்களின் மனைவியர் ஆக எட்டுப் பேர்தான் வந்தது. ஒன்பதாவது யார்? என்று குழம்பினான்.

அவனது குழப்பத்தை உணர்ந்து கொண்டார் தந்தை. அந்த மாபெரும் இரகசியத்தை உன்னிடம் சொல்லிவிடுகிறேன். அந்த ஒன்பதாவது மனிதர் கண்களுக்குப் புலப்படாதவர். அவர் நம்முடன் இருந்தார். அவரே எனது வழி காட்டியாகவும், கப்பலைச் செலுத்தும் கப்பித்தனாகவும் இருந்தார். அவர் என் கண்களுக்கு மட்டுமே புலப்பட்டார். அவ்வளவு தான் நான் சொல்ல முடியும் இற்கு மேல் ஒன்றும் கேட்காதே. ஆனால் அவர் நினைவாகவும் ஓர் அறையை ஒதுக்கிவிடு இவையே என் விருப்பங்கள் மகனே நீதான் இவற்றை எல்லாம் நடத்தி வைக்க வேண்டும் என்றார் நோவா.

தந்தை சொற்படி எல்லாவற்றையும் சிறப்பாகச் செய்து முடித்தான் சேம்.

நோவா காலமானபோது அவரை அந்தப் பலிபீடத்தின் அடியில் அடக்கம் செய்தார்கள். காலம் காலமாக அந்தக் கப்பல் வடிவ மடாலயம் நோவாவின் நினைவாக நின்று நிலைத்து வந்தது.

பல நூற்றாண்டுகள் கழிந்த பிறகு அந்த மடாலயத் துறவிகள் நன் கொடைகளை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்தார்கள். சுற்றுவட்டார ஊர்க-ளில் இருந்து நன் கொடைகள் வந்து குவிந்தன. பொன்னும், வெள்ளியும், முத்தும், பவளமும், வைரங்களுமாக மடாலயம் செழித்தது.

சில தலைமுறைகள் கழிந்த பிறகு ஒரு சமயம் மடாலயத்தின் ஒன்பதின்மாரில் ஒருவர் காலமானார். பழைய மரபுப்படி உடனே ஒருவரைச் சேர்த்து கொள்ள முடியாது. அவர் கடவுளால் அனுப்பி வைக்கப் படுவார். யார் முதலில் வந்து அடைக்கலம் கோருகிறாரோ அவரே கடவுளால் அனுப்பப்பட்டவர்.

அப்படிக் காத்திருக்கும் போதுதான் ஒருவர் வந்தார். இடம் கேட்டார். ஆனால் அவரை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டார் மூத்ததுறவி.

காரணம் வந்த மனிதரின் தோற்றம் அப்படி இருந்தது பஞ்சத்தால் அடிபட்டு உடல் மெலிந்து அழுக்கடைந்து கந்தலாடையுடன் காயங்களுடன் காணப்பட்டார் அடைக்கலம் கேட்டவர்

மூத்த துறவி மறுத்தும் அந்த புதிய ஆள் விடுபவராக இல்லை. அந்த இடத்தைவிட்டு போகாமல் தொடர்ந்தும் நச்சரித்துக் கொண்டே இருந்தார்.

கடைசியில் அவரை ஒரு வேலைக்காரராக மட்டும் ஏற்றுக் கொண்டார்கள்.

இறைவன் ஒன்பதாவது ஆளை அனுப்பிவைப்பார் என்று மூத்த துறவி காத்திருந்தார்.

ஆனால் வேறுயாருமே வரவில்லை அந்த மடாலயம் எட்டுத் துறவிகள் ஒரு வேலைக்காரனை மட்டும் கொண்டு இயங்கி வந்தது

இப்படியே ஏழு ஆண்டுகள் ஓடிவிட்டன. மடாலயம் செல்வச் செழிப்பில் திளைத்தது. அதன் சொத்துக்கள் எவ்வளவு இருக்கும் என்று யாராலும் கணிக்க முடியாத அளவுக்கு இருந்தது

கண்களுக்கு எட்டிய தூரம் வரைக்கும் நிலபுலன்கள் மடாலயத்திற்கு இருந்தன. மூத்த துறவி மிக்க மகிழ்சியடைந்தவராக வாழ்ந்து வந்தார். புதிய வேலைக்காரன் தான் அந்த அதிர்ஷ்டத்தைக் கொண்டு வந்தான் என்று அவனைப் பாராட்டினார்.

எட்டாவது ஆண்டின் ஆரம்பத்தில் திடீரென்று எல்லாம் தடுமாற ஆரம்பித்தன. மடாலயத்தில் குழப்பங்கள் முரண்பாடுகள் தோன்றின. செல்வம் சடசடவெனச் சரிய ஆரம்பித்தது.

அந்தச் சரிவிற்கும், வீழ்ச்சிக்கும் அந்த வேலைக்கரானே காரணம் என்று குற்றம் சாட்டினார் மூத்த துறவி

அவரது தலைமையில் வாழ்ந்த துறவிகள் விதிகளை மீறி நடக்க ஆரம்பித்தார்கள். இரண்டே ஆண்டுகளில் எல்லாச் சொத்துக்களையும் அந்த மடாலயம் இழந்தது.

நிலங்களை குத்தகைக்குப் பயிரிட்டு வந்தவர்கள் அந்த நிலங்களைச் சொந்தமாக்கி கொண்டார்கள்.

இவற்றின் விளைவாக மூத்த துறவி அந்த மடாலயத்திலேயே சிறைக் கைதி ஆனார். அவர் வாய் பேசாதவராக ஆக்கப் பட்டார். இன்று வரைஅப்படித்தான் .

கதை இப்படிப் போகிறது

இவற்றை எல்லாம் கண்ணால் பார்த்தவர்கள் எவரும் இல்லை என்றாலும் மலையோரக் கிராமமக்கள் உறுதியாக இப்படிச் சொன்னர்கள் அந்த மூத்த துறவி பாழடைந்த மடாலயத்தில் இன்னும் உலவி வருகிறாராம் யார் கண்ணிலும் அவர் படுவதில்லை வெளியாட்கள் யாராவது அங்கே போகநேர்ந்தால் அவர் சட்டென ஓடி ஒளிந்து கொள்கிறாராம்.

இந்தக் கதைஎன் மனதைக் கொள்ளை கொண்டு விட்டது

அந்தப் பாழடைந்த மடாலயத்தின் இடிபாடுகள் நடுவே உலவும் அந்த மூத்த துறவி அல்லது அவரது நிழல் என் மனக் கண்ணில் தோன்றியது. அது என் குருதியைக் கொதிக்க வைத்தது என் எலும்பையும் சதையையும் குத்திக் கிளறியது. என் சிந்தனையை அலைக் கழித்தது

நான் மலையேறி அந்தச் சிகரத்தை அடைந்தே தீர்வது என்று முடிவெடுத்தேன்.

– மிர்தாத் –

# மணவிலக்கம் என்னும் கருத்தியல் கருவி: ஜோதிர்லதா கிரிஜாவின் தலைமுறை இடைவெளிகள்

மனிதச் சிந்தனை என்பது எப்போதும் மனித மைய நோக்கம் கொண்டதாக இருக்கிறது. நிலம், நீர், வளி, ஒளி, வானம் என ஐந்து பரப்புகளும் இணைந்திருப்பதும், அவ்விணைவுக்குள் தாவரங்கள் - அவற்றின் உட்பிரிவுகளான செடிகள், கொடிகள், மரங்கள் என்பனவும், விலங்குகள் - அதற்குள் நடப்பன, ஊர்வன, பறப்பன, நீந்துவன என்பனவும் முக்கியமானவை என்றாலும் மனிதர்கள் இவையெல்லாம் தங்களுக்காக உருவாக்கப்பட்டவை என்றே நினைக்கின்றனர். அவர்கள் உருவாக்கும் சொற்கள் எப்போதும் மனிதர்களை மையமிட்டே பொருளை - அர்த்தத்தை உற்பத்தி செய்கின்றன. உலகம் என்ற சொல்லை மனிதர்களின் வெளியாகவே புரிந்து வைத்திருக்கிறது மனித மனம்.

'உலகம் கெட்டுப்போச்சு' என்ற சொல்லை உபயோகிக்கும் போது நதிநீர் சாக்கடையாகிவிட்டதையும், நிலம் துளையிடப் பட்டு அடியாழத்தில் இருக்கும் வளிச் சேர்மானங்களையும் நீர்நிலைச் சேர்மங்களையும் வெளிக்கொண்டுவந்து பயன்படுத்துவதையும், மணல்படுகைகள் வெட்டி எடுக்கப்பட்டு விற்பனைப் பொருட்களாக மாறுவதையும் காடுகள் அழிக்கப்படுவதையும் பற்றி நினைப்பதில்லை. உலகம் இருக்கிறது என்பதை உணரவேண்டும் என்றால், மனிதர்கள் இருந்துகொண்டே இருக்கவேண்டும். ஐந்து மண்டலங்களால் ஆன இந்த பூமியின் இருப்பு இயற்கைப் பொருட்களால் ஆனது மட்டுமல்ல. செயற்கைப் பொருட்களாலும் நிரப்பப்பட்டதே. செயற்கைப் பொருட்களைச் செய்வதற்கு மனிதர்கள் தேவை. ஒருவிதத்தில் மனிதர்களே செயற்கைப் பொருட்கள்தான். அறிவியலின் நிகழ்தகவுப்படி ஓர் ஆணும் ஒரு பெண்ணும் சேர்ந்து உருவாக்கும் பண்டமாகவும், பிண்டமாகவும், உயிரியாகவும் மனிதர்கள் இருக்கிறார்கள்.

## எழுதப்படும் பெண்களும் எழுதும் பெண்களும் - 25



மனிதர்களை உருவாக்கும் தொழிற்சாலை குடும்பவெளி. அக்குடும்பவெளியை நிரவகிக்க உருவாக்கப்படும் நடைமுறைகளே அறங்கள். குடும்ப அறங்களை உருவாக்கியது தனிமனிதர்களின் தேவைகளும் நெருக்கடிகளுமே என்பது மானிடவியல் என்னும் அறிவுப்புலப்பார்வை. ஆனால் சமயப்பார்வைகள் இதற்கு மாறானவை. குடும்ப வெளிக்குள் ஒருத்தியோ ஒருவனோ உறுப்பினராக ஆவதைத் தீர்மானித்து கடவுளின் செயல் என்கின்றன சமயங்கள். சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன திருமணங்கள் என்ற புகழ்பெற்ற சொற்றொடரின் மாற்றுவடிவங்களை ஒவ்வொரு சமய நடவடிக்கைகளும் முன்வைக்கின்றன. அதன் காரணமாகவே குடும்ப அமைப்பு புனிதமானது என்றும், அதன் உறுப்பினர்களாக இருப்பவர்கள் சமய நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பட வேண்டுமென்றும் சொல்கின்றன.

நவீனத்துவம் எல்லா வகையிலும் மரபுக்கு எதிரானது. மரபான குடும்ப வாழ்க்கைமுறை பிணைப்பையும் மேல்கீழ் என்ற அதிகாரத்துவ அடுக்கை ஏற்பதையும், மேல் நிலையில் இருப்பவர்களின் ஆணைக்கு அடங்கி நடப்பதையும் வலியுறுத்திய நிலையில் நவீனக் குடும்ப அமைப்பு தனிமனிதர்களின் சுதந்திரத்தையும் விடுதலையையும் முன்வைத்து மரபோடு முரண்பட்டது. ஆணை அதிகாரம் மிக்கவனாகவும் பெண்ணை அவனைச் சார்ந்து இருக்கவேண்டியவளாகவும் நம்பவைப்பதற்கான சடங்குகளைக் கொண்ட மரபான திருமண முறைகளை நிராகரிப்பதிலிருந்து நவீனத் திருமணம் வடிவம் கொள்கிறது. மதச்சட்டங்களை முன்வைக்கும் புரோகிதர்களை - குருமார்களை விலக்குவதிலிருந்தும் கோயில்களைக் கைவிட்டு மண்டபங்களையும் அரசாங்கத் திருமணப் பதிவு நிலையங்களையும் மணம் நடக்கும் வெளிகளாக ஆக்கியதிலிருந்து குடும்ப அமைப்பின் மாறுதல்கள் தொடங்கின.

ஆணையும் பெண்ணையும் பிரித்துப் பார்க்க அனுமதிக்காத குடும்ப அமைப்பைக் கேள்விக்குட்படுத்துவன நவீன அரசுகள் உருவாக்கும் குடும்பச் சட்டங்கள். குடும்ப அமைப்பைச் சமய நடவடிக்கைகளின் பகுதியிலிருந்து பிரித்து அரசின் சட்ட வெளிக்குள் கொண்டுவரும் நடவடிக்கை என்ற வகையில் திருமணச்சட்டங்கள் அல்லது குடும்பச் சட்டங்கள் என்பன வரவேற்கத்தக்கன. இந்தியாவில் குடும்ப அமைப்பைக் கட்டுப்படுத்தும் பொதுச் சட்டம் 1956 இல் கொண்டுவரப்பட்டது. அதன் பிறகு விவாகரத்து உரிமைகள் சட்டப்படி வழங்கப்பட்டன. ஆனால் அதற்கு முன்பே ஒவ்வொரு சமயவாழ்க்கையும் வெவ்வேறு வகையிலான பிரிவுகளையும் திருமண நடைமுறைகளையும் பின்பற்றி வந்தன. அவற்றில் நெருக்கடிகளும் முரண்பாடுகளும் ஏற்பட்டபோது தனித்தனியாகச் சட்டங்களும் இயற்றப்பெற்றன. காலனி ஆட்சியாளர்களின் சமயமாகக் கருதப்படும் கிறித்தவ சமயம் இந்தியாவில் விவாகரத்தை அனுமதித்த முதல் சமயம். பிரித்தானியர்கள் காலத்தில்- 1869 இல் உருவாக்கப்பட்ட கிறித்தவக் குடும்ப நடைமுறைச் சட்டம் மணவிலக்கத்தை கிறித்தவர்களுக்கு மட்டும் அனுமதித்துள்ளது. அதன்பிறகு 1936 பார்சி சமூகமும் 1939 இசுலாமிய சமூகமும் விவாகரத்தை அங்கீகரித்து சட்டம் இயற்றும் நெருக்கடியை உருவாக்கியுள்ளன. இதில் கடைசியாகச் சேர்ந்த சமயம் இந்துசமயம். இந்திய விடுதலைக்குப் பின்னர் 1955 இல் கொண்டுவரப்பட்ட விவாகரத்துச் சட்டத்தின் வழியாகவே

இந்து சமயத்தைச் சேர்ந்தவர்களின் குடும்ப வாழ்க்கை, அரசின் சட்ட வளையத்திற்குள் வந்தது. இந்து சமயத்திலிருந்து தங்களைப் பெரிதாகப் பிரித்துப் பார்க்காத தன்மைகொண்ட், சீக்கிய, ஜைன, புத்த மதத்தைச் சேர்ந்தவர்களும் அதே சட்டவரைவின்படி இழுத்துக் கொள்ளப்பட்டனர். மூன்றுமுறை தலாக் என்ற சொல்லைச் சொன்னால் போதும் மணவிலக்கம் தரப்பட்டதாக ஆகிவிடும் என்ற நடைமுறைக்கெதிராகப் புதிய முத்தலாக் சட்டம் இப்போது (2019) இயற்றப்பட்டுள்ளது. மணவாழ்க்கை சார்ந்து இசுலாமியப் பெண்களுக்கு கூடுதல் உரிமைகள் வழங்கும் நோக்கம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதன் சாதக பாதகங்கள் இனிமேல்தான் வெளிப்படும்.

அரசின் கவனத்திற்குள் வருவதின் வெளிப்பாடு, எல்லாவற்றையும் அதன் பேரேடுகளில் பதிவு செய்தலே ஆகும். இந்தியத் திருமணங்கள் 1956 முதல் முறைப்படி பதிவுசெய்யப்படும் ஒன்றாக மாறின. எல்லாவற்றிலும் சட்டத்தை மதிக்காத இந்திய மனோபாவம் திருமணப்பதிவுச் சட்டத்திலும் வெளிப்படுகிறது. இன்றும்கூட பதிவுபெறாத குடும்பங்கள் இருக்கவே செய்கின்றன. திருமணங்களைப் பதிவுசெய்ய வேண்டும் எனச் சொன்னதின் மறுதலையாகப் பிரிதல் என்னும் நிகழ்வு ஏற்கப்பட்டது. மணவிலக்கல், விவாகரத்து என்ற சொல்லின் ஆட்சி பிணைப்பும் சேர்ந்து வாழ்தலும் தரும் வலியையும் பாரத்தையும் தூக்கி எறியும் மனத் தைரியத்தின் அடையாளம். பன்னெடுங்காலச் சமய வாழ்க்கையின் வழியாக உருவாக்கப்பட்ட குடும்ப அமைப்பில் பெரும் உடைப்பாக அமைந்தது மணவிலக்கம். குடும்ப வாழ்க்கையில் அதற்கு முன்னும் உடைப்புகள் இருந்தன. துறவு வாழ்க்கை என்பது ஒருவித உடைப்பே. இல்லறத்தின் மாற்றாகத் துறவைப் பேசப்பட்ட வரலாறு நமக்குத் தெரியும். குடும்பப் பாரம் சுமக்க விரும்பாதவர்களின் வழிமுறைதான் துறவறம்.

தொடரும்...



# வைரமுத்து வாத்தியார் பேசுகிறார்

இலங்கை அரசியலில் குடும்பச் சண்டைகள் அதிகமாகிறது போலத் தோன்றுகிறது. சம்பந்திகளுக்கு இடையே சலசலப்பு.வடக்குக் கிழக்குக்கு அதிகாரம் பெறும் இரகசியமான நடவடிக்கைகளில் தமிழ் மக்கள் ஈடுபட்டிருப்பதாக முன்னாள் முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் சம்பந்தி வாசு தேவ நாணயக்கார சொல்லுகிறார். அவர் இப்போ இராஜாங்க அமைச்சர். அதே நேரம் விக்கினேஸ்வரனும் ஒரு அறிக்கையை விட்டிருக்கிறார்.படித்த சிங்கள சிவில் தலைவர்கள் சமஷ்டியை விரும்புகிறார்கள்.அரச தலைவர்கள்தான் கதை விடுகிறார்கள் என்று அவர் தனது அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள். இது வைரமுத்துவாகிய எனக்கு மட்டுமல்ல ஒட்டு மொத்தத் தமிழ் இனத்துக்கே குழப்பத்தை ஏற்படுத்துகின்ற செயல். பொறுப்பற்ற முறையில் இது போன்ற அறிக்கைவிடுவதிலேயே இவர்கள் பொழுது கழிகிறது. இதற்கு நடுவே அவசர அவசரமாக இந்தியாவுக்கு பறந்து இருக்கிறார் சம்பந்தர். இலங்கைத் தமிழ் அரசியலுக்கும், தனக்கும் சம்பந்தம் இல்லை என்று தமிழரசுக் கூட்டத்தில் அறிக்கை விட்டவர், பின்பு ஏன் இந்தியாவுக்குப் பறந்து போயிருக்கிறார். அதுவும் போகும் போது அறிக்கைவிட்டு கோத்தாபய அரசைப் பயமுறுத்திவிட்டு வேறு போயிருக்கிறார். ஒரு சந்திச் சண்டியன் போன்ற தொனியும் அவரிடம் இருந்ததாகச் சிலர் சொன்னார்கள்.

அடுத்ததாக அரசியல் தொலை நோக்குப் பார்வை எதுவும் அறவே இல்லாத சுமந்திரன். அவர் ஆருடம் சொல்ல எப்ப படித்தாரோ தெரியவில்லை. வருகின்ற தேர்தலை வைத்து ஆருடம் வேறு சொல்லி இருக்கிறார். சமயங்களில் நகைச்சுவை நடிகர் என்று போற்றப்படும் வடிவேலுவின் கோமாளித்தனம் அவரிடம் உண்டு. தற்போது வரப்போகும் தேர்தலையும் அதன் முடிவையும் வைத்துக் கனவு காணக்கிறார். ஐ.தே.க 113 ஆசனங்களைக் கைப்பற்றுமாம்.அப்போது தாங்களும் அவர்களோடு கைகோர்த்து அரசை அமைப்பார்களாம். இப்படிப்பட்ட அறிக்கைதானே வேண்டாம் என்கிறோம். நல்லது செய்வதாக ஒரு மனிதனைக் குழியில் தள்ளுவது. இதைத்தானே அவர் ஜனாதிபதி தேர்தலிலும் செய்தார். தற்போதும் அதனையே செய்யவிழைகின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் பட்ட அறிவும், அனுபவமும் போதாது என்று எண்ணுகிறேன். சுமந்திரன் ஒரு முறையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மேர்வினாகக் கூடத் தெரிகிறார். மேர்வின் சில்வாதான் தனது அரசியல் கோமாளித்தனத்தினாலும், அறிக்கைகளினாலும் தமது கட்சியை மண் கௌவ்வ வைத்தவர். அவரின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவே அப்போது அரசில் பல நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதே போலத்தான் சுமந்திரனின் செயற்பாடுகளில் ஏற்படும் குறைபாடுகளைச் சரிசெய்ய தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ன திருகுதாளம் செய்யப்போகிறார்களோ?



# காற்று என் மனைவி

மனிதன் இயற்கையோடு இணைந்திருந்து வாழ்ந்தவரை இன்பமாக இருந்தான்

என்றைக்கு அவன் இயற்கையை விட்டு விலகத் தொடங்கினானோ அன்றிலிருந்து அவனுக்கு பிரச்சினைகளும் உண்டாகத் தொடங்கிவிட்டன

இயர்கையின் உறவு ஆழமானது சுய நலமற்றது.

உண்மையில் இயற்கைதான் நம் தந்தை. இயற்கைதான் நம் தாய் . இயற்கைதான் நம் காதலன், காதலி.

ரத்த உறவுகளைத் தான் நாம் உறவுகள் என்கிறோம் ஆனால்ரத்தம் கெட்டுச் சீழாவதைப் போல ரத்த உறவுகள் சீழாகிவிடுகின்றன

சகோதரர்களுக்குள் சச்சரவு, தந்தை மகனுக்கிடையே தகராறு உறவுகளில்தான் கடுமையான பகையே உண்டாகிறது

மற்றோர் உறவு திருமண உறவு இதைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். ஆண் பெண் உறவே காதல் வெறுப்பு உறவு தான். இயற்கையின் உறவில் சண்டையும் இல்லைச் சரவும் இல்லை

உறவுகளிலேயே உயர்ந்தது தாய்ப் பாசம் என்பார்கள்

ஆனால் பிள்ளை இறந்துவிட்டால் பெற்றவளே பிணம் என்று ஒதுக்குகிறாள். ஆனால் மண் மாதாவோ, இறந்தவனைக் கூடத் தன் வயிற்றில் ஏற்றுக் கொள்கிறாள்.

இயற்கையின் நேசத்தை அந்த நேசம் தரும் சுகத்தை அறியாத மூட மனிதனோ இயற்கையைப் புறக்கணித்துச் செயற்கையை நாடுகிறான்.

வெளியே தென்றல் வீசுகிறது. குயில் கூவுகிறது இவனோ அறைக் கதவுகளைச் சாத்திவிட்டுச் செயற்கைக் குளிரில் தென்றல் வீசுதே குயில் கூவுதே என்ற இசைத் தட்டைக் கேட்டுக் கொண்டிருக்கிறான்.

சகமனிதனையே நேசிக்க முடியாத மனிதன் இயற்கையை எப்படி நேசிப்பான்?

இயற்கையை நேசிப்பது இருக்கட்டும். மனி தன் அதைக் கெடுக்க அல்லவா முனைந்து கொண்டிருக்கிறான்.

எந்தமடியில் வளர்ந்தானோ அந்த மடியை காயப் படுத்துகிறான். எந்தத் தனங்களில் பால் குடித்தானோ அந்தத் தனங்களை அறுத்தெறிகிறான்

இயற்கையின் உறவே அர்த்தமுள்ளது அழகானது என்பதை அறிந்தவர்கள் இருவர்.ஒருவன் ஞானிமற்றவன் கவிஞன். கவிஞனின் இதயச் சாளரத்தின் வழியாக அவ்வப்போது ஞானக் கதிர்கள் பாய்ந்து விடும்

ஆங்கிலக் கவிஞன் கீட்ஸ் அத்தகைய பேறு பெற்றவன் அவன் இயற்கையைக் காதலித்தான் அதை ஐம் பொறி களாலும் அனுபவித்தான்

அவன் அழகின் உபாசகன்

அழகில் உண்மையைத் தரிசித்தவன் உண்மையில் அழகைத் தரிசித்தவன்

அதனால் உண்மையே அழகு அழகே உண்மை என்று உரத்துக் கூவியவன்

அழகு விழித்திருக்கிறது. நீங்கள் ஏன் கண்விழிக்காமல் இருக்கிறீர்கள்? என்று அழகைப் பார்த்து ரசிக்கத் தெரியாத குருட்டுக் கண்ணார்களைக் கேட்டவன்.

அழகு என்றென்றும் ஆனந்தம் அதன் இனிமை குன்றுவதே இல்லை. கூடிக் கொண்டே போகிறது. அது மறைவதே இல்லை என்று ஆனந்தக் கூத்தாடியவன்.

ஒரு நாள் இரவு ஓர் இராப்பாடியின் இசையைக் கேட்டு மயங்கிப் போய் ஓ! இந்த இராப்பாடியின் தேவகானம்! வகை வகையான வண்ண மலர்களின் போதை ஊட்டும் நறுமணம்! இறப்பதற்கு இதைவிட இனிமையான நேரம் இருக்க முடியுமா? என்று பரவசப்பட்டவன்

அவன் ஒருகடிதத்தில் எழுதினான்

காற்று என் மனைவி

நட்சத்திரங்கள் என் பிள்ளைகள்

காற்று என் மனைவி! ஓ எவ்வளவு அற்புதமான பார்வை! காற்று மனைவியாகத்தான் இருக்கிறது. ஆனால் அதைக் கண்டுபிடித்தவன் கீட்ஸ்

இயற்கையின் மீதுகொண்ட காதல் அவனுக்கு ஞானத்தைத் தந்தது. அந்த ஞானம் காற்று மனைவி என்ற ரகசியத்தைச் சொல்லிக் கொடுத்து விட்டது

காற்று மனைவி! காற்றைப் போல் ஒரு மனைவி இருக்க முடியுமா?

காற்றுளப்போதும் நம்மைக் கட்டித் தழுவுகிறது. கலவி செய்கிறது

ஏதோ ஓர் உணர்ச்சிகரமான தருணத்தில் மனைவியைப் பார்த்து நான் உன்னைவிட்டுப் பிரியமாட்டேன் பிரிந்தால் உயிர் வாழமாட்டேன் என்கிறான் கணவன்.

ஆனால் பிரிகிறான் உயிர் வாழ்கிறான். ஏன் வேறொருத்தியைக் கூடத் திருமணம் புரிந்து கொள்கிறான்.

அவளிடமும் அதே வசனம் பேசுவான்

ஆனால் காற்று உண்மையிலேயே அவளை நாம் பிரிய முடியாது. பிரிந்தால் உயிர் வாழமுடியாது.

போதைப் பொழுதில் கணவன் மனைவியை என் உயிரே என்கிறான்!

ஆனால் உண்மையில் உயிராக இருப்பது காற்றல்லவா?

மனைவிகளில் சிலர் உயிராகவா இருக்கிறார்கள். உயிரை வாங்குபவர்களாக அல்லவா இருக்கிறார்கள்

எல்லாவற்றையும் விட முக்கியமானது பூ வேண்டும், புடவை வேண்டும் , பொன்னகை வேண்டும் என்று காற்று நச்சரிக்காது.

மனைவி என்றால் ஊடல் இல்லாமலா? காற்றும் ஊடுகிறது , ஆனால் அது ஒரு கணம் தான் மறுகணத்தில் கூடி விடுகிறது.

நாம் மூச்சுவிடும்போது கோபித்துக் கொண்டு தாய் வீடு போகிறாள்.


நாம் மூச்சை வாங்குகிறோம், மறுகணம் புக்ககம் வந்துவிடுகிறாள் எவ்வளவு அற்புதமான மனைவி கீட்ஸ் ஃ பானி ப்ரான் என்ற பெண்ணைக் காதலித்தான் . ஆனால் திருமணம் செய்ய முடியவில்லை. அது அவனுக்கு ஓர் ஏக்கமாக இருந்திருக்கும்.

தனக்கு மனைவி மக்கள் இல்லையே என்ற ஏக்கம் கூடக் காற்றை மனைவியாகவும் நட்சத்திரங்களைப் பிள்ளைகளாகவும் நினைக்கத் தூண்டி இருக்கலாம்

ஆதரித்து அணைத்துக் கொள்ள இயற்கை இருக்கும் வரையாருமே அனாதை இல்லை!

- அப்துல் ரகுமான் -

# நிராகரித்த விருது



அரங்கத்திலிருந்து வெளியேற்றிய தால் தங்கப் பதக்கத்தை திருப்பிக் கொடுத்த புதுச்சேரி பல்கலை மாணவி ரபிஹா -

குடியரசுத் தலைவர் வருகையை யொட்டி, புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தில் கடும் கட்டுப்பாடு விதிக்கப் பட்ட சூழலில் அரங்கிலிருந்து வெளி-யேற்றித் தனியே அமர வைக்கப்பட்ட மாணவி ரபிஹா, தனது தங்கப்பதக் கத்தை திருப்பித் தந்தார்.

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்-தின் பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள ஜவஹர்லால் நேரு அரங்கத்தில் டிச.23 இல் நடைபெற்றது. குடியுரிமைச் சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து புதுச்சேரி பல்கலைக்கழக மாணவர்கள் போராட் டத்தில் ஈடுபட்டு வந்தனர். மேலும் பட்டமளிப்பு விழாவி னைப் புறக்கணிக்க மாணவர் பேரவையினர் அழைப்பு விடுத்தனர். அத்துடன், குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் பல்கலைக்கழக வளாகத்திற்குள் வரும்போது மாணவர்கள் போராட்டம் நடத்தலாம் என்ற தகவலும் வெளியானது.

குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் அருண்குமார் மற்றும் கிருத்திகா ஆகியோர் தாங்கள் பட்டத்தைப் பெற மாட்டோம் என சமூக வலைத் தளங்களில் பதிவிட்டனர். அவர்கள் பல்கலைக்கழகத்திற்கு வரவில்லை. இதனைத் தொடர்ந்து பட்டமளிப்பு விழாவில் மாணவர்களுக்கு போலீஸார் கடும் கெடுபிடி விதித்தனர். ஜவஹர்லால் நேரு அரங்கத்தில் சுமார் 510 இருக்கைகள் மட்டுமே இருந்தன. இதில் பல்வேறு துறைகளில் தங்கப்பதக்கம் மற்றும் ஆராய்ச்சிப் பட்டம் பெறும் மாணவர்கள் 322 பேர் மட்டும் அனுமதிக்கப்பட்டனர். இந்த மாணவர்கள் பேனா, பேப்பர், செல்போன் உள்ளிட்ட எதையும் எடுத்து வர அனுமதிக்கப்படவில்லை. மாண-வர்கள் தனித்தனியாக, முழுமையான பரிசோதனைக்குப் பிறகே அரங்கத்திற்குள் அனுமதிக்கப் பட்டனர்.

இச்சூழலில் கேரள மாணவி ரபிஹா குடியரசுத் தலைவர் வருகைக்கு முன்பாக போலீஸாரால் அரங்கிலிருந்து வெளியே அழைத்துச் செல்லப்பட்டு தனியே அமர வைக்கப்பட்டார். குடியரசுத் தலைவர் புறப்பட்ட பிறகே விழா அரங்குக்குள் அனுமதிக்கப்பட் டார். அவர் வெகுஜன தொடர்பு கற்கை நெறியில் எம்.ஏ பட்டத்தையும், தங்கப் பதக்கத்தையும் வென்றிருந்த போதிலும், மேடைக்கு அழைத்தபோது, அவர் தனது தங்கப் பதக்கத்தை வாங்க மறுத்து விட்டார். பட்டம் மட்டும் பெற்றுக் கொண்டார். இந்த நடவடிக்கையின் பின்னால் உள்ள அரசியல் என்னவென்று புரியவில்லை.

இது தொடர்பாக ரபிஹா கூறுகையில், "கேரள மாநில் கோழிக்கோட்டைச் சேர்ந்த நான் 2018ம் ஆண்டு படிப்பை நிறைவு செய்து தங்கப்பதக்கம் வென்றிருந்தேன். விழா தொடங்கும் முன்பு என்னை அரங்கிலிருந்து வெளியேற்றி தனியே அமர வைத்தனர். நான் தலைப்பாகை அணிந்தது குற்றமா எனத் தெரியவில்லை. காரணத்தையும் தெரிவிக்கவில்லை. என்னை வெளியேற்றி தனியாக அமர வைத்து அவமானப்படுத்தியதை மேடையில் தெரிவித்து எனது தங்கப்பதக்கத்தை வாங்க மறுத்துவிட்டேன். பட்டத்தை மட்டும் பெற்றேன்" என்று தெரிவித்தார்.




# அழியாத கோலங்கள் 2

கடந்த வாரம் 'ஒத்த செருப்புத்' திரைப்படம் பற்றிப் பார்த்திருந்தோம். இம்முறை 'அழியாத கோலங்கள்-2' திரைப்படத்தைப் பற்றிப் பேசலாம்.

அழியாத கோலங்கள- 2 என்று தலைப்பிட்டால் அழியாத கோலங்கள்-1 உம் ஏற்கனவே இருந்திருக்க வேண்டும் தானே. இது தானே இன்றுவரை நமது சினமாவின் முறைமை. ஆம் இந்த அழியாத கோலங்கள்-2 திரைப்படம் 1979 இல் வெளி வந்த அமரர் பாலுமகேந்திரா இயக்கி வெளி வந்த 'அழியாத கோலங்கள்' திரைப்படத்தின் தொடர்ச்சியாக அவரது மாணவர்களால் தயாரிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

அன்றைய 'அழியாத கோலங்கள்' திரைப்படத்தை அப்போது தான் நமக்கு அறிமுகமான தொலைக்காட்சி, வீடியோ டெக், வி.எச்.எஸ் ... ட் என்பவற்றின் உதவியுடன் பார்த்த நினைவு இருக்கிறது. வீடியோ அறிமுகமான புதிதில் இந்தியாவில் வெளியாகும் புதிய திரைப்படங்கள் சில நாட்கள் இடைவெளியில் யாழ்ப்பாணத்தில் திருட்டுப் பிரதிகளாகக் காணக் கிடைக்கும்.

கிராமம் கிராமமாக பொது இடங்கள், வெற்றுக்காணி கள் என்பவற்றில் வீடியோ திரைப்படக் காட்சிகள் காண் பிக்கப்படும். கட்டணம் செலுத்தித் தான் படம் பார்க்கலாம். ஒரு தலைக்கு ரூபா இரண்டு. படம் காண்பிப்பதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாகவே சனசமூக நிலையங்கள், சந்திகள், சந்தைகள் போன்ற மக்கள் கூடும் இடங்களில் அறிவிப்புகள் சுவரொட்டிகளாகவும் பலகைகள், தகரங்களில் வெண்கட்டியால் எழுதப்பட்ட விளம்பரங்களாகவும் இருக்கும். அவற்றில் அன்று **Video** என்பதற்குப் பதிலாக V.D.O என எழுதியிருக்கும். நானும் அவ்வாறு தான் எழுதினேன், அதுதான் சரி என்றும் கருதியிருந்தேன். படம் காண்பிக்கப்படும் நாளன்று ஒரு காரில் ஒலிபெருக்கியைக் கட்டி வீதி வீதியாக அறிவிப்பதன் மூலம் விளம்பரம் செய்யப்படும். பல புதிய அறிப்பாளர்கள் உருவாக இது உதவியது. நானும் அவ்வாறே ஒரு வழியாக அறிவிப்பாளனாக உருவானேன். அதற்கு முந்தைய காலத்தில் மரண அறிவித்தல்கள்களே புதிய அறிப்பாளர்களின் அறிமுமாக இருந்தது.

வீடியோத் திரைப்படங்களை அறிவிப்பதற்கு ஊதியம் ஏதுமில்லை. கட்டணமின்றிப் படம் பார்க்கலாம் அவ்வளவு தான். எதையோ சொல்ல வந்து பழைய நினைவுகள் இழுத்துச் சென்றதால் சற்று விடயதானத்தை விட்டு விலக நேர்ந்து விட்டது. அதுவும் சுவையானது தானே!

இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் தான் பாலுமகேந்திரா இயக்கி 1979 ஆம் ஆண்டு வெளியான ஆழியாத கோலங்கள் பார்க்கக் கிடைத்தது. அதில் பதின்ம வயதான எம்போன்றவர்களைக் கவர்ந்தது மூன்று விடயங்கள். முதலாவது விடயம் அந்த வயதில் நமக்குப் புதிராகவும் மர்மமான கவர்ச்சியாகவும் இருந்த விடயங்களைச் சற்று வெளிப்படையாகப் படம் பேசியது. அடுத்தது எம் போன்ற விடலைகள் படத்தில் பிரதான கதாபாத்திரங்களாக இருந்து எம்மைப் பிரதிபலித்தது. மூன்றாவது அதுவரை பார்த்த படங்களிலேயே காணாத ஏதோ ஆழ்ந்த அழகு தெரிந்தது. அது என்னவென்று அப்போது எமக்குப் புரியவில்லை. பின் திரைத்துறை ஆர்வம் என்னில் இருந்ததால் திரைத்துறையைப் பற்றி அடிக்கடி பேசும் எமது ஆசிரியர் செம்பியன் செல்வன் (இராஜகோபால் மாஸ்ட்டர்) அவர்களிடமிருந்து அது ஒளிப்பதிவின் சிறப்பென்றும், பாலுமகேந்திரா தான் அதற்கு ஒளிப்பதிவாளர் என்றும் அறிந்து கொண்டேன். அதற்கு ஒரு வருடத்திற்கு முதல் 1978இல் வெளிவந்த அமரரான இயக்குனர் மகேந்திரன் இயக்கிய 'முள்ளும் மலரும்' திரைப்படத்தின் ஒளிப்பதிவாளரும் பாலுமகேந்திராவே என்பதையும் அறிந்தேன்.

இந்த அழியாத கோலங்கள்-2 ஒரு வித்தியாசமான படைப்பாகத் தான் தமிழ்த் திரைப்பட இரசிகர்களுக்கு இருக்கும். ஒத்தைச் செருப்பு தனியொரு பாத்திரத்தை மட்டுமே கட்புலனுக்குத் தந்து மற்றவையை மனப் புலனுக்கு விட்டிருந்தது. அழியாத கோலங்கள் -2 பிரதான காட்சிகளாக ஒரு வீட்டையே கொண்டுள்ளது. ஓரிரு மிகச் சிறிய காட்சிகள் தவிர வேறு இடத்துக்குக் கமரா செல்லவே இல்லை.

பாலுமகேந்திராவிற்கு இத்திரைப்படம் சமர்ப்பிக்கப் பட்டு பின் அவரின் படத்தில் இடம்பெற்ற "பூவண்ணம்" பாடல் இசையுடன் படம் ஆரம்பமாகிறது.

ஒத்த செருப்பு கொலையொன்றை வைத்துத் தன் கதை சொல்லலை ஆரம்பிக்கிறது. அழியாத கோலங்கள்-2 ஒரு மாரடைப்பு மரணமொன்றை வைத்து அதனூடாக ஒரு நடுத்தர பெண்மணியின் நெருக்கடிகள், மனப் போராட்ங்களைக் கொண்டு கதை நகர்த்துகிறது.

பாலுமகேந்திராவின் இயக்கத்தில் வந்த அன்றைய அழியாத கோலங்கள் விடலைப் பருவ, கடந்த காலத்தை பின்னோக்குக் காட்சியாகத் திரையில் சித்தரித்துச் செல்ல அழியாத கோலங்கள்-2 முதிர் வயதிலுள்ள ஆணும் பெண்ணுமான இருவர் (எழுத்தாளர் கௌரிசங்கர், கண-வனை இழந்த பெண் மோகனா) நிறைவேறாத தமது பழைய காதலை நினைத்துப் பார்ப்பதாகவும் அதைப் பற்றி பேசுவதாகவும் திரைக்கதை செல்கிறது. வழமை யாக இவ்வாறு பழைய காலத்தைப் பற்றிப்பேசும்போது பின் நோக்குக் காட்சி உத்தி பயன்படுத்தப்படும். ஆனால் இதில் வெறும் உரையாடலிலேயே கடந்த காலம் சொல்லப்படுகிறது.

எவ்வாறாக நாம் நம் நண்பர்களுடன் ஒரு வீட்டிலிருந்து அல்லது வெளியில் எங்காவது இருந்து நமது கடந்த காலங்களை நினைவு கூர்ந்து உரையாடுவோமோ? அவ்வாறே இங்கும் உரையாடல் மூலமாகக் கடந்த காலம் நினைவூட்டப்படுகிறது. அதன் போது மகிழ்ச்சி சோகம் என்பன உணர்ச்சி வசப்படாமல் பிரிவையும் இனிய அனுபவமாக ஆனால் ஏதோ இழப்பின் துயரம் உள்ளூர ஓட முதிர்ச்சி தந்த பக்குவத்துடன் நினைவு கூர்வதாக கதை நகர்கிறது. ஆனால் இந்த கடந்தகால நினைவுகள் படத்தின் பாதியிலேயே எழுத்தாளர் கௌரிசங்கர் மாரடைப்பால் சாவடைந்தவுடன் இடையறுந்து அதன்பின் அந்த மரணத் தின் பின்னால் அதை வைத்து சமூகப் பிரதிகிருதிகளதும் அதிகார மேலாதிக்கத்தினரதும் வக்கிரங்கள் அந்த மோக னாவை எவ்வாறு துளைத்து வதைக்கிறது என்பதைப் படத்தின் பிற்பகுதிச் சொல்லிச் செல்கிறது. மனிதம் மரணித்துப் போனதா? என்ற கேள்வியையும் வலுவாக எழுப்பி நிற்கிறது. அழியாத கோலங்கள்-2.

கல்லூரிக் காலத்தில் காதலித்து, பின் ஏதோ காரணத்தி னால் பிரிந்து, பிரிந்த பின் இடையில் எப்போதும் சந்தித்துக் கொள்ளாமல் வெவ்வேறு திருமணங்களை முடித்து இறுதி யில் இருபத்து நான்கு வருடங்களின் பின் நடக்கும் சந்திப்பு. பிரிவின் பின் நடக்கும்முதல் சந்திப்பு. பிரிவின் காரணம் கூடத் திரைக்கதைக்குத் தேவைப்பட்டிருக்கவில்லை. காரணங்கள் அவர்கள் இருவருக்கும் தெரியும். வன்மம் கொண்ட காரணங்களல்ல அவை என்பதும் பார்வை யாளர்களுக்குப் புரிகிறது. இதற்கு மேல் ஆராய எதுவுமே பார்வையாளருக்கு இல்லை. இது திரைக்கதையின் சிறப்பு.

காதலர் பிரிந்துவிட்டாலும் காதல் நிலைத்திருக்கிறது. அந்தக் காதல் உணர்வும் காதலியின் நினைவும் கௌரி சங்கரின் எழுத்துக்கு அடி நாதமாக இருக்கிறது. அந்தக் காதல் இருந்திராவிட்டால் அவன் ஒரு எழுத்தாளனாகப் பரிணமித்திருக்க முடியாது. அதே போல் கௌரிசங்கரின் எழுத்துகளைப் பெற்று அவனுடைய அண்மைத்துவத்தை மானசீகமாப் பேணும் முன்னாள்ப் பாடகி மோகனா.

இந்தத் திரைப்படத்திலும் பாடல் உண்டு கவிதை உண்டு. ஆனால் அவை பார்வையாளருக்குத் தரும் அனுபவம் மிக வித்தியாசமானது. பெரும்பான்மையான தமிழ்ப்படங்களைப் போல் கதையோட்டத்தை இடையில் நிறுத்திவிட்டுக் கட்டாயம் இந்தப் பாடலைக் காட்சியை பார்க்கத்தான் வேண்டும் என்று திணிக்காமல், இயல்பாகவே அவை வந்து போகின்றன. கௌரிசங்கர் எழுதிய கவிதை பாடகி மோகனாவினால் பாடப்படுகிறது. இது திரைக்கதைக்கு வெளியே நிகழாமல் திரைக்கதை வேண்டி நிற்கும் ஒன்றாக வருவது சிறப்பு. வெறும் இரண்டரை நிமிடப் பாடல். இருபத்து நான்கு வருடங்களின் பின் அவள் பாடும் முதல் பாடல்.


இவையெல்லாம் நெகிழ்ச்சியுடன் பார்வையாளரை அணைக்கிறது.

காதலை இன்பாச்சுவேசன் என்றும் வயதுக் கோளாறென்றும் சிக்மென்ட் பிராய்ட்டின் உளவியல் தத்துவங்கள் கொண்டும் பகுப்பாய்வு செய்ய முடியாது என்பதை இப்படைப்பு நமக்கு சுட்டுகிறது.

அடுத்தது ஒரு மரணத்தை வைத்து மானிட நடத்தைக்குப் பண்பாட்டு அவதூறுகளை ஏற்படுத்த முனையும் நாற்றமெடுத்த சமூக அமைப்பையும், பொலிஸ் விசாரணை எனும் பேரில் மனவக்கிரங்களைக் கொட்ட இடமளிக்கும் அதிகாரக்கட்டமைப்பையும் உண்மையைத் தேடுகின்றோம் எனும் பெயரில் ஆபாசச் சிந்தனைகளை

# நல்ல சினிமா பார்க்கலாம்

**ந. கேசவராஜன்**



போக்கு கொண்டு செல்கிறது. இது வெறும் இருவரின் கதை என்று கடந்து போகவிடாமல் சமூக நிலை நின்று விமர்சனக் கண்கொண்டு பார்க்கத் தூண்டுவது இப்படைப்பின் வெற்றிதான்.

எழுத்தாளரின் சாவின் பின் மோனாவுடன் ஆத்திரப்பட்டிருக்க வேண்டிய அவனின் மனைவி சீதா



கிளைமாக்சில் ஒரு புதிய கோலத்தை நம்முள் வரைகிறார். அதுவும் அழியாத கோலம்தான்.

இந்தப் படத்திலிருந்தும். நாம் திரைப்படைப்பிற்கும் வாழ்க்கைக்கும் தேவையானவற்றைக் கற்றுக்கொள்ளலாம்.

இதுவும் இந்த இலங்கைத் தீவில் திரையரங்குளுக்கு வரப் போவதில்லை என்று தெரிகிறது. டி.வி.டீ தான் தற்போது இவை போன்ற படைப்புகளைக் காண நமக்கிருக்கும் ஒரே வழி. இது வரமா சாபமா? ■



# அங்கதன் பதில்கள்

■ தேர்தலுக்குப் பின்னர் நாட்டில் என்ன நடக்கிறது?

என்.பார்த்திபன், புதுக்குடியிருப்பு

● எதுவும் நடக்கவில்லை ஆட்சியிலுள்ள பலருக்கு இனவாதம் மதவாதம் கடுமையாகபீடித்துள்ளது

■ ஒரு கை தட்டி சத்தம் வராது என்று நண்பர் சொல்லகிறார். நான் வரும் என்கிறேன். நீங்கள் எப்படி?

மு.வசந்தரூபன், கேணியடி

● ஒரு கையால் மேசையில் தட்டினால் சப்தம் வரும் சப்தம் எழுப்ப இரு கைகள் தேவையில்லை

■ சம்பந்தனின் அரசியல் ஓய்வு என்பது உண்மையா? இல்லாவிடில் அதுவும் தீபாவளிக்கு வரும் என்ற கதையா?

கே.மல்லிகா, சித்தன்கேணி

● சம்பந்தன் ஐயா இப்படித்தான் பரபரப்பாக அறிக்கை விடுவார்அவரின் சொல்லுக்கும் செயலுக்கும் ஒருபோதும் சம்பந்தம் இருப்பதில்லை

■ புளொட் சித்தார்த்தருக்கு ஞானம் வந்து வீட்டது என்று உணருகி-றேன். இனி அவர் அரசமரத்தைத் தேடிப்போகலாமா?

ஆர்.மணிசேகரன், உரும்பிராய்

● புளொட் சித்தார்த்தனுக்குப் பதவியைக் கைப்பற்றும் வேகம் கூடுமே ஒழிய, அரசி யலைத் துறந்து அரச மரத்தடிக்குப் போகும் ஞானம் வரவேவராது

■ ஒன்றும் கிடையாது என வெட்டு ஒன்று துண்டு அரண்டு என அண்ணனும், தம்பியும் சொல்லிவிட்டார்கள். என்ன செய்யலாம்?

ம.தெய்வேந்திரம், கோப்பாய்

● அது குறித்து ஐடியா கேட்கவும் அங்கிருந்து கிடைக்கும் கட்டளையை ஏற்கவும் தான் ஐயா சம்பந்தன் அயலகம் பறந்திருக்கிறார்

■ வட மாகாணம் ஒரு குழப்பத்திலும், நெருக்கடியிலும் இருப்பதாக எனக்கு ஒரு உணர்வு. எனது உணர்வு சரியா?

செ.மனோகரன், மூளாய்

வடமாகாணம் என்ன? நாடே குழப்பத்திலும் நெருக்கடியிலும் தான் இருப்பதாக எந்தவித உணர்வுமற்ற அரசியல் வாதிகளே உணர்கிறார்களாம்.

■ அரச அதிகாரிகள் மக்கள்மேல் அதிக கவனம் எடுப்பதில்லை என நான் சொல்லுகிறேன்?

மு.செல்வம், ஏழாலை

● அரச அதிகாரிகள் அரச கட்டளைகளை நிறை வேற்றுபவர்களே. மக்கள் சேவையாற்றுபவர்கள் அல்ல .இது கூட உங்களுக்குத் தெரியாதா?

■ வரட்டும் பார்க்கலாம் என்று இருக்கும் அரசியல் தலைமை பொறுப்பானதா?

வே.இராசநாயகம், மந்துவில்

● தொலை நோக்குப் பார்வையற்றவர்கள் தான் வரட்டும் பார்க்கலாம் என்று சொல்வார்கள். ஆனால் எது வந்தாலும் பார்க்கவே மாட்டார்கள்

■ உலகத்தில் நடக்கும் இயற்கை அனர்த்தங்கள் என்னத்தைச் சொல்லுகின்றன?

சி.ரவிராஜ், பளை

● இயற்கையை அழிக்கும் செயற்கையின் மீதான இயற்கையின் சினத்தைக் காட்டுகிறது

■ யாழ்ப்பாணப் பெருந்தெருக்களில் நடமாட முடியாமல் இருக்கிறதே. மோட்டார் சைக்கிள்காரர்களின் அசிரத்தை அப்படி இருக்கிறது. கட்டுப்படுத்த என்ன வழி?

எம்.அரசநாயகம், சுன்னாகம்.

● மோட்டார் சைக்கிள்காரர்களின் அதி சிரத்தை அப்பாவிகள் பலரின் சிரத்தைக் கொண்டுபோய் விடுகின்றனவே. மோட்டார் சைக்கிள் பாவனைக்கு அனுமதி வழங்கு வோர் கொஞ்சம் சிரத்தை எடுத்தால் நல்லது

■ புதிய ஜனாதிபதி வட மாகாணத்து நடவடிக்கைகளில் அதிக அக்கறை எடுத்துக் கொள்வதுபோலத் தெரிகிறது?

பொன். வல்லிபுரம், பருத்தித்துறை

● தன்னைக் கைவிட்ட மாகாணத்தைதான் கைவிடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார்போலும்

■ சம்பந்தன் வெள்ளைக் கொடி பிடித்து, வெள்ளைக் குதிரையில் போவதாக ஒரு கனவு. அதற்கு என்ன அர்த்தமாக இருக்கும்?

எம்.சோதிப்பெருமாள், புங்குடுதீவு

● உங்களுக்கு அது கனவு அவருக்கு அதே நினைவு. சரணாகதி அரசியலுக்குத் தயாராக இருப்பவர் அல்லவா அவர்! அது சரி வெள்ளைக் கொடி வெள்ளைக் குதிரை எல்லாம் சரி வெள்ளை வேட்டியுடனும் போயிருப்பாரே

■ தற்போதுள்ள நிலைமையைப் பாத் தால் பலர் உள் வீட்டுத் தரிசனம் பெறுவார்கள் போலத் தெரிகிறது?

லோ.தைரியநாதன், மந்திகை

● பின் கதவால் உள் நுழையப் பிரயத்தனம் செய்வோர்க்குத் தரிசனம் நிதர்சனமாகவும் காட்டுமா?

■ ஆனுக்குச் சமமாக இருந்து அவர்களைப்போல நடந்து கொள்வதுதான் பெண்ணியம் என்று சொல்லுகிறார்கள். அது சரியா?

மு.புவனராணி, நெல்லியடி

● ஆணியம் பெண்ணியம் என்ற மன-நோய் மனிதனியம் இல்லாதவர்க்குதான் உண்டு. மனிதம் உணர மனிதன் சொல்லை ஏன் கேட்கிறீர்கள்?

■ மழை நேரம் வெள்ளம் பெருகுவதற்கு திட்டமில்லாமல் தெருக்களை அமைத்ததுதான் காரணமாம்.

வி.சுந்தரமூர்த்தி, இளவாலை

● தெருக்கள் மட்டுமா வீடுகள் கட்டடங்கள் எல்லாமும் தான் காரணம் தலை இல்லாத் தலைமைகளே இந்தநிலமைக் கெல்லாம் காரணம்



அங்கதனிடம் பதில்பெற வேண்டுவோர் உங்கள் கேள்விகளை சரியான பெயர் முகவரியுடன் தெளிவாக எழுதி newsdeepam19@gmail.com என்ற முகவரிக்கோ அல்லது இல.10, வில்வந்தெரு ஒழுங்கை கொழும்புத்துறை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தரமான கேள்விகளை அனுப்புவோருக்கு 500 ரூபா பணப் பரிசில் வழங்கப்படும்.

பெயர் :.........................................

முகவரி :.........................................

.........................................

தொலைபேசி இல. .............................

# அவர்கள் சொன்னதும் ஐயா சொல்வதும்

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் மோதல் வலுக்கிறது தலைமைப் பதவிக்கு தொடர்கிறது இழுபறி நிலை முடிவெடுக்க முடியாமல் திணறல்...

அட வெட்கங்கெட்ட பயல்களா! ஒரு கட்சிக்கு தலைமை தேர்ந்தெடுக்க முடியேல்லை, நாட்டிற்கு தலைமை தாங்க வந்திட்டாங்களா. வரவர ஐ.தே. கட்சிக்குள்ளேயான வண்ட வாளங்கள் தண்டவாளம் ஏறி உலா வர தொடங்கி விட்டன. கட்சிப் பிரச்சினையைத் தீர்க்க முடியாத கையாலாகாப் பேர் வழிகள் நாட்டுப் பிரச்சினையை தீர்ப்பார்கள் என்று நம்புபவஉகளை என்ன சொல்வது?

● ● ●

சர்வதேசத்துக்கு ஒரு போதும் அடிபணியாது ராஜபக்ஷ அரசு. ஜெனிவாத் தீர்மானம் குப்பையில் வீசப்படும். இப்படி முடிவான ஒரு கருத்தை உரக்க சொல்லி இருப்பவர் வேறு எவரும் இல்லை

ஶ்ரீலங்காவின் நீதி அமைச்சர் நிமல் ஶ்ரீபால டிசில்வா தான்

நீதி அமைச்சரே தீர்ப்பை வழங்கி விட்ட பிறகு, இதற்கு மேலும் தமிழ் மக்களின் நியாயமான பிரச்சினைகளுக்கு சர்வதேச ரீதியிலான அழுத்தங் களால், நீதியானதும், நிலைத்து நிற்கக் கூடியதுமான ஒரு தீர்வு கிடைக்கும் என எவரும் நம்புதல் கடினமே ஆகும்.

இந்திய - இலங்கை உடன் பாட்டின் அடிப்படையி லான 13 வது திருத்தச் சட்டத்தையே முழுமையாக அமுல் படுத்த முடியாது என ஜனாதிபதி அவர்கள் இந்தியாவில் வைத்து அழுத்தம் திருத்தமாகக் கூறிவிட்ட நிலையில், இந்தியாவாலும் எதுவும் செய்ய முடியும் என நம்புவதற்கில்லை

இந்தச் சூழலில் உலக மற்றும் உள்ளூர் அரசியல் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாது இயங்கும் ஆற்றலும், ஆளுமையும் அற்ற தமிழர் பலத்தை சிதைக்கும் நாற்காலிக் கனவுகளில் லயித் திருக்கும் இவர்கள் தேர்தல் காலப் பிரமுகர்கள். இவர்கள் தம்மைத் தமிழ் தலைமைகள் என வேறு பிரகடனம் செய்து கொள்ளுகிறார்கள். இனி இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

வாக்களித்து வாக்களித்து வருந்துகின்ற தமிழ் மக்கள் தான் வரும் தலைமுறையின் எதிர் காலம் குறித்து ஆழமாக சிந்திக்க வேண்டியவர்கள். அதற்கான தருணம் இது

கட்சி தாவிகள், கட்சி உருவாக்கிகள், கட்சி அரசியல் வியாபாரிகள் அனைவரையும் தூக்கி எறிந்து விட்டு மக்கள் அரசியலை முன்னெடுக்கும் ஆளுமை மிக்க தலைமையை உருவாக்கும் காலத் தேவை குறித்து தாயகத் தமிழர்களும், புலம் பெயர் தமிழர்களும் ஒருங்கிணைந்து சிந்திக்க தவறின் வரலாறு ஒரு போதும் எம்மை மன்னிக்காது

● ● ●

மேர்வின் சில்வாவை ஞாபகம் இருக்கெல்லோ! அவரே தான் ஒரு காலத்தில் ஐயாவின் அடாவடித் தனமான செயற்பாடுகளுக்காக அதிகம் பேசப்பட்டவர். கன காலம் கதை பேச்சு குறைவாக இருந்தது நல்ல பிள்ளையாக இருந்திட்டார் என்றிருந்தால்.... பழையபடி வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாக ஆள் பழைய மிரட்டல் நடவடிக்கைகளில் இறங்கி விட்டார் இது சிங்கள நாடு இன்னல் தந்தால் துட்டகைமுனுவின் வாளை எடுத்து விரட்டி அடிப்போம் என்று அறிவித்துள்ளார். மேர்வின் சில்வா ஐயாவும் ஆவா குழுவில் சேர்ந்து விட்டார் போலும். சொல்லுவார் சொன்னால் கேட்போருக்கு மதியென்னவாம்!

● ● ●



மெத்தை தலையணை இல்லாது தரையில் படுத்து (சிறைக்குள்) உறங்குகிறார் சம்பிக்க ரணவாக்க

இது ஒரு பெரிய செய்தியாக ஊடகங்கள் எழுதுகின்றன இந்த நாட்டில் எத்தனையோ லட்சம் மக்கள் இருக்க இடமின்றி, உண்ண உணவின்றி, ஒழுங்கான உறக்கமின்றி அன்றாடம் அல்லாடுகிறார்கள் அது பற்றிப் பேச ஆருமில்லை. சிறைக்குள் பாதுகாப்பாக இருக்கும் சம்பிக்காவுக்காக பேசுகிறார்கள்? இது தான் அரசியல் வாதிக்கும், பொது மக்களுக்கும் உள்ள வேறுபாடு

அதுக்கென்ன சமானிய மக்களின் வாழ்வை சில நாள் சம்பிக்க வாழ்ந்து பார்ப்பது நல்லது தானே..!

● ● ●



## விளையாட்டு உலகில்



# 40 நிமிடங்களில் என் மனதை வென்றவர் – சக்லைன் முஸ்தாக் –

இந்திய அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தலைவருமான சௌரவ் கங்குலி எனது மனதை 40 நிமிடத்தில் வென்றார் என பாக்கிஸ்தானின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் சக்லைன் முஸ்தாக் தெரிவித்துள்ளார். 2005-2006 இல் இடம்பெற்ற சம்பவமொன்றை அடிப்படையாக வைத்து அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்தியா இங்கிலாந்திற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த வேளை நான் இங்கிலாந்தின் சசெக்ஸ் கவுண்டிக்காக விளையாடிக்கொண்டிருந்தேன், என தெரிவித்துள்ள அவர் இந்திய அணியினர் சசெக்ஸ் அணியினருடன் பயிற்சி போட்டியில் விளையாடினார்கள் கங்குலி அந்த போட்டியில் விளையாடவில்லை என அந்த சம்பவத்தை நினைவுகூர்ந்துள்ளார். தொடர்ந்தும் தெரிவித்த அவர், அவ்வேளை நான் இரு கால்களிலும் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை காரணமாக ஒரு வருடத்திற்கு மேல் விளையாடாத நிலையில் இருந்தேன் உடல் உளரீதியாக பாதிக்கப்பட்டிருந்தேன். அவ்வாறான சூழ்நிலைக்கு பின்னர் நான் மீண்டும் விளையாட ஆரம்பித்தவேளையே அந்த சம்பவம் இடம்பெற்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.



சசெக்ஸ் துடுப்பெடுத்தாடிய வேளை பல்கனியிலிருந்து சௌரவ் என்னை பார்த்திருக்கின்றார், ஆனால் நான்அவரை காணவில்லை அதன் பின்னர் எங்கள் ஓய்வறைக்கு வந்த கங்குலி என்னுடன் தேநீர் அருந்தியதுடன் எனது கால்காயங்கள் வாழ்க்கை குடும்பம் உட்பட பல விடயங்கள் குறித்து கேட்டறிந்தார் பின்னர் நாங்கள் பல விட யங்கள் குறித்து பேசினோம், எனவும் இந்தியாவின் மிகச்சிறந்த அணித்தலைவர் சௌரவ் கங்குலி, கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை தலைவராக பணியாற்றும் வேளையிலும் அவர் பல விடயங்களை சாதிப்பார் என முஸ்தாக் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்த காலங்களில் இரு அணிகள் மோதும் போது மிகுந்த ஆர்வத்துடன் விளையாடுவோம். ரசிகர்களும் தங்கள் பிரசன்னத்தை வெளிப்படுத்துவார்கள். சில புரிந்துணர்வின்மைகளும் காணப்படும். நானும் ஒரு பகுதியாக இருந்திருக்கின்றேன். அப்படிப்பட்ட அவர் நாற்பது நிமிடங்களில் எனது மனதை வென்றார் என சக்லைன் முஸ்தாக் தெரிவித்துள்ளார்.

# அதிகமான பரிசுத்தொகை



2020ஆம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பமாகும் அவுஸ்திரேலிய பகிரங்க கிராண்ட்ஸ்லாம் தொடருக்கான பரிசுத் தொகை எப்பொழுதும் இல்லாத அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் அமெரிக்க டொலரில் 49.1 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் இந்த பரிசுத்தொகை, யானது கடந்த தொடரைவிட 13.6 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஆடவர், மகளிர் பிரிவு சம்பியன்களுக்கு 4.12 மில்லியன் டொலர் பரிசுத் தொகை என்பது குறைவாக அதிகரிக்கப்பட்ட தொகையாக உள்ளதுடன் மாறாக இறுதிச்சுற்றுக்கு முன்னைய சுற்றுக்களில் பங்கேற்கும் வீரர்களுக்கு பரிசுத் தொகை சற்றுக் கூடுதலாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி முதல் சுற்றிலேயே தோற்று வெளியேறும் வீரர்களுக்கு 90 ஆயிரம் அவுஸ்ரேலிய டொலரும் 2வது சுற்றில் தோற்று வெளியேறும் வீரர்களுக்கு ஒரு இலட்சத்து 28 ஆயிரம் டொலரும் பரிசுத் தொகை வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.



# நடுவருடன் காரசார வாக்குவாதம்

நியுசிலாந்திற்கு எதிராக மெல்பேர்னில் ஆரம்பமாகியுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டியில் நடுவரின் தீர்ப்பிற்கு எதிராக அவுஸ்திரேலியஅணியின் முன்னாள் தலைவர் ஸ்மித் வாக்குவாதத்தில் ஈடுபட்டமை சர்ச்சையை உருவாக்கியுள்ளது. முதல் டெஸ்டின் 26 வது ஓவரில் நெய்ல் வாக்னரின் சோர்ட் பிச் பந்தினை விளையாட முயலாத ஸ்மித் ஆனால் லெக்பையினை பெறுவதற்காக ஓட முயன்றார். எனினும் அந்த பந்தை டெட்போல் என அறிவித்த நடுவர் நைஜல் லோங் ஸ்மித்தினை அங்கேயே நிற்குமாறு கேட்டுக்கொண்டார். எனினும் மதியநேர இடைவேளைக்காக அணியினர் ஓய்வறைகளிற்கு திரும்பிக்கொண்டிந்தவேளை ஸ்மித் நடுவருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். ஸ்டீவ் ஸமித்தின் இந்த நடவடிக்கை சமூக ஊடகங்களில் கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதேவேளை சேன்வோர்ன் ஸ்டீவ் ஸ்மித்திற்கு ஆதரவாக கருத்து வெளியிட்டுள்ளார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில், பந்திலிருந்து தப்புவதற்கே ஸ்மித் முயன்றார். நடுவரின் முடிவு பிழையானது என சேன்வோர்ன் தெரிவித்துள்ளார். நடுவர்களிற்கு கிரிக்கெட் விதிமுறை அடங்கிய நூலை அனுப்ப வேண்டியுள்ளது என குறிப்பிட்டுள்ள அவர் நடுவர் அந்த பந்தை அர்த்தப்படுத்திய விதம் பிழையானது என்பதால் ஸ்மித் கோபமடைவதற்கான காரணங்கள் உள்ளன எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் பவுன்சர் பந்திலிருந்து நீங்கள் தப்ப முயன்றால் அது உங்கள் உடலின் எந்த பாகத்தில் பட்டாலும் நீங்கள் ஓட்டமெடுக்க ஓடலாம் என்பதே விதிமுறை என சேன்வோர்ன் தெரிவித்துள்ளார்.


# அடுத்த தெற்காசியப் போட்டியில் 100 பதக்கங்கள் இலக்கு





14ஆவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் 100 தங்கப்ப தக்-கங்களை வென்றெடுப்பதே எமது அடுத்த இலக்கு என்றும், அதற்கான தயார்ப்படுத்தல்களில் முதலில் பயிற்சியாளர்கள் குறித்த கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் தம்மிக்க முத்துகல தெரிவித்தார்.

நேபாளத்தில் அண்மையில் நடைபெற்று முடிந்த 13ஆவது தெற்காசிய விளையாட்டு விழாவில் இலங்கை 40 தங்கப்பதக்கங்களை வென்றது. இந்நிலையில் எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு 14 ஆவது தெற்காசிய விளையாட்டு விழாவை நடத்தும் உரிமையை பாகிஸ்தான் பெற்றெடுக்க தமது இலக்கை நிர்ணயித்துள்ளது. நடைபெற்று முடிந்த தெற்காசிய விளையாட்டு விழா குறித்தும் எதிர்கால இலக்கு குறித்தும் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட விளையாட்டுத்துறை அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் தம்மிக்க முத்துகல, அடுத்த தெற்காசிய விளையாட்டு விழாப் போட்டிகளில் 100 தங்கப்பதக்கங்களை வென்றெடுப்பதே எமது அடுத்த இலக்காக உள்ளது. அதற்கு வீர, வீராங்கனைகளுக்கு முதலாவதாக சிறந்த பயிற்சியாளர்களை நாம் நியமிக்க வேண்டும். அதற்கான விசேட வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளோம்.

கடந்த முறை நடைபெற்ற 12வது தெற்காசிய விளையாட்டு விழாவில் இலங்கை கரப்பந்தாட்ட அணி வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தது. ஆனால் இம்முறை வெளிநாட்டு பயிற்சியாளரின் கீழ் பங்கேற்ற இலங்கை கரப்பந்தாட்ட அணி பெரிதாக சோபிக்கவில்லை. அதனால் பயிற்சியாளர்கள் குறித்து நாம் கவனம் செலுத்தவுள்ளோம். அதனால் வீரர்களுக்கு முன்னதாக நாம் பயிற்சியாளர்களை தயார்ப்படுத்த வேண்டும். அவர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும். வெளிநாட்டு பயிற்சியாளரை கொண்டு வந்து நம் நாட்டு பயிற்சியாளர்களை மேம்படுத்தவும், எமது பயிற்சியாளர்களை வெளிநாடுகளுக்கு தயார்ப் ப-டுத்தவும் நாம் புதிய வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம். அதற்காக கருவூலத்திடமிருந்து 50மில்லியன் பணத்தை கோரியுள்ளோம் என தெரிவித்தார்.







இந்தப் பத்திரிகை இல.10,வில்வம் தெரு, கொழும்புத்துறை முகவரியிலுள்ள
நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தால் 05.01.2020 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.